# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 328 ஐப்பசி 03ஆம் நாள் வெள்ளிக்கிழமை 20 ஒக்ரோபர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20
பக்கங்கள்: 28


## மகாநாயக்கர்களை தொடர்புபடுத்தி பொய்ச் செய்தி வெளியிடாதீர்கள்

### இப்படி ஊடகங்கள் மீது பாய்கிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஒக். 20

மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடங்களினது மகாநாயக்க தேரர்கள் பங்கேற்காத கூட்டத்திலேயே புதிய அரசமைப்புத் தேவையில்லை என்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. ஆனால் ஊடகங்கள், இரு பீடங்களினதும் மகாநாயக்க தேரர்களால் அவ்வாறான முடிவு எடுக்கப்பட்டதாக இன்று(நேற்று) செய்திகளை வெளியிட்டுள்ளன என்று குற்றஞ்சாட்டிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மக்களைத் தவறாக வழிநடத்துவது யார் என்றும் கேள்வி எழுப்பினார்.

புதிய அரசமைப்புத் தொடர்பாக இலங்கை ஊடகக் கல்லூரி உள்பட மூன்று நிறுவனங்கள் மேற்கொண்டிருந்த ஆய்வுகள் தொடர்பான அறிக்கையைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் கையளிக்கும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் உரையாற்றிய தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது.

இன்று(நேற்று) அனைத்து ஊட »25

## உண்மைக்கு மதிப்பளித்து பேனாவை பயன்படுத்துக

### அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஒக்.20

ஊடகவியலாளர்கள் சரியானவற்றைத் தெரிவு செய்து உண்மைக்கு மதிப்பளித்துத் தமது பேனா முனை »25

முச்சந்தி முரளி



அப்ப முதல்ல இந்தக் கதையைக் கண்டுபிடிச்ச சனத்துக்கெல்லோ பரிசு குடுக்கவேணும்...

## கோத்தபாய பற்றிய ஊகங்கள் பொய்யாகின

கொழும்பு, ஒக். 20

வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டிருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச நாட்டுக்கு நேற் »25

## மாணவி வித்தியா கொலையாளிகளை கண்டுபிடித்தோருக்கு பணப் பரிசில்கள்

கொழும்பு, ஒக். 20

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்த விசாரணையாளருக்கு சிறப்புப் பணப் பரிசில்கள் நேற்று வழங்கப்பட்டன.

சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரட்ணாயக்க இவற்றை »25

## சைட்டத்தை மூட முடியாது அரசு திட்டவட்ட அறிவிப்பு

### அரச தலைவர் திங்கட்கிழமை தீர்வு தருவார் எனவும் தெரிவிப்பு »25

# தேரர்களை சிலர் தவறாக வழி நடத்தல்

### இப்படிச் சொல்கிறார் மைத்திரி பிளவுபடாத நாட்டுக்குள் தீர்வு என்பதிலும் உறுதி

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 20

மகாநாயக்க தேரர்களையும் பௌத்த பீடங்களையும் ஒரு குழு தவறாக வழிநடத்துகின்றது. புதிய அரசமைப்புத் தொடர்பில் அவர்களுக்குத் தவறான தகவல்கள் வழங்கப்படுகின்றன என்று நேற்றுத் தெரிவித்தார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

நாங்கள் அதிகாரப் பகிர்வு என்ற கோட்பாட்டுக்கு அமைய பிளவுபடாத நாட்டுக்குள் தீர்வைக் காண்பதில் உறுதியாக உள்ளோம். நாங்கள் அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டை ஏற்கவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேசிய தீபாவளி தின நிகழ்வு அரச தலைவர் மாளிகையில் நேற்றிரவு நடைபெற்றது. இங்கு உரையாற்றும்போதே அரச தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். »25

## ஒளியைத் தேடுகின்றனர் தமிழ் மக்கள்: சம்பந்தன்



»25

கல்வியியல் கல்லூரியிலிருந்து வெளியேறி நியமனம் பெறும்

## கணித, விஞ்ஞான ஆசிரியரில் ஒருவர்கூட வடக்கில் இல்லை

யாழ்ப்பாணம், ஒக். 20

வடக்கில் கணித, விஞ்ஞான பாட ஆசிரியர்கள் பலருக்குத் தேவை இருக்கின்றபோதும் கல்வியியற் கல்லூரிகளிலிருந்து வெளியேறி இன்று நியமனம் பெற்றுக்கொள்பவர்களில் இருந்து இந்தப் பாடங்களுக்கு ஒரு ஆசிரியர்கூட வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழான பாடசாலைகளில் நியமிக்கப்பட வில்லை.

கல்வியியற் கல்லூரிகளில் கற்கைநெறி முடித்து வெளியேறும் ஆசிரியர்களுக்கு அலரிமாளிகையில் வைத்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இன்று நியம »25

## அரசியல் கைதிகள் விவகாரம் நேற்றும் எந்த முடிவுமில்லை

யாழ்ப்பாணம், ஒக். 20

அநுராதபுரம் சிறையில் உணவு ஒறுப்புப் போராட்டம் நடத்திவரும் அரசியல் கைதிகள் தொடர்பில் சட்டமா அதிபரும், நீதி அமைச்சரும் வெளிநாட்டிலிருந்து வந்த பின்னரே தீர்க்கமான பதிலை வழங்க முடியும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுத் தெரிவித்தார். கைதிகளின் உறவினர்களை நேரில் சந்தித்துப் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

அரச தலைவருடனான சந்திப்புத் திருப்தியாக - நம் »04

## பௌத்த பீடங்கள் எதிர்த்தாலும் அரசமைப்பு பணி தொடரும்

யாழ்ப்பாணம், ஒக். 20

புதிய அரசமைப்புத் தேவையில்லை என்று பௌத்தபீடங்கள் அறிவித்துள்ள நிலையிலும், புதிய அரசமைப்பு முயற்சியை முன்னெடுத்துச் செல்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது. முன்னரே திட்டமிட்டவாறு எதிர்வரும் »25



முல்லை. கடலில் மூழ்கிய

## 2ஆவது இளைஞனின் சடலமும் நேற்று மீட்பு

முல்லைத்தீவு, ஒக்.20

முல்லைத்தீவுக் கடலில் குளிக்கச் சென்று காணாமற்போயிருந்த இளைஞனின் உடல் நேற்று அதிகாலை மீட்கப்பட்டது. மணற்குடியிருப்பைச் சேரந்த அமல்ராஜ் டினோஜன் (வயது 17) நண்பர்களுடன் குளிக்கச் சென்ற சமயம் அலையில் அள்ளுண்டு காணாமற்போயிருந்தார். அவருடன் காணாமற்போயிருந்த கிளோட்டஸ் விநோதன் குரூஸ் (வயது- 18) நேற்றுமுன்தினமே சடலமாக »25

## போராட்டம் கைவிடப்படாது

யாழ்ப்பாணம், ஒக். 20

அநுராதபுரத்திலிருந்து வவுனியாவுக்கு தமது வழக்கு மாற்றப்படும் வரையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று, அரசியல் கைதிகள் நேற்றிரவு தெரிவித்தனர். »04


உங்கள் சேமிப்பிற்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம்

வர்தன எக்ஸ்றீம் சேவர்

உங்களுடைய சேமிப்பு ரூ. 1000/- ஆக இருந்தாலும்
அதிகபட்ச வட்டியினை
பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணி நேர அழைப்பு மையம் : 011 2350000
இச்சலுகைகளை இன்றே அனுபவித்திட அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு விரைந்து வர்தன எக்ஸ்றீம் சேவர் கணக்கினை ஆரம்பியுங்கள்.
www.dfcc.lk

DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

## பிரதேச செயலருக்கு எதிராக வெலிமடையில் ஆர்ப்பாட்டம்

வெலிமடை அம்பகஸ் தோவ் நகரில் உடப்புஸ்ஸலாவை வெலிமடை பிரதான வீதியை மறித்து மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
ஊவா பரணகமை குமாரபட்டி கிராம சேவகர் பிரிவிலுள்ள வல்கணடிய குளத்தின் எல்லையில் சுமார் 100 வருடங்களுக்கும் அதிக காலமாக வசித்து வரும் தம்மை பிரதேச செயலரின் தன்னிச்சையான தீர்மானத்தின்படி வெளியேற்ற முற்படுகின்றமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே மக்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.
நீதிமன்ற உத்தரவுக்கு அமைய அந்தப் பகுதியில் உள்ள 4 வீடுகளை மாத்திரம் குறித்த பகுதியை விட்டு அகற்றுவதற்கு அனுமதி கிடைத்துள்ளது.
எனினும், பிரதேச செயலாளர் நீதிமன்ற அனுமதியற்ற மேலும் சில வீடுகளை அகற்றியுள்ளதாகவும், இதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டவர்கள் தெரிவித்தனர். (ரி2)

## ஜெயலத்தின் விளக்கமறியல் நீடிப்பு

கொழும்பு,ஒக்.20
மருத்துவ பீட மாணவ செயற்குழு ஒருங்கிணைப்பாளர் ரயன் ஜெயலத்தின் விளக்கமறியல் எதிர்வரும் 23ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் ரயன் ஜெயலத்தை நேற்று முற்படுத்தப்பட்டபோதே நீதிவான் இவ்வாறு உத்தரவிட்டார்.
கடந்த ஜூன் மாதம் 21ஆம் திகதி, சுகாதார அமைச்சினுள் அத்துமீறி நுழைந்து, அங்குள்ள சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தார் என்று ரயன் ஜெயலத் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது. (ம-ரி4)



மீள்குடியமர்ந்த மக்களுக்கான

# நோர்வேயின் உதவிகளை மேலும் அதிகரிக்கவேண்டும்

### தூதுவர் தோர்ப் ஜோர்ன் கௌசடாவிடம் யாழ். மாவட்டச் செயலர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஒக்.20
வலி. வடக்கு மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்க ஒத்துழைப்பது போன்று ஏனைய பிரதேச மக்களுக்கும் வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கு ஒத்துழைக்க வேண்டும்.
இவ்வாறு இலங்கைக்கான நோர்வேத் தூதர் தோர்ப் ஜோர்ன் கௌசடாதிடம் வேண்டுகோள் விடுத்தார் யாழ்.மாவட்டச் செயலர் நா.வேதநாயகன்.
தோர்ப் ஜோர்ன் கௌசடாத் தலைமையிலான குழுவினர் நேற்று யாழ். மாவட்டச் செயலரைச் சந்தித்துக் கலந்துரையாடினர். மாவட்டத்தின் அபிவிருத்திகள், மீள்குடியமர்வு, உட்கட்டமைப்பு என்பன தொடர்பில் அதில் ஆராயப்பட்டது. அதன்போதே யாழ். மாவட்டச் செயலர் இவ்வாறு வேண்டுகோள் விடுத்தார்.
"யாழ். மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு மக்களுக்கும், அண்மையில் மீள்குடியர்வு செய்யப்பட்ட ஏனைய பிரதேச மக்களுக்கும் வாழ்வாதார உதவிகளை வழங்க வேண்டிய தேவை அதிகமாக உள்ளது. அவர்களுக்கு உதவ முன்வர வேண்டும்." என்று யாழ். மாவட்டச் செயலர் குறிப்பிட்டார்.
"பாதிக்கப்பட்ட மக்களுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவது தொடர்பில் சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படும். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் உருவாக்கப்படவேண்டும்." என்று தூதுவர் தோர்ப் ஜோர்ன் கௌசடா குறிப்பிட்டுள்ளார்.
அண்மையில் மீள்குடியமர்த்தப்பட்ட மக்களுக்கான வாழ்வாதாரங்கள் உட்படப் பல முக்கிய விடயங்கள் இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டன. விடுவிக்கப்பட வேண்டியுள்ள காணிகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. யாழ். மாவட்டத்தில் வேலை வாய்ப்பற்ற இளையோர்கள் தொடர்பான விவரங்களையும் தூதுவர் தலைமையிலான குழு கேட்டறிந்தது.
புலம்பெயர் தமிழ் மக்கள் இங்குள்ளவர்களுக்கு வழங்கும் உதவிகள் தொடர்பாகவும் தோர்ப் ஜோர்ன் கௌசடா கேட்டறிந்து கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சந்திப்பின் பின்னர் தூதுவர் வலி.வடக்கில் மயிலிட்டித் துறைமுகப் பகுதி, அண்மையில் மீள்குடியமர்தப்பட்ட பகுதி என்பவற்றுக்கு நேரில் சென்று ஆராய்ந்தார். அங்குள்ள மீனவக் குடும்பளைச் சந்தித்து அவர்களின் தேவைகள் தொடர்பாகவும் கேட்டறிந்து கொண்டார். (ம-101,106)

## தமிழர் கொலை : குற்றவாளிக்குத் தூக்கு

கொழும்பு ,ஒக்.20
கொழும்பு கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் நடந்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய குற்றவாளிக்கு தூக்குத் தண்டனை வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.
கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆர். ஹெய்யன்துடுவ நேற்று இந்த தண்டனைத் தீர்ப்பை வழங்கினார்.
கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் கடந்த 2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் மகேந்திரன் இளங்கோவன் என்பவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மொஹமட் நசீர் என்பவருக்கு எதிராக சட்டமா அதிபர் இந்த வழக்கை தாக்கல் செய்தார்.
நீண்ட வழக்கு விசாரணைகளுக்குப் பின்னர், குற்றவாளிக்கு எதிராகச் சுமத்தப்பட்டிருந்த குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதால் குற்றவாளிக்குச் தூக்குத் தண்டனை வழங்கித் தீர்ப்பளிப்பளிக்கப்பட்டது. (ரி5)



## வரலாற்றுச் சின்னங்களை அழிப்பதை நிறுத்துங்கள்

### மட்டு. கிராம மக்கள் வேண்டுகோள்

மட்டக்களப்பு,ஒக்.20
மட்டக்களப்பு, வாகரைப்பிரதேசசெயலாளர் பிரிவிலுள்ள ஆலங்குளம் கிராமத்திலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் காணப்படும் பூர்வீக வரலாற்றுச் சின்னகளை அழிப்பதையும், சேதம் விளைவிப்பதையும் தடுத்து நிறுத்த வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக ஆலங்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் குமாரசிங்கம் கேதீஸ்வரன் தெரிவித்ததாவது, ஆலங்குளம் கிராமத்திலும் அதனை அண்டிய பிரதேசங்களிலும் தொல்லியல் வரலாற்றுச் சான்றுகளாக கருங்கல்லால் செதுக்கிச் செய்யப்பட்ட நடு கற்கள் காணப்படுகின்றன. அந்தப் பிரதேசத்தில் வண்ணாத்தி என்ற தமிழ் சிற்றரசி ஆட்சி செலுத்தியதாக நம்பப்படுகின்றது. அந்தப்பிரதேசங்களில் செதுக்கப்பட்ட கருங்கற்களைக் கொண்டு ஆற்றின் குறுக்கே அமைக்கப்பட்ட நடுகற்கள் மற்றும் சோதையன்கள் என்று நம்பப்படும் குளக் கட்டுக்கள் என்பன காணப்படுகின்றன.
வண்ணாத்தி என்ற புராதன சிற்றரசியின் பெயருடைய பாலத்தில், நேர்த்தியாகச் செதுக்கப்பட்ட கருங்கற் தூண்கள் நீர்மட்டத்திலிருந்து சுமார் 10 அடி உயரமானவை. இத்தகைய கருங்கற் தூண்கள் நடப்பட்டுள்ள எந்த இடத்தை நோட்டமிட்டாலும் அந்த இடத்தின் சூழமைவுக்குள் நீர்த்தடாகம் அமைக்கப்பட்டிருந்ததற்கான தடயங்களைக் காணக்கூடியதாக இருக்கும்.
இவ்வாறான தொல்லியல் பொருட்கள் சிலரால் பிடுங்கி குவிக்கப்பட்டுள்ளன. சோதையன் கட்டுக்குளம் பெரிய இயந்திரங்களைக் கொண்டு இருந்த இடம் தெரியாமல் சமப்படுத்தப்பட்டுள்ளது. 'சோதையர்கள்' ஆண்ட இடம் பேய்க்கல் என்றும் சொல்வார்கள்.
இவற்றைத் தடுத்து நிறுத்துவதற்கு அதிகாரிகள் ஏன் முன்வரவில்லை என்பது மர்மமாக இருக்கின்றது. இது தொடர்பாக உயர்மட்ட அதிகாரிகள் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என கிராம மக்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கின்றேன்-என்றார். (ரி5,46)



## கொக்கட்டிச்சோலை விபத்தில் ஒருவர் சாவு

மட்டக்களப்பு,ஒக்.20
கொக்கட்டிச்சோலையில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
கடுக்காமுனைப்பகுயிலிருந்து சென்ற உழவு இயந்திரமும் அம்பலத்தடிபகுதியிலிருந்து வந்த மோட்டார் சைக்கிளும் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.
விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் பலத்த காயங்களுக்குள்ளான நிலையில் மகிழடித்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
அங்கு, சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
அம்பிளாந்துறையைச் சேர்ந்தவரே உயிரிழந்தார்.
இது தொடர்பிலான விசாரணைகளை கொக்கட்டிச்சோலைப் பொலிஸார் மேற்கொண்டனர். (ரி4)

# நகைகளையும் டொலரையும் கடத்த முற்பட்டவர்கள் கைது

கொழும்பு,ஒக்.20
தங்க நகைகளைகளையும் அமெரிக்க டொலரையும் கடத்தியவர்கள் நேற்றுக் கட்டுநாயக்க விமானநிலையத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டனர்.
சிறிலங்கன் எயார்லைன்ஸ் விமானத்தில் பணிபுரிபவரே தங்கநகைகளுடன் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.
சவூதியிலிருந்து இலங்கைக்கு வந்த ஐம்பது வயதுடைய இவர், விமான நிலையத்தை விட்டு வெளியேற முயற்சித்தார். வழக்கமாக நடத்தப்படும் பரிசோதனைகளில் இவர் மீது சந்தேகம் கொண்ட சுங்கத் துறையினர் அவரை முழுமையாகப் பரிசோதனை செய்தனர்.
அந்த நபரின் உடலிலும் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஒரு அங்கியிலும், காலில் அணிந்திருந்த சிறப்புப் பட்டியிலுமாக மொத்தமாகச் சுமார் ஐந்தரைக் கிலோ தங்க நகைகளை இவர் மறைத்து வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.
கைப்பற்றப்பட்ட நகைகளின் பெறுமதி இரண்டரைக் கோடி ரூபாவுக்கும் அதிகம் என சுங்கத் துறையினர் தெரிவித்தனர்.
இதேவேளை, சுமார் ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான அமெரிக்க டொலர் நாணயத் தாள்களை வெளிநாட்டுக்குக் கடத்திச் செல்ல முற்பட்ட மலேசிய நாட்டவர் ஒருவரையும் சுங்கத் துறையினர் கைது செய்தனர். (ம-ரி4)

# சைட்டத்துக்கு எதிராக துண்டறிக்கைகள்

கொழும்பு,ஒக்.20
மாலபே சைட்டம் மருத்துவக் கல்லூரிக்கு எதிராக துண்டறிக்கைகளை விநியோகிக்கும் நடவடிக்கை நேற்றுக் கொழும்புத் தொடருந்து நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்றது.
சைட்டத்தை இல்லாது செய்யும் இறுதிப் போராட்டத்துக்காக ஒன்று திரள்வோம் என்ற தொனிப் பொருளில் இந்த நடவடிக்கை இடம்பெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.
இதன்போது கருத்து தெரிவித்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலாளர் மருத்துவர் ஹரித அளுத்கே, நாடு இன்று சைட்டத்தைத் தோற்கடிக்கும் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது என்று கூறினார்.
இதேவேளை மாலபே சைட்டம் மருத்துவக் கல்லூரியை மூடும் எண்ணம் இல்லை என்று உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். நாடாளுமன்றில் நேற்று உரையாற்றிய லக்ஸ்மன் கிரியெல்ல அந்தக் கல்லூரியை மூடாமல் நிலையான தீர்வொன்றை வழங்குவதற்கு எதிர்பார்க்கின் றோம் என்று கூறினார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி-4)

# இளைஞர்கள் மோதல் ஒருவருக்கு படுகாயம்

அச்சுவேலி.ஒக்.20
இளைஞர்களிடையே ஏற்பட்ட கைகலப்பின்போது ஒருவர் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் அச்சுவேலி ஆவரங்கால் சந்தைக்கு அருகில் நேற்று நடந்தது. அதே பகுதியைச் சேர்ந்த செல்லத்துரை ரஜீவன் (வயது -32) என்பவரே காயத்துக்கள்ளான நிலையில் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக, யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.
பழைய பகைமையே காரணம் எனக் கூறப்படுகிறது.
சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி2, 11)

# சொந்த வாழ்விடங்களுக்கு மக்கள் திரும்புவது முக்கியம்

## இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் தோர்ப் ஜோர்ன் கௌசடா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.20
மக்கள் தங்கள் சொந்த வாழ்விடங்களுக்கு மீள்வது முக்கியமானது. அதனாலே காணிகள் விடுவிக்கப்பட்ட நாள்தொட்டு நோர்வே அரசு மீள்குடியமர்ந்த மக்களுக்கான வாழ்வாதார உதவிகளையும், மீள்குடியமர்வை வசதிப்படுத்தும் உதவிகளையும் செய்து வருகின்றது.
இவ்வாறு தெரிவித்தார் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் தோர்ப் ஜோர்ன் கௌசடா.
பலாலி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடத் திறப்பு விழா நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்ட தூதுவர் தோர்ப் ஜோர்ன் கௌசடா கட்டடத்தைத் திறந்து வைத்து உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கடந்த முறை தெல்லிபழைக்கு வந்தபோது கண்டவற்றை ஒப்பிடும்போது மாற்றங்களைக் கண்டுள்ளேன். சமூகமாக நீங்கள் ஒன்றுபட்டுள்ளீர்கள். உங்களுக்குள் ஒருங்கிணைந்து முன்னேறுகிறீர்கள். அவை பயனுள்ள திசைவழிகள்.
மக்கள் தங்கள் சொந்த வாழ்விடங்களுக்கு மீள்வது முக்கியமானது. அதனாலே காணிகள் விடுவிக்கப்பட்ட நாள்தொட்டு நோர்வே அரசு மீள்குடியமர்ந்த மக்களுக்கான வாழ்வாதார உதவிகளையும், மீள்குடியமர்வை வசதிப்படுத்தும் உதவிகளையும் செய்து வருகின்றது.
தெல்லிப்பழை, கோப்பாய் பகுதிகளிலும் திருகோணமலையில் சம்பூரிலும் மீள்குடியமர்ந்த ஆயிரத்து 400 குடும்பங்களுக்கான உதவிகளை நாம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் (யுஎன்டிபி) துணையோடு வழங்கியுள்ளோம்.
2015ஆம் ஆண்டு காணிகள் விடுவிக்கப்பட்டு மக்கள் மீள்குடியமர ஆரம்பித்தது முதல் நோர்வே அரசு 300 மில்லியன் ரூபாவுக்கு மேல் உதவித் தொகையாக வழங்கியுள்ளது.
தெல்லிப்பழையில் நோர்வேயின் உதவிகள் பாதிக்கப்பட்ட பெண்களை நோக்காகக் கொண்டு வழங்கப்படுகின்றன. நீங்கள் சொந்த இடத்துக்குத் திரும்பியிருப்பது மீளிணக்கத்துக்கு முக்கியமான அடையாளமாகும். போருக்குப் பிந்தைய சூழலில் வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவது சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் அடிப்படையானதாகும். போருக்குப் பிந்தைய நிலைமைகளில் இயற்கையான வளங்களை மையப்படுதிய வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதானது உணவுப் பாதுகாப்பு, தொழில் வாண்மை போன்றவற்றுக்கு முக்கியமானதாகும்.

> “ மீள்குடியமர ஆரம்பித்தது முதல் நோர்வே அரசு 300 மில்லியன் ரூபாவுக்கு மேல் உதவித் தொகையாக வழங்கியுள்ளது.

நோர்வே இலங்கையில் நீண்டகாலமாக அபிவிருத்தி உதவித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. சீநோர் உதவித் திட்டத்தின் கீழ் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அதில் காரைநகர் மற்றும் குருநகரில் வள்ளங்கள், மீன்பிடிவலைகள் செய்வதற்கான தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டன.
இலங்கை அரசின் அழைப்பில் தற்போது நோர்வே மீன்பிடித்துறையை அபிவிருத்தி செய்வதற்கும், வினைத் திறனாக மாற்றுவதற்குமான உதவிகளைச் செய்து வருகின்றது. தேசிய மீன்பிடிக்‌ கொள்கையை உருவாக்குவதற்கான தொழில்நுட்ப உதவிகளையும், இலங்கையின் மீன்வளத்தைக் கணக்கெடுப்பதற்கான உதவிகளையும் நோர்வே செய்கின்றது. இவை இலங்கையின் மீன்பிடித்துறை மேம்படுத்தும் நோக்கில் செய்யப்படுகின்றன.
பலநோக்கு கூட்டுறவுக் சங்கக் கட்டடத்தைத் திறந்து வைப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன். இதன் துணையுடன், உங்கள் கடின உழைப்புடனும் வளமான சமூகத்தை உருவாக்குவீர்கள் என்று நம்புகின்றேன் - என்றார். (ற-101)

# தாஜுதீனின் கொலை: சரணடைந்த மருத்துவ அதிகாரி பிணையில் விடுவிப்பு

கொழும்பு,ஒக்.20
றக்பி வீரர் தாஜுதீனின் கொலை தொடர்பில் சந்தேகிக்கப்படும் முன்னாள் கொழும்பு பிரதான நீதிமன்ற சட்ட மருத்துவ அதிகாரி மருத்துவர் ஆனந்த சமரசேகர கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தின் முன்னிலையில் நேற்றுச் சரணடைந்தார்.
அவர் விசாரணைகளை அடுத்து தலா 5 லட்சம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையில் வெளியே செல்ல அனுமதிக்கப்பட்டார்.
உயிரிழந்த வசீம் தாஜு தீனின் உடற்பாகங்கள் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டிருந்தது. அவர் நீதிமன்றில் முன்னிலையாகாததால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.
இந்தச்சம்பவம் தொடர்பில் ஆனந்த சமரசேகரவைக் கைது செய்ய முடியும் என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றத்தில் தெரிவித்திருந்த நிலையில் அவர் சரணடைந்தார். (ற-ரி2)



# வீரகத்திப்பிள்ளை பாடசாலையின் ஆசிரியர் தின நிகழ்வுகள் நேற்று

தொண்டமானாறு,ஒக்.20
தொண்டமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியால ஆசிரியர் தின விழா நேற்றுக் காலை இடம்பெற்றது.
பாடசாலை பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் மாணவர் களும் இணைந்து ஆசிரியர் தின நிகழ்வை ஏற்பாடு செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. ஆசிரியர்கள் மாணவர்களால் அழைத்துவரப்பட்டு மாலைகள் அணிவிக்கப்பட்டு மதிப்புறுத்தப்பட்டனர். அதனையடுத்து அன்பளிப்புப் பொருள்களும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டன.
நிகழ்வில் ஆசிரியர்கள் மாணவர்கள், பழைய மாணவர்கள் பாடசாலைச் சமூகத்தினர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி2,26)

# வெளிநோயாளர் பிரிவு மாந்தையில் திறப்பு



முல்லைத்தீவு,ஒக்.20
முல்லைத்தீவு மாந்தை கிழக்குப் பகுதி மருத்துவமனையில் புதிதாக அமைக்கப்பட்ட வெளிநோயாளர் பிரிவு நேற்றுத் திறக்கப்பட்டது.
வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் குணசீலன் கட்டடத்தைத் திறந்தார்.
நடுவண் அரசின் சுதந்திர சுகாதார சேவையை வலுப்படுத்தும் நோக்கில், மலேரியா, எயிட்ஸ் போன்ற நோய்களை அழித்தொழிப்பதற்கான திட்டத்தின் கீழ் 26 மில்லியன் ரூபா செலவில் வெளி நோயாளர் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
இந்த நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர், சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடமாகாண அமைச்சர், மருத்துவ அதிகாரி, மருத்துவ உத்தியோகத்தர்கள், மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-ரி2)

# சவுதி அரசால் அமைக்கப்பட்ட வீடுகள் விரைவில் கையளிப்பு

## அக்கரைப்பற்று பிரதேச செயலர் தகவல்

அம்பாறை, ஒக். 20
தகுதியானவர்கள் பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டு சவுதி அரசின் நிதியுதவியில் அம்பாறை மற்றும் நுரைச்சோலைப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள வீடுகள் விரைவில் கையளிக்கப்படும்.
இவ்வாறு அக்கரைப்பற்றுப் பிரதேச செயலர் ஏ.எம். அப்துல் லத்திப் நேற்றுத் தெரிவித்தார்.
அந்தப் பகுதிகளில் அமைக்கப்படும் வீடுகளை மக்களிடம் கையளிப்பது தொடர்பில் நேற்றுக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
வீடுகளைப் பெறத் தகுதியானவர்களை இனங்காணும் நோக்கில் மேலதிக அரச அதிபர் கே.விமலநாதன் தலைமையில் உரிய அதிகாரிகளைக் கொண்டு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படும். அதில் தெரிவு செய்யப் படுபவர்களுக்கு இந்த வீடுகள் மிக விரைவில் வழங்கப்படும்.
இதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் மாதம் முதலாம் வாரம் அளவில் இடம்பெறவுள்ளது. நேர்முகத் தேர்வுக்கான கடிதங்கள் மக்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.
சவுதி அரேபிய அரசின் நிதி உதவியுடன் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அமைக்கப்பட்ட 500 வீடுகளை கையளிப்பதற்கான ஆயத்தங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தில், குறிப்பிட்ட ஒரு சமூகத்தாருக்கு மாத்திரம் வீடுகள் வழங்கப்படுவதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.
இதற்கமைவாக, உயர் நீதிமன்றம் மூன்று இனத்தாருக்கும் விகிதாசார ரீதியாகப் பகிர்ந்தளிக்கும்படி தீர்ப்பு வழங்கி இற்றைக்கு 8 வருடங்கள் கடந்துள்ளன. இந்த வீடுகள் யாவும் பூட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.
பகிர்ந்தளிப்பில் ஏற்பட்ட பிரச்சினையால் ஏற்பட்ட கால தாமதத்தால் அங்கு அமைக்கப்பட்ட வீடுகள் யாவும் தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்துள்ளன.
வீடுகளில் இருந்த பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்டுள்ளன.
வீடுகளை திருத்தம் செய்து அந்த வீடுகளை மூன்று இனத்தாருக்கும் விகிதாசார ரீதியாகப் பகிர்ந்து மக்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது- என்றார். (ற-ரி2)



மட்டக்களப்பு அட்டாளைச்சேனை சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு உட்பட்ட பாடசாலை அதிபர்கள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு டெங்கு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயத்தில் நேற்று நடத்தப்பட்டது. (ற-ரிஉ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிக்கை தரும் விதத்தில் அமைந்துள்ளதாக உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அநுராதபுரம் சிறையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், ரெலோவின் கொள்கைப் பரப்புச் செயலர் கணேஸ் வேலாயுதம் உள்ளிட்டோர் அரச தலைவரை அவரது அலுவலகத்தில் சந்தித்துப் பேசினர்.

இந்தப் பேச்சில், சட்டம் ஒழுங்கு அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், அமைச்சர் சுவாமிநாதன், அரச தலைவரின் செயலர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

வடமாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட நிலைமைகள் தொடர்பாக விரிவானதொரு விளக்கமளித்தார். அதனைச் செவிமடுத்த அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன, இதனை விளங்கிக் கொள்வதாகக் குறிப்பிட்டார்.

"மகிந்த அரசு 12 ஆயிரம் விடுதலைப் புலிகளுக்கு மறுவாழ்வு வழங்கி சமூகமயப்படுத்தியது. தற்போதைய நிலையில் நல்லிணக்கம் தொடர்பாக கவனம் செலுத்தப்படுகின்றபோது, வெறுமனே 117 பேருக்கு பொது மன்னிப்பு வழங்கி விடுவிப்பதென்பது பெரியதொரு விடயமல்ல. அவ்வாறான செயற்பாடானது நிச்சயமாக நல்லிணக்கத்தின் மிகப்பெரும் அடையாளமாகவே இருக்கும். ஏற்கனவே 24 பேருக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. அவர்களை அரச தலைவர் பொதுமன்னிப்பில் விடுவிக்கலாம்.

மூன்று பேர் தமது வழக்குகளை மாற்றுமாறு கோரியே உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். அவர்கள் தமது வழக்குகளை நிறுத்துமாறுகூடக் கோரவில்லை. தயவு செய்து அவர்களின் நியாயமான கோரிக்கையைப் புரிந்து கொள்ளுங்கள். வவுனியாவுக்கே அவர்களின் வழக்குகளை மாற்றம் செய்யுங்கள்" என்று எம்.கே.சிவாஜிலிங்கம் அரச தலைவருக்கு எடுத்துரைத்தார்.

சிறையில் போராட்டம் நடத்தி வரும் இ.திருவருளின் மனைவி, ம.சுலக்ஷனின் தாயார், கணேசன் தர்ஷனின் தாயார், சகோதரன் ஆகியோர் உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள தமது சொந்தங்களின் உடல் நிலைமை மோசமடைந்து வருகின்றது. மனிதாபிமானமாக உடன் நடவடிக்கையை அரச தலைவர் எடுக்க வேண்டும் என்று கண்ணீருடன் கேட்டுக்கொண்டனர்.

இவற்றைச் செவிமடுத்துக் கொண்டிருந்த அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, அருகில் இருந்த வடமாகாண ஆளுநர் குரேயிடத்தில் சில நிமிடங்கள் கலந்துரையாடினார். ஆளுநர் குரே, கைதிகளின் கோரிக்கை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும், நல்லிணக்கத்துடன் நெருங்கிய தொடர்புடைய விடயம் என்ற தொனிப்பட கருத்துக்களை முன்வைத்தார்.

இதையடுத்து "நீதி அமைச்சர், சட்டமா அதிபர் நாட்டில் இல்லை. சட்டமா அதிபர் எதிர்வரும் திங்களன்று நாடு திரும்புகின்றார். அவர்கள் வந்ததும் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அரசியல் கைதிகளின் கோரிக்கையும், தடுப்பில் உள்ளவர்களின் நிலைமைகளையும் நாம் சாதகமாகப் பரிசீலிப்போம். 24 வருடங்களாக சிறையில் ஒருவர் இருக்கின்றமை குறித்து எனக்குத் தெரியாது. நீங்கள் சொல்லியே அதனை நான்அறிகின்றேன்" என்று அரச தலைவர் குறிப்பிட்டார்.

"நீங்கள் தற்போது ஒரு சாதகமான முடிவைக் கூறுங்கள். ஆகக் குறைந்தது வழக்குகள் வவுனியாவுக்கு மாற்றப்படும் என்றாவது கூறுங்கள். உண்வு ஒறுப்புப் போராட்டத்தை நாம் தற்காலிகமாவது நிறுத்துவது தொடர்பில் பரிசீலிக்க முடியும். அவர்களின் உடல் நிலைமை மோசமாக உள்ளது. தயவு செய்து இன்று(நேற்று) பதிலளியுங்கள்", என்று உறவினர்கள் அரச தலைவருக்கு அழுத்தம் கொடுத்தனர்.

நீதித்துறை சார்ந்த விடயம் என்பதால் தம்மால் உறுதிமொழியொன்றை வழங்க முடியாது என்று அரச தலைவர் மைத்திரி நிராகரித்துவிட்டார். திங்கள் அல்லது செவ்வாய் கிழமைகளுக்குள் கலந்துரையாடல்கள் ஊடாக விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று திட்டவட்டமாக மைத்திரி குறிப்பிட்டார்.

இதேவேளை, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரும் அரச தலைவரை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தப் பேச்சு தொடர்பில் அவர்கள் அனுப்பிய துண்டறிக்கையில், "அரச தலைவர் சாதகமான சமிக்ஞையை வெளிப்படுத்தினார். அதனை நடைமுறைப்படுத்த 25ஆம் திகதி வரை அவகாசம் கேட்கின்றார். எமது அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பில் இன்று ஆராய்வோம்" என்றுள்ளது.

(உ-5,8,31,101,106)

# வங்கியில் ரூ.400 மில்லியன் வைத்திருக்கும் நான் ஏன் மோசடியில் ஈடுபடவேண்டும்?

## இப்படிக் கேள்வி எழுப்புகிறார் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல

கொழும்பு, ஒக். 20

மத்திய அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்டத்தில் ஒரு சதம் கூட மோசடி செய்யவில்லை. நான் பரம்பரைப் பணக்காரன். எனது வங்கிக் கணக்கில் மாத்திரம் 400 மில்லியன் ரூபா வைப்பில் உள்ளது. எனக்கு மோசடி செய்ய வேண்டிய தேவைகள் எதுவும் இல்லை. இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க முன்வைத்த சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பதிலளித்து உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும்தெரிவித்ததாவது:

முன்னைய ஆட்சியில் அதிவேக பாதை நிர்மாணப் பணிகளுக்கு விலைமனுக் கோரல்கள் மேற்கொள்ளப்படவில்லை. நாம் அபிவிருத்தி திட்டங்கள் அனைத்துக்கும் விலைமனுக் கோரல் செய்துள்ளோம்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மூன்றாம் கட்டத்துக்கான பணிகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. கடன் உதவியை ஜப்பான் அரசே எமக்குப் பெற்றுத் தருகின்றது. டய்சே நிறுவனத்துக்கு விலை மனுவை வழங்கினோம். புஜிடா நிறுவனத்துக்கு விலை மனுவை வழங்கவில்லை. டய்சே நிறுவனம் இணங்கியதன் பிரகாரம் புஜிடா நிறுவனம இணை ஒப்பந்தகாரர்களாகச் செயற்படுகின்றது. போட்டித் தன்மை வந்தமை காரணமாக மத்திய அதி வேக பாதையின் மூன்றாம் கட்ட செலவினத்தை 25 பில்லியனாக குறைக்க முடிந்தது.

மத்திய அதிவேக பாதையில் எந்தவொரு திருட்டுத் தனமும் இல்லை. மத்திய அதிவேக பாதை நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்டத்தில் ஒரு சதம் கூட மோசடி செய்யப்படவில்லை. இது தொடர்பான விசாரணைகளுக்கு முகம்கொடுப்பதற்கு நான் தயார். இது தொடர்பில் எனது அதிகாரிகள் மீது தவறுகள் இருந்தால் அதற்கான பொறுப்பை நான் ஏற்கின்றேன். நான் பரம்பரைப் பணக்காரன். எனது குடும்பத்தின் காணிகள் பலாங்கொடையில் உள்ளது. எனது வங்கிக் கணக்கில் மாத்திரம் 400 மில்லியன். ரூபா வைப்பில் உள்ளது. அதற்கான வரியை நான் செலுத்தி வருகின்றேன். எனக்கு மோசடி செய்ய வேண்டிய தேவைகள் எதுவும்இல்லை-என்றார்.(5.31)

# அதிவேக நெடுஞ்சாலை கட்டுமானத்தை நிறுத்துங்கள்

## சுயாதீன தெரிவுக்குழு விசாரணை நடத்த வேண்டும் என்கிறார் அநுர

கொழும்பு, ஒக். 20

மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் பெரும் மோசடி நடந்துள்ளது. அமைச்சரவைப் பத்திரங்கள் அடிக்கடி மாற்றப்பட்டமை, ஜப்பான் தூதரகத்தின் பதில் கடிதம் மற்றும் காலதாமதம் என்பன மோசடி நடந்தமைக்கு உறுதியான ஆதாரங்களாகும். தற்காலிகமாக மத்திய அதிவேக அபிவிருத்தி திட்டத்தை இடைநிறுத்தி சுயாதீன தெரிவுகுழுவொன்றை நியமித்து விசாரிக்க வேண்டும். இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் மத்திய அதிவேக நெடுஞ்சாலை அபிவிருத்தித் திட்ட மோசடி தொடர்பில் சபைஒத்திவைப்புப் பிரேரணையைச் சமர்பித்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

முன்னைய ஆட்சியின் மீது ஊழல் மோசடி குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. புதிய அரசு முன்னைய அரசை வீழ்த்தி ஆட்சி பீடமேறியது. முன்னைய ஆட்சியின் போது இடம்பெற்ற அதேமோசடிகள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றன.

இந்த மோசடிகளுக்கு பின்னால் ஒரு சில அமைச்சர்களும், வர்த்தக நிறுவனங்களும், ஊடக நிறுவனங்களும் உள்ளன. முன்னைய ஆட்சியின் போது இருந்த 'டீல்' காரர்கள் தற்போது வேறு ரூபத்தில் வந்துள்ளனர். மத்திய அதிவேக பாதையின் நிர்மாணிக்கப்படுகின்ற மூன்று கட்டங்களுக்கும் ஒரு தரகரே தொடர்புபட்டுள்ளார்.

மத்திய அதிவேக பாதையின் முதலாம் கட்டம் தற்போது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. மூன்றாம் கட்டத்திலேயே சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளது.

மூன்றாம் கட்டத்துக்குரிய ஒப்பந்தத்தை தேசிய முதலீட்டாளர்களுக்கு வழங்கத் திட்டமிட்டு அமைச்சர் அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்தார். பின்னர் கலகெதர பகுதியில் சுரங்கப் பாதை நிர்மாணிக்க வேண்டும் என்ற காரணத்தை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு அமைச்சர் மீண்டுமொரு அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்துள்ளார். அமைச்சர் கிரியெல்ல கண்டி மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர். கலகெதரவில் சுரங்கப் பாதை அமைக்க வேண்டும் என்று அமைச்சருக்குத் தெரியாதா?. இதன் பின்னால் குழப்பமும் தடுமாற்றமும் உள்ளது.

இதனையடுத்து மூன்றாம் கட்டத்துக்கு ஜப்பான் அரசிடம் மூன்று நிறுவனங்களைப் பெயரிட்டுத் தருமாறு கோரினர். மூன்று நிறுவனங்களை ஜப்பான் பெயரிட்டு வழங்கியது. அதில் டய்சே நிறுவனம் மாத்திரமே தகுதியானது. டய்சே நிறுவனத்திற்கு விலை மனுக் கோரல் வழங்கத் திட்டமிட்டனர். இது தொடர்பாக மீண்டும் அமைச்சரால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டது.

ஜப்பான் அரசு முன்வைத்த இரு நிறுவனங்களை நிராகரித்து விட்டு வேறு நிறுவனங்களைப் பெயரிடுமாறு ஜப்பானிடம் இலங்கை அரசுகோரியது. இந்த அபிவிருத்தித் திட்டம் உங்களுடையது. நீங்கள் கேட்கும் தருணங்களில் எல்லாம் எமக்கு நிறுவனங்களைப் பெயரிட முடியாது என்று ஜப்பான் தூதரகம் கடிதம் மூலம் அறிவுறுத்தியது.

எவ்வாறாயினும் மூன்றாம் கட்டப் பணிக்கு டய்சே ஒப்பந்தகாரர்களுடன் புஜிடா நிறுவனத்தைச் சேர்த்துள்ளனர். புஜிடா நிறுவனத்துக்கு விலை மனுக் கோருவதற்கு மூன்று வாரங்கள் தாமதம் செய்யப்பட்டது. இந்தத் தாமதத்திலும் சிக்கல் நிலை உள்ளது - என்றார். (5,31)

# மத்திய அதிவேக நெடுஞ்சாலை வைரத்திலா அமைக்கப்படுகிறது?

## இப்படிக் கேள்வி எழுப்புகிறார் மகிந்த அணி உறுப்பினர் மகிந்தானந்த

கொழும்பு, ஒக். 20

மத்திய அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்படுவதில் 'மெகா டீல்' இடம்பெறுகின்றது. இந்தப் பாதை வைரத்திலா அமைக்கப்படுகின்றது என்றும் கேட்க விரும்புகின்றேன்.

இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் சபை ஒத்திவைப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்திய அதிவேக நெடுஞ்சாலையை அமைக்கும் செயற்பாடுகள் ஆமை வேகத்திலே நகர்கின்றமையானது கவலைக்குரியதாகும். இதற்குக் காரணம் என்ன?

கடந்த காலங்களில் நாம் நீதிக்கு முரணாக கேள்விப்பத்திரங்களைக் கோரியதாக எம்மீது விரல் நீட்டி ஆட்சியைப் பிடித்தவர்கள் தற்போது கேள்வி மனு விண்ணப்பக் கோரலில் முறையற்ற வகையில் நடந்து கொள்கின்றார்கள்.

ஜப்பானின் நிதி நன்கொடையில் திட்டம் முன்னெடுக்கப்படுகின்ற தென்றால் அந்த நாட்டைச் சேர்ந்த வங்கியொன்றையோ அல்லது கட்டுமான நிறுவனத்தையோ நாடிச் செல்வதில் தவறில்லை.

ஜப்பானைச் சேர்ந்த நிறுவனம் முதலாம், இரண்டாம் கேள்வி மனு விண்ணப்பக் கோரலில் சமர்பித்த ஆவணங்கள் நிராகரிக்கப்பட்ட நிலையில் அந்த நிறுவனத்துக்கு வேறொரு முறையில் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இந்த நிறுவனம் நைஜீரியாவில் நெடுஞ்சாலையை அமைக்கின்றது. அந்த உதாரணத்தைக் காட்டியே ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்வந்திருக்கின்றார்கள். நெடுஞ்சாலையை ஒரு பில்லியன் டொலரில் அமைப்பதாகக் கூறி ஒப்பந்தத்தைப் பெற்றிருந்தாலும் தற்போதுவரை 11 பில்லியன் டொலர்கள் மத்திய அதிவேக நெடுஞ்சாலைக்காக செலவழிக்கப்பட்டுள்ளது. தற்போதும் நிர்மானப் பணிகள் நிறைவடையவில்லை.

கடந்த காலங்களில் மகிந்த ராஜபக்ச பாதைகளை அமைக்கும்போது வைரத்திலா, தங்கத்திலா பாதைகள் அமைக்கப்படுகின்றன எனக் கேள்வி எழுப்பியவர்களிடத்தில் தற்போது அதிவேக நெடுஞ்சாலையை வைரத்திலா அமைக்கின்றீர்கள் என்று கேட்க விரும்புகின் றேன் - என்றார். (5,31)

## போராட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

4 வருடங்களாக வவுனியா மேல் நீதிமன்றில் இடம்பெற்ற வழக்கை அநுராதபுரம் நீதிமன்றுக்கு இடமாற்றியதை எதிர்த்து மூன்று தமிழ் அரசியல் கைதிகள் கடந்த மாதம் 25ஆம் திகதி உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இவர்களது உறவினர்கள், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் என்ற இருதரப்புக்களும் அரச தலைவர் மைத்திரிபாலவை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தன. இந்தப் பேச்சுக்களில் உறுதியான முடிவு வழங்கப்படாததைச் சுட்டிக்காட்டிய தமிழ் அரசியல் கைதிகள், தமது வழக்கு மாற்றப்படும் வரையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று தெரிவித்தனர். (உ-5)

# செலவுகளின் ஒப்பீடுகள் தவறானவை

## அமைச்சர் மலிக் நாடாளுமன்றில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 20

தென்மாகாண நெடுஞ்சாலையுடன், மத்திய அதிவேக நெடுஞ்சாலைக்கான செலவினங்களை ஒப்பிட முடியாது என்று அமைச்சர் மலிக் சமரவிக்கிரம தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். (5,31)

### டெங்கு நுளம்புப் பெருக்கம்

# யாழில் இரு நாள்களில் 199 பேர் மீது வழக்கு

யாழ்ப்பாணம், ஒக்.20
யாழ்ப்பாணத்தில் கடந்த 15,16ஆம் திகதிகளில் முன்னெடுக்கப்பட்ட டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்றிட்டத்தின் போது டெங்கு நுளம்புப் பெருக்கம் அதிகமாக உள்ளது என இனங்காணப்பட்ட நிலங்களின் உரிமையாளர்கள் 199 பேருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என மாவட்டச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் தற்போது அதிகரித்துள்ள டெங்குத் தாக்கத்தையடுத்து கடந்த 15,16ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தின் 9 சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றன. இரு நாள்களிலும் மொத்தமாக 12 ஆயிரத்து 950 இடங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் நுளம்புகள் பெருகக் கூடிய சூழலாக 4 ஆயிரத்து 599 இடங்கள் இனம் காணப்பட்டு துப்பரவுப் பணிக்குப் பணிக்கப்பட்டது. அதேபோன்று மிகவும் ஆபத்தான பகுதிகளாக ஆயிரத்து 320 இடங்கள் இனம்காணப்பட்டு எச்சரிக்கை அறிவித்தல் விடப்பட்டன. அவற்றில் 309 இடங்களில் நுளம்புக் குடம்பிகள் காணப்பட்டன. அதிலும் அதிகமாகஆபத்தை ஏற்படுத்தும் இடங்களாக 199 இடங்கள் இனங்காணப்பட்டன. அவற்றின் உரிமையாளர்களுக்கு எதிராகப் பொலிஸாரின் உதவி பெறப்பட்டது. பொலிஸாரால் அவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டது.

(21-101)

## 88 வயது மூதாட்டி சாவு

தென்மராட்சி, ஒக்.20
கதிரையில் இருந்து வீழ்ந்த மூதாட்டி சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் தீபாவளி தினத்தன்று நடந்துள்ளது. தென்மராட்சி பாலாவி தெற்கைச் சேர்ந்த முத்தையா லெட்சுமி (வயது-88) என்பவரே உயிரிழந்தார்.
தீபாவளி அன்று மூதாட்டியை குளித்த பின்னர் உடை மாற்றுவதற்காக கதிரையில் அமர்த்தி வைக்கப்பட்டிருந்தார் என்றும், கதிரையில் இருந்து அவர் சரிந்ததில் தலையில் காயம் ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. அவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அவர் சிகிச்சை பயனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.
உயிரிழந்தவரின் உடல் உடற்கூற்றுச் சோதனைக்குப் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## விபத்தில் சிக்கிய முதியவர் ஏழாம் நாள் உயிரிழந்தார்

சாலை விபத்தில் காயமடைந்த முதியவர் ஒருவர் சிகிச்சை பயனின்றி ஏழாம் நாள் உயிரிழந்தார்.
மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த ச.சிவப்பிரகாசம் (வயது-71) என்பரே உயிரிழந்தவராவார்.
கடந்த 12ஆம் திகதி மட்டுவில் புத்தூர் சாலையில் பன்றித்தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு அண்மையில் சைக்கிளில் சென்றவரும், மோட்டார் சைக்கிளில் பயணித்தவரும் விபத்துக்குள்ளாகினர். விபத்தில் இருவரும் காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். முதியவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவனைக்கு மாற்றப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த அவர் நேற்றுமுன்தினம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.
உயிரிழப்புத் தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்தனர். உடற்கூற்றுச் சோதனையின் பின்னர் உடல் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ற-9)

## மதுவால் வந்த வினை குடும்பத் தலைவர் இறப்பு

யாழ்ப்பாணம் ஒக் 20
நீண்ட நேரம் மயக்கநிலையில் இருந்தவர் உயிரிழந்துள்ளார். உறவினர்களால் அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போதும் உயிரிழந்து விட்டார் என மருத்துவர்கள் தெரிவித்தனர். அதிக மது அருந்தியதாலேயே அவர் உயிரிழந்தார் என இறப்பு விசாரணை அதிகாரி தெரிவித்தார். மது அருந்திய நிலையில் அவருக்கு ஏற்பட்ட வாந்தியால் இரப்பைக்குள் இருந்த உணவுப் பதார்த்தம் சுவாசப்பைக்குள்சென்றநிலையிலேயே இறப்பு நிகழ்ந்துள்ளது என சட்ட மருத்துவ அதிகாரி மயூரன் தெரிவித்தார்.
கோப்பாய் தெற்கைச் சேர்ந்த நடராஜா மனோராஜ் (வயது-52) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு நேற்றுமுன்தினம் உயிரிழந்தார். குடும்பத் தகராறு காரணமாக மனைவியை விட்டுப் பிரிந்த மனோராஜ் தனது தாயுடன் வாழ்ந்து வந்தார். தீபாவளி தினத்துக்கு முதல் நாளும் மறுநாளும் அதிக மது அருந்தியுள்ளார். மது அருந்திய அவர் தனது தாயுடன் தீபாவளியன்று கடற்கரைக்குச் சுற்றுலா சென்றுள்ளார். அவருடன் சென்றவர்கள் கடலுக்குச் சென்ற போதிலும் அவர் வாகனத்திலேயே இருந்துள்ளார். வானில் மயக்க நிலையில் இருந்த அவரை பல முறை எழுப்பிய போதிலும் அவர் எழும்பவில்லை. இதனால் அவரை வீட்டுக்கு அழைத்துச் சென்ற தாயும் உறவினர்களும் வீட்டில் வைத்து அவரை எழுப்பினர் எனினும் அவர் எழும்பவில்லை. இதனால் அவர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டார் என தெரிவிக்கப்பட்டது.
கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மனோராஜ் வைத்தியசாலைக்குக் கொண்டு வர முன்னரே இறந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். இவரது இறப்பு விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் மேற்கொண்டார். விசரானைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(21,8 ரீ1)

## நிர்வாகத் தெரிவுக்கான ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம், ஒக்.20
கொக்குவில் கிழக்கு கிருபாகர சுப்பிரமணி கோயில் நிர்வாகத் தெரிவுக்கான ஒன்றுகூடல் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. மு.ப. 9 மணிக்கு ஆலய முன்றிலில் ஒன்றுகூடல் நடைபெறும். கடந்த ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையின் உறுப்பினர்கள் ஆறுபேர் செப்ரெம்பர் 7ஆம் திகதி விலகுகின்றனர் என்று அறிவித்தனர். அதன் காரணமாக புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவுள்ளது என்று நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற)

## கலாசார பேரவையில் இணையலாம்

வடமராட்சி, ஒக்.20
வடமராட்சி வடக்கு பிரதேச கலாசாரப் பேரவைக்கு அங்கத்தவர்களை இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களுக்குட்பட்ட கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஆர்வலர்கள் பேரவையில் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.
அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் வடமராட்சி வடக்கு, பிரதேச செயலக கலாசாரக் கிளையில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூரணப்படுத்தி, சந்தாப் பணத்துடன் 25 ஆம் திகதிக்கு முன்னதாக ஒப்படைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## உணவு உற்பத்தி போராட்டத்தில் இணைய அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஒக்.20
தேசிய உணவு உற்பத்திக்கான முன்னிலைப் போராட்ட வேலைத் திட்டத்தை யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளிலும் மேற்கொள்ள வேண்டும்.
இவ்வாறு யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் பிரதேச சபைச் செயலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.
இந்தத் திட்டம் கடந்த 11ஆம் திகதி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு அரச பணியாளர்களும் தலா இரு பயன்தரு மரங்களை உள்ளூராட்சி சபை அலுவலகங்களில் நட வேண்டும் என்றும் இடவசதி காணப்பட்டால் வீட்டுத் தோட்டத்தை அமைக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## சைவ சமய போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஒக்.20
வலிகாமம் கல்வி வலயத்தால் கடந்த 4ஆம் திகதி இணுவில் மத்திய கல்லூரியில் நடத்தப்பட்டிருந்த வலய மட்ட சைவசமயப் போட்டி முடிவுகள் வலய பணிப்பாளரால் அறிவிக்கப்பட்டுள்ளன. பண்ணிசை, கதாபிரசங்கம், புராண படலம், கோலம் முதலான போட்டிகள் நடத்தப்பட்டிருந்தன.
போட்டி முடிவுகள் வருமாறு:

**பிரிவு 1: பண்ணிசை**
அருணோதயாக் கல்லூரி மாணவன் கு.விஸ்வசுந்தரசர்மா முதலாம் இடத்தையும், இணுவில் இந்துக் கல்லூரி மாணவன் ஶ்ரீ.ஶ்ரீநகரி இரண்டாம் இடத்தையும் மானிப்பாய் மகளிர் கல்லூரி மாணவர்களான யோ.கீர்த்தனா, வி.அபிவர்மன் மூன்றாம் இடங்களையும் பெற்றுள்ளனர்.

**பிரிவு 2: பண்ணிசை**
அராலி சரஸ்வதி மகாவித்தியாலய மாணவன் ர.ஹீதரன் முதலாம் இடத்தையும், விக்ரோறியாக் கல்லூரி மாணவி கி.தர்சிகா இரண்டாம் இடத்தையும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி பு.டினோயினி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

**பிரிவு 3: பண்ணிசை**
சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியால மாணவி வி.சோபிதா முதலாம் இடத்தையும், இணுவில் இந்துக் கல்லூரி மாணவி சு.பிரியா இரண்டாம் இடத்தையும் ஆனைக்கோட்டை. றோ.க.த.பாடசாலை மாணவி க.டன்சியா மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

**பிரிவு 1: குழுப் பண்ணிசை**
அருணோதயாக் கல்லூரி முதலாம் இடத்தையும் மானிப்பாய் மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும் இராமநாதன் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

**பிரிவு 2: குழுப் பண்ணிசை**
அளவெட்டி அருணோதயாக் கல்லூரி முதலாம் இடத்தையும் மானிப்பாய் மகளிர் கல்லூரி இரண்டாம் இடத்தையும் சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

**பிரிவு 3: குழுப் பண்ணிசை**
மானிப்பாய் மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும் விக்ரோறியாக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

**பிரிவு 3: கதாப்பிரசங்கம்**
இளவாலை கன்னியர்டம் மகாவித்தியாலய மாணவி எஸ்.டயனதர்சிகா முதலாம் இடத்தையும் வட்டு. இந்துக் கல்லூரி மாணவி எஸ்.கோகிலவதனி இரண்டாம் இடத்தையும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

**பிரிவு 4: கதாப்பிரசங்கம்**
யூனியன் கல்லூரி மாணவன் ஶ்ரீ.சிவதரன் முதலாம் இடத்தையும் இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலய மாணவி எஸ்.சுஜனித்தா இரண்டாம் இடத்தையும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவன் ச.சதீஸ்குமார் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

**பிரிவு 3: புனைபடனம்**
ஏழாலை ஶ்ரீமுருகன் வித்தியாலய மாணவிகள் ம.கோமகள் பா.பகிர்தா ஆகியோர் முதலாம் இடத்தையும் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவர்கள் பா.விஸ்ணுகரசர்மா புருஷோத்தமன் ஆகியோர் இரண்டாம் இடத்தையும் யூனியன் கல்லூரி மணவர்கள் இ.கஜானன், இ.சாகித்தியன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

**பிரிவு 1: கோலம்**
பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவி வா.சிவதர்மிகா முதலாம் இடத்தையும், அராலி சரஸ்வதி மகாவித்தியால மாணவன் சு.வேணுஜன் இரண்டாம் இடத்தையும் ஏழாலை மகாவித்தியால மாணவன் பி.புவீந்திரன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

**பிரிவு 2 : கோலம்**
வட்டு. இந்துக் கல்லூரி மாணவி ப.பானுஜா முதலாம் இடத்தையும் தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலய மாணவி இரண்டாம் இடத்தையும் ஏழாலை மகாவித்தியலய மாணவன் மண்ராஜ் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

**பிரிவு 3: கோலம்**
ஏழாலை மகாவித்தியாலய மாணவி சு.வினோஜா முதலாம் இடத்தையும் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மாணவி அ.டனுஜா இரண்டாம் இடத்தையும் பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவன் போ.மிதுசன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

**பிரிவு 4: கோலம்**
பன்னாகம் மெய்கண்டான் மகாவித்தியாலய மாணவன் ஆ.ஜனுஜன் முதலாம் இடத்தையும் இணுவில் மத்திய கல்லூரி இரண்டாம் இடத்தையும் இளவாலை கன்னியர் டம் வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன. (ற-28)

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | - | 80 | 70 | 80 | 80 |
| கத்தரி | 140 | 120 | 80 | 100 | 140 |
| மரவள்ளி | 80 | 80 | 70 | 60 | 50 |
| பயிற்றை | 200 | 320 | 140 | 140 | 240 |
| பாகல் | 400 | 600 | 400 | 250 | 260 |
| க.கிழங்கு | 80 | 80 | 80 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 120 | 120 | 120 | 140 | 100 |
| சி.வெங்காயம் | 250 | 200 | 240 | 280 | 260 |
| பூசணி | 40 | 50 | 40 | 50 | 40 |
| தக்காளி | 200 | 200 | 200 | 180 | 180 |
| வாழைக்காய் | 80 | 100 | 90 | 80 | 80 |
| கீரை | 40 | 50 | 30 | 15 | 40 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 35 | 30 | 40 |
| ப.மிளகாய் | 400 | 600 | 350 | 400 | 500 |
| புடோல் | 80 | 80 | 300 | 120 | 100 |
| கோவா | 140 | 160 | 100 | 140 | 140 |
| வெண்டி | 80 | 80 | 100 | 120 | 100 |
| போஞ்சி | 140 | 160 | 160 | 180 | 140 |
| லீக்ஸ் | 200 | 200 | 140 | 240 | 200 |
| தேங்காய் | 75 | 90 | 80 | 90 | 70 |
| உ.கிழங்கு | 100 | 120 | 110 | 110 | 100 |
| தேசிக்காய் | 240 | 300 | 250 | 250 | 260 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 25 | 15 |
| கறிமிளகாய் | 260 | 300 | 250 | 200 | 240 |
| கரட் | 100 | 160 | 80 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 170 | 250 | 250 | 150 | 200 |

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 800 | 1000 |
| நண்டு | 400 | 400 | 500 | 300 |
| கணவாய் | 800 | 600 | 800 | 1000 |
| பாரை | 600 | 500 | 500 | 700 |
| சுறா | 600 | 700 | 800 | 1000 |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 600 | 400 | 450 | 700 |
| முரல் | 350 | 350 | 400 | – |
| கும்பிளா | 350 | 300 | 400 | 600 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஓரா | 350 | 300 | 400 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 200 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 160 | 150 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 200 |
| திருக்கை | 350 | 200 | 400 | 200 |
| மதனம் | 250 | 150 | 250 | – |
| கொய் | 150 | 70 | 50 | 100 |
| பாலை | 150 | 200 | 400 | – |
| வாளை | 150 | 200 | 300 | – |

# மரபணுப் பரிசோதனை அறிக்கையின் முடிவுக்கு மாறாகத் தீர்ப்பாயம் தீர்ப்பு!

## வித்தியா படுகொலைக் குற்றவாளிகள் சார்பில் உயர் நீதிமன்றில் மேன்முறையீட்டு மனு

யாழ்ப்பாணம், ஒக்.20

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை வழக்கில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 7 குற்றவாளிகளும் தமது சட்டத்தரணிகள் ஊடாக உயர் நீதி மன்றுக்கு மேன்முறையீட்டு மனுவை முன்வைத்துள்ளனர்.

மரபணுப் பரிசோதனை அறிக்கையின் முடிவுக்கு மாறாக தமது கட்சிக்காரர்கள் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது என்று மேன்முறையீட்டு மனுவில் சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா 2015ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி கூட்டு வன்புணர்வின் பின் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலை வழக்கை மேல் நீதிமன்ற நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் தலைமையில் மேல் நீதிமன்ற நீதிபதிகள் அன்னலிங்கம் பிரேம சங்கர், மாணிக்கவாசகர் இளஞ்செழியன் ஆகியோர் அடங்கிய சிறப்புத் தீர்ப்பாயம் (ட்ரயல் அட் பார்) விசாரணைகளை மேற்கொண்டது.

விசாரணைகளின் நிறைவில் கடந்த செப்ரெம்பர் 28ஆம் திகதி 9 எதிரிகளில் 7 பேர் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு அவர்களுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. கூட்டு வன்புணர்வு மற்றும் சதித்திட்டம் தீட்டியமை ஆகிய குற்றங்களுக்கு 7 குற்றவாளிகளுக்கும் 30 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனையும் விதித்து தீர்ப்பாயம் தீர்ப்பளித்தது. 2 பேர் நிரபராதிகள் என விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கில் 7 பேரை குற்றவாளிகளாக தீர்ப்பாயத்தின் 3 நீதிபதிகளுமே ஏகமனதாகத் தீர்மானித்திருந்தனர்.

இந்த நிலையில் 5க்கு குறையாத நீதியரசர்கள் அடங்கிய அமர்வின் முன்னிலையிலேயே தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீடு செய்ய முடியும் என்ற சட்ட ஏற்பாட்டுக்கு அமைவாக உயர் நீதிமன்றுக்கு மேன்முறையீட்டு மனு முன்வைக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யவேண்டிய இறுதிநாள் இன்றாகும். கடந்த வாரமே மேன்முறையீட்டு மனு அறிக்கை .யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் முன்வைக்கப்பட்டது. சுவிஸ் குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிகுமார் மற்றும் அவரது சகோதரர் மகாலிங்கம் சசிதரன் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி ஆறுமுகம் ரகுபதியும் பூபாலசிங்கம் ஜெயக்குமார், பூபாலசிங்கம் தவக்குமார், தில்லைநாதன் சந்திரகாசன், சிவதேவன் துஷாந்த் மற்றும் ஜெயதரன் கோகிலன் ஆகியோர் சார்பில் சட்டத்தரணி மகிந்த ஜெயவர்த்தனவும் மேன்முறையீட்டு அறிவித்தலை முன்வைத்தனர். (ற)

## மீசாலையில் நடமாடும் சேவை

தென்மராட்சி, ஒக். 19

மீசாலை வடக்குப் பிரிவில் தேசிய அடையாள அட்டை இல்லாதவர்களுக்கான நடமாடும் சேவை இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும். தென்மராட்சி பிரதேச செயலக தேசிய அடையாள அட்டைப் பிரிவினர் மீசாலை வடக்கு புத்தூர் சந்தியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் இதனை நடத்தவுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிறப்புச் சான்றிதழ் மற்றும் திருமணப் பதிவுச் சான்றிதழ் இல்லாததால் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்காதவர்களும் தேசிய அடையாள அட்டையைத் தொலைத்து இதுவரை புதிய அடையாள அட்டை பெற்றுக் கொள்ளாதவர்களும் நடமாடும் சேவையில் பங்குபற்றி தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. (4 -9)

## சித்தியடைந்த மாணவர்களுக்கு உதவிப் பணம்

யாழ்ப்பாணம், ஒக்.20

நயினாதீவுக் கிராமத்தைச் சேர்ந்த இந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 4 மாணவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது என்று என்று நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய அறங்காவலர் சபையின் செயலாளர் நா.கோபாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

மாணவர்களுக்குத் தலா 15 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற)



இது புதுசு

பெண்களுக்கான புதிய கழுத்து மாலைகள் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 750 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## சிறுவர் தின விழா

சமூக அபிவிருத்தி மன்றத்தின் சிறுவர் தின விழா நாளை சனிக்கிழமை கந்தர்மடத்தில் உள்ள அலுவலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மன்றத் தலைவர் சி.குமாரலிங்கம் தலைமையில் மு.ப. 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள நிகழ்வில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ந.தயாபரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

ஹற்றன் நசனல் வங்கியின் யாழ்.மெற்றோகிளைமுகாமையாளர் வி.சஞ்சீவ், கோப்பாய் கிராம அலுவலர் செ.வசந்தகுமார், யாழ்.மாவட்ட முதியோர் பேரவைத்தலைவர் இ.மயில்வாகனம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (ற)

## விளையாட்டு முற்றம் திறப்பு

கெற்பேலி அ.த.க.பாடசாலையில் வேள்ட் விசன் லங்கா நிறுவனத்தினரின் பங்களிப்புடன் சீரமைக்கப்பட்ட ஆரம்பக் கல்விப் பிரிவு மாணவர்களின் விளையாட்டு முற்றத் திறப்பு விழாவும் பாடசாலையில் மும்மொழித் திட்டத்தை அறிமுகப்படுத்தும் மும்மொழியிலான பெயர்ப் பலகை திரைநீக்கமும் இன்று வெள்ளிக் கிழமை நடைபெறும்.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் விருந்தினர்களாக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) நா.கந்ததாசனும், வேள்ட் விசன் லங்கா நிறுவன சாவகச்சேரி பிரதேச செயற்றிட்ட அலுவலர் த.வசந்தநாயகமும் கலந்து கொள்வர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (4-9)

## குடமுழுக்கு தினத்தை முன்னிட்டு அபிசேகம்

நீர்வேலி தெற்கு, பூதர்மடம் வைரவர் ஆலயத்தில் குடமுழுக்கு தினத்தை முன்னிட்டு இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 11 மணிக்கு சிறப்பு பூசை, அபிசேகம் என்பன நடைபெறவுள்ளன. (ற-17)

## கந்தசஷ்டியில் தெய்வீக இசை

கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு, நல்லூர் கந்தப் பெருமான் வெளி வீதி உலா வரும் மாலை வேளையில், யாழ்ப்பாணம் சின்மயா மிஷனால் தெய்வீக இசை நிகழ்த்தப்படவுள்ளது என அறிவிக்கப்பட்டது. ஆர்வலர்கள் மற்றும் மாணவச் செல்வங்களைக் கலந்து கொள்ளுமாறு சின்மயா மிஷன் அறிவித்துள்ளது. (21)

## கந்தசஷ்டி உற்சவம்

யாழ்ப்பாணம் அளவெட்டி மேற்கு, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில் இன்று வெள்ளிக்கிழமை கந்தசஷ்டி விரத பூசைகள் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து எதிர்வரும் 25ஆம் திகதி புதன்கிழமை வரையான ஆறு தினங்களும் பூசைகள் நடைபெறும். அத்துடன் தினமும் மாலை 6 மணிக்கு பூசைகளுடன் பால், பழம், இளநீர் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டது. (160-ரி)

+++++++++++++

நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் கந்தசஷ்டி உற்சவம் இன்று மு.ப. 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். தொடர்ந்து 6 நாள்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு வேல்வடிக் காட்சியும், 3 மணிக்கு சூரசங்கார நிகழ்வும் நடைபெறும். மறுநாள் வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், வெள்ளிக்கிழமை பி.ப. திருக்கல்யாண உற்சவமும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-17)

## கட்டட சீரமைப்பு ஆரம்ப நிகழ்வு

மூளாய் கூட்டுறவு மருத்துவமனையின் கட்டட மீள்சீரமைப்புக்கான ஆரம்ப நிகழ்வு நாளை நடைபெறவுள்ளது.

மு.ப. 10.30 மணிக்கு நிகழ்வுகள் அலுவலக மண்டபத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. மூளாயைச் சேர்ந்த சிற்றம்பலம் குடும்பத்தினர் இந்தக் கட்டடத்தைச் சீரமைத்துத்தர முன்வந்துள்ளனர் என்று சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (ற-ரி)

## வடக்கின் கல்வியை பாதாளத்துக்கு கொண்டு செல்கிறது கொழும்பு

### இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கடும் கண்டனம்

யாழ்ப்பாணம், ஒக்.20

வடக்கு மாகாணத்தில் 500 மேற்பட்ட ஆசிரிய வெற்றிடங்கள் உள்ள நிலையில் கல்வியியற் கல்லூரிகளில், பயிற்சிபெற்று நடப்பாண்டில் ஆசிரிய நியமனம் கிடைக்கும் ஆசிரியர்களில் அரைவாசிப்பேரையே வடக்கு மாகாணத்துக்கு நியமிக்க கொழும்பு கல்வி அமைச்சு எடுத்திருக்கும் முடிவு வடக்கு மாகாணத்தின் கல்வியை இன்னும் பாதாளத்துக்குக் கொண்டு செல்லும் முயற்சி என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

இந்த விடயம் தொடர்பில் சங்கம் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது; கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சிபெற்று நடப்பாண்டில் ஆசிரிய நியமனம் கிடைக்கும் வடமாகாணத்தைச் சேர்ந்த 400க்கு மேற்பட்ட ஆசிரியர்களில் 207பேர் மட்டுமே வடக்கு மாகாணத்துக்கு நியமனம் செய்யப்படவுள்ளனர்.

அவர்களை ஆசிரிய பயிற்சிக்காக இணைக்கும் வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பிரதேசசெயலக பிரிவுகளில் உள்ள ஆசிரிய வெற்றிடங்களையும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் வெற்றிடங்களையும் கணக்கில் கொண்டே விண்ணப்பங்கள் கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது. அதன்படிவடக்குமாகாணத்தில் 500மேற்பட்ட ஆசிரிய வெற்றிடங்கள் உள்ளன. ஆனால் பயிற்சி முடித்த ஆசிரியர்களில் அரைவாசிப்பேருக்கே வடக்கு மாகாணத்துக்கு நியமனம் வழங்கியுள்ள கொழும்பு அரசு தவறிழைத்தது மட்டுமன்றி வடக்கு மாகாணத்தின் கல்வியை இன்னும் பாதாளத்துக்குக் கொண்டு செல்ல முயலுகின்றது. இதில் யாவரும் அறிந்து கொள்ள வேண்டிய விடயம். பட்டதாரிகள் தவிர்ந்த எந்த ஆசிரியர் நியமனம் வழங்கும் அதிகாரமும் மாகாண சபைக்குக் கிடையாது. ஆகையினால் தான் வடக்குமாகாணத்தில்நீண்ட காலம் தொண்டராசிரியர்களாகக் கடமையாற்றியோருக்கு கொழும்புக் கல்வி அமைச்சின் அதிகாரிகள் நேர்முகத் தேர்வை நடத்தினர். அதன் அடிப்படையிலும் பலர் நிராகரிக்கப்பட்டு 200க்கும் உட்பட்டவர்களுக்கே நியமனம் வழங்க அனுமதி வழங்கப்பட்டது. அதுவும் தற்போது வடக்கு மாகாண சபையால் நிறுத்தப்பட்டுள்ளது. இதற்கு என்னதான் தீர்வு? ஒட்டுமொத்தமாக வடக்கு மாகாண ஆசிரிய வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரம் வடக்கு கல்வி அமைச்சிடம் வழங்கப்பட வேண்டும். அல்லதுவடக்கு மாகாண கல்வி அமைச்சின் அறிவுறுத்தல்களை மதித்து தேவையானவற்றை வழங்க வேண்டும். இதை விட கொழும்பு அரசு கல்வித் துறைக்குப் போதிய நிதியை ஒதுக்கியுள்ளதாக அரச தலைவர் கூறுகின்றார்.

எனினும் புதிதாக நியமனம் வழங்கிய ஆசிரியர்களுக்கு மாதாந்த வேதனம் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதை யாவரும் அறிவர். இவற்றுக்கெல்லாம் தீர்வாக வடக்கு மாகாண சபையின் துறைசார்ந்த உறுப்பினர்களோடு, வடக்கு மாகாண உயர் அதிகாரிகளும் சேர்ந்து சென்று அரச தலைவரைச் சந்தித்து, எடுத்துரைத்து அத்தகவலை ஊடகங்களுக்குவழங்கவேண்டும்- என்றுள்ளது. (21)

# இரணைதீவுக் காணியை அளவிட பாதுகாப்பு அமைச்சு அனுமதி

## அடுத்த வாரம் பணிகள் இடம்பெறும் எனவும் எதிர்பார்ப்பு

கிளிநொச்சி, ஒக்.20

கிளிநொச்சி இரணைதீவுப் பகுதியில் பொதுமக்களுக்குச் சொந்தமான வாழ்விடங்களை அளவீடு செய்யும் பணிக்குச் செல்ல இருந்த நில அள வைத்திணைக்களத்தின் ஊழியர்களுக்குப் பாதுகாப்பு அமைச்சினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என பூநகரிப் பிரதேச செயலாளர் கி.ச.கிருஸ்னேந்திரன் தெரிவித்தார். கிளிநொச்சி, இரணைதீவில் வசித்த 167 குடும்பங்கள் கடந்த 1992ஆம் ஆண்டு அங்கிருந்து இடம் பெயர்ந்த னர்.

கிளிநொச்சி மாவட்டம் மட்டுமன்றி வடக்கில் பல பகுதிகளிலும் அவர்கள் சிதறி வாழ்ந்தனர். இன்று வரையும் அவர்கள் இரணைதீவில் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. தங்களது வாழ்விடங்களை விடுவிக்குமாறு அதிகாரிகள் முதற் கொண்டு அரசியல் தலைவர்களிடமும் அந்த மக்கள் கோரிக்கை விடுத்தனர். எனினும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்பட வில்லை. நிலத்தை விடுவிக்கும் வரை போராடுவதாக மக்கள் முடிவு செய்தனர்.

நடப்பாண்டின் ஆரம்பத்தில் போராட்டத்தை ஆரம்பித்தனர். முழங்காவில் கடற்படைத் தளத்தின் முன்பாக கடந்த 6 மாதங்களாக அவர்கள் தொடர்போராட்டம் நடத்துகின்றனர்.

பாதுகாப்பு அமைச்சினால் இரணைதீவு விடயம் ஆராயப்பட்டது. சொந்த இடத்தில் மீளக் குடியமர்த்துவதற்கு ஏதுவாக மக்களின் குடியிருப்புப் பகுதிகளை இனம் கண்டு அளவீடு செய்வதற்கு பாதுகாப்பு அமைச்சு முடிவுசெய்தது.

காணி உரிமை யாளர்கள் உள்ளிட்ட 14 பேர் கொண்ட குழுவினர் கடந்த செப்ரெம்பர் மாதம் கடற்படையினரால் இரணைதீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அந்தக் குழுவினர் "மக்கள் வாழ்வதில் பெரும் இடர் இருப்பதாகத் தெரியவில்லை, அதனால் அப்பகுதிகளை முழுமையாக அளவீடு செய்து அவற்றை காணி உரிமையாளர்களுக்குப் பங்கீடு செய்து வழங்கினால் எஞ்சிய பணியை மேற்கொள்ள முடியும்" எனச் சுட்டிக்காட்டி னர்.

எனினும் 167 குடும்பங்களின் நிலங்களையும் முழுமையாக அளவீடு செய்து வழங்குவதானால் தமக்கு 15 தினங்கள் தேவையெனவும் அதற்காகத் தினமும் அங்கு சென்று வருவது இயலாத காரியம் எனவே தீவிலேயே தங்கி நின்று அளவீட்டை மேற்கொள்ள அனுமதி வழங்குமாறும் நில அளவைத்திணைக்களம் பாதுகாப்பு அமைச்சைக் கோரியது. கோரிக்கை விடுத்து வாரங்கள் பல கழிந்தன.

முடிவுகள் கிடைக்கவில்லை. இந்த நிலையிலேயே அதற்கான அனுமதி தற்போது கிடைத்துள்ளது என பிரதேச செயலர் தெரிவித்தார். அடுத்தவாரம் காணி அளவீட்டுப் பணி கள் இடம்பெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது என வும் தெரிவிக்கப்படுகிறது. (21-101)

## சித்த மருத்துவமனைகளின் அபிவிருத்தியே 2018ஆம் ஆண்டின் மிகப்பெரிய இலக்கு

### மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள ஆணையாளர் இப்படிக் கூறினார்

யாழ்ப்பாணம்.ஒக்.20

வடக்கு மாகாணத்தில் உள்ள சித்த மருத்துவ மனைகளை அபிவிருத்தி செய்வதே 2018ஆம் ஆண்டின் மிகப்பெரிய வேலைத் திட்டமாக அமையும் என மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் ஆணையாளர் மருத்துவர் திருமதி. சி.துரைரட்ணம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அடுத்த ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் சித்த மருத்துவம் சார்ந்த மருத்துவமனைகளை அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவை உள்ளது. சித்த மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரித்துச் செல்கின்றன. ஆகவே அவர்களுக்கான சிறப்பான சேவையை நாம் வழங்க வேண்டும். 2015ஆம் ஆண்டு 5 லட்சத்து 99 ஆயிரம், 2016ஆம் ஆண்டு 6 லட்சத்து 98 ஆயிரம் நோயாளிகள் சித்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளனர். வடக்கு மாகாணத்தில் தற்போது 5 சித்த மாவட்ட மருத்துவமனைகளும், 8 ஆயுள் வேத கிராமப் புற மருத்துவமனைகளும் ,62 இலவச சித்த மருந்தகமும் உள்ளன .இவற்றில் கட்டடங்களைச் சீர் செய்தல் .மருத்துவ உபகரணங்களைப் பெற்றுக்கொடுத்தல்,போன்ற தேவைகள் உள்ளன. ஆகவே எதிர்வரும் 2018ஆம் ஆண்டு நிதியாண்டில் இவ்வாறான வேலைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது. இதற்கான அனுமதி மற்றும் நிதி கிடைக்கும் பட்சத்தில் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன. இவ்வாறான செயற்பாடுகளுக்கு 189 மில்லியன் ரூபா வரையில் தேவைப்படும் -என்றார். (21-ரி)

### புலமைப் பரீட்சையில் வெட்டுப்புள்ளியை தாண்டிய ஈ.ரி.எவ். உறுப்பினர்களின் பிள்ளைகளுக்குக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம் ஒக் 20

ஊழியர் நம்பிக்கை பொறுப்புநிதியத்தில் அங்கத்தவர்களாக உள்ளவர்களின் பிள்ளைகளில் நடப்பாண்டில் தரம் 5 புலமைப் பரீட்சையில் வெட்டுப்புள்ளியைத் தாண்டியவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது. ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய சபையினால் இந்த நிதி வழங்கப்படவுள்ளது. நாடு முழுவதும் இருந்து 9ஆயிரம் மாணவர்கள் இந்தத் திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர்.

குறித்த நிதியத்தில் அங்கத்தவர்களாக உள்ளவர்களின் வெட்டுபுள்ளியைத் தாண்டிய பிள்ளைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் இதற்கு விண்ணப்பிக்க முடியும். புலமைப் பரிசில் அலுவலர், புலமை பரிசில்கள் பிரிவு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை கிருள வீதி, நாரஹென்பிட்டி, கொழும்பு 05 என்ற முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்புமாறும், மேலதிக தகவல்களுக்கு பிராந்திய காரியாலயங்களில் தொடர்பு கொள்ளுமாறும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் தலைவர் கேட்டுக்கொண்டுள்ளார். (8.21)

### பாடசாலை மாணவர்களுக்கு இடையூறாக இருந்த

# போர்க்காலத்தில் கைவிடப்பட வாகனங்கள் 8 ஆண்டுகளின் பின்னர் அகற்றப்படுகின்றன

முல்லைத்தீவு, ஒக்.20

போர்க்காலப்பகுதியில் பொதுமக்களால் கைவிடப்பட்டு முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலய வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களை அங்கிருந்து அகற்றும் நடவடிக்கையில் பொலிஸார், இராணுவத்தினர் ஈடுபட்டுள்ளனர். மூன்று நாள்களுள் அந்த வாகனங்கள் அங்கிருந்து அகற்றப்படும் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



போர்க் காலத்தில் கைவிடப்பட்ட வாகனங்கள் முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலய வளாகத்தில் நிறுத்திவைக்கப்பட்டன.

போர் முடிவடைந்து 8 ஆண்டுகளாகியும் அவை மீட்கப்படாத நிலையில் தற்போது உருக்குலைந்து காணப்படுகின்றன. அவற்றைச் சூழ புதர்கள் வளர்ந்தன. இந்தப் புதர்கள் பாடசாலையில் கல்விகற்கும் மாணவர்களுக்குப் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தின. மாணவர்கள் நாளாந்தம் பயத்துடனேயே தமது கற்றல், விளையாட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்தனர்.

அந்த வாகனங்களைப் பாதுகாக்கப் பாடசாலை வளாகத்தில் இராணுவத்தினர் காவலுக்கு வைக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பாகப் பாடசாலை நிர்வாகம், மாவட்டச் செயலாளருக்கும், வடக்கு மாகாணசபை உறுப்பினர் து. ரவிகரனுக்கும் தெரியப்படுத்தியிருந்தது.

2015ஆம் ஆண்டு மாவட்டச் செயலாளரால் முல்லைத்தீவுப் பாதுகாப்புப்படைத் தலைமையகத்துக்கு குறித்த விடயம் கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டது.

ரவிகரன் கடந்த 2016ஆம் ஆண்டு இது தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சருக்குத் தெரியப்படுத்தினார். முதலமைச்சராலும் முல்லைத்தீவு பாதுகாப்புப்படைத் தலைமையகத்துக்குக் கடிதம் மூலம் அறிவித்தல் வழங்கப்பட்டது.

இந்த அறிவித்தல்களால் தீர்வுகள் ஏதும் கிடைக்காத நிலையில், ரவிகரன் மீண்டும் முதல மைச்சருக்கு கடந்த செப்ரெம்பர் மாதம் கடிதம் அனுப்பினார். இதன் படி நேற்று முன்தினம் முதல் குறித்த பாடசாலை வளாகத்தில் உள்ள வாகனங்கள் படையினராலும் பொலிஸாராலும் அங்கிருந்து அகற்றப்படுகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது. இந்த விடயத்தை ரவிகரன் உறுதிப்படுத்தியுள்ளார். (21-ரி3)

# மாகாண மகளிர் அமைச்சின் திட்டங்களுக்கு நிதி இல்லை

## அமைச்சின் செயலாளர் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஒக்.20
வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சுக்கு, புதிதாக இரண்டு திணைக்களங்கள் மட்டுமன்றி போதிய நிதியும் கிடைக்குமாயின் அடுத்த ஆண்டில் மகளிர் விவகார அமைச்சு சிறப்பாக செயற்படும் என்று அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தெரிவித்தார்.

இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் மகளிர் விவகார அமைச்சின் கீழ் சமூக சேவைகள், தொழிற் துறை, கூட்டுறவு அபிவிருத்தி ஆகிய திணைக்களங்கள் உள்ளன. ஆனால் மகளிர் விவகார அமைச்சுக்கு என்று திணைக்களம் இல்லை. அங்கே அதிகமான செயல் திட்டங்களை மேற்கொள்ள வேண்டிய் தேவை உள்ளது. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள், போரினால் பாதிக்கப்பட்டவர்கள் போன்றவர்களுக்கான வாழ்வாதாரத் திட்டங்களை வழங்கல், கடன்களை வழங்கல் போன்ற பல்வேறு நடவடிக்கைகள் நடை பெற்று வருகின்றன.

தேவையின் நிமித்தம் அமைச்சில் உள்ள ஆளணியைப் பயன்படுத்தி செயற்திட்டங்களை மேற்கொள்கிறோம். மகளிர் விவகார அமைச்சுக்குப் புதிதாக இரண்டு திணைக்களங்களை உருவாக்க வேண்டிய தேவை எமக்கு உள்ளது. அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமன்றி, தேவையின் நிமித்தம் அதிகமான செயற்றிட்டங்களை மேற்கொள்ள வேண்டும்.

அதற்கு போதியளவு நிதி வேண்டும். அடுத்த ஆண்டு மேற்கொள்ள வேண்டிய செயல் திட்டங்களை தெரியப்படுத்தி நிதிக்கான கோரிக்கையை முன் வைத்துள்ளோம்.

அந்த நிதி கிடைக்கும் பட்சத்தில் அடுத்த ஆண்டில் இருந்து மகளிர் விவகாரம் தனித்துவமாக விளங்கும் என்றார். (4-ரி)

# காவலூர் ஏ.எஸ்.பி. குறித்து ஐவர் இரகசிய வாக்குமூலம்

யாழப்பாணம், ஒக்.20
ஊர்காவற்றுறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு எதிராக ஐவர் இரகசிய வாக்குமூலமளித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறைப் பகுதியில் நீண்டகாலமாகப் பணியாற்றிய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அங்குள்ள சிலரிடம் கையூட்டு மற்றும் பொருள்களைப் பெற்றதோடு ஊர்காவற்றுறைப் பகுதியில் இருந்து பலரை அழைத்துச் சென்று கண்டியில் வீடுகட்டினார் என அவர் மீது பல குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. சக பொலிஸ் அதிகாரிகளினாலும் அந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. எனினும் அவருக்கு எதிராக எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாது அவர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக அதே பிரதேசத்தில் பணியாற்றிமை தொடர்பில் விசனம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்த விடயம் ஊடகங்கள் வாயிலாக பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. இது தொடர்பில் ஆராயப்படும் என பொலிஸ் மா அதிபர் கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் அந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் கடந்த 15 ஆம் திகதி கொழும்பில் இருந்து வந்த அதிகாரிகள் விசாரணைகளில் ஈடுபட்டனர். அந்த அதிகாரிகள் குழு பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவால் நியமிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் கையூட்டல்களை வழங்கியதாக இனம்கானப்பட்டவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. பொலிஸ் நிலைத்துக்கு அழைத்து விசாரணை செய்யாது தனித்தனியாக இரகசியமாக இந்த விசாரணைகள் இடம்பெற்றன. பொலிஸ் அதிகாரியால் கண்டியில் கட்டப்பட்ட வீட்டுக்கு ஒப்பந்தப் பணி மேற்கொண்டவர், அதற்கான பொருள்களை விநியோகித்தோர், வர்ணம் பூசியவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த விசாரணைகளில் ஐவர் இரகசிய வாக்குமூலம் அளித்துள்ளனர்.

அதில் ஒருவர் மட்டும் குறித்த பொலிஸ் அத்தியட்சகருக்காக மனமுவந்தே வழங்கினேன் எனத் தெரிவித்துள்ளார்.

விசாரணைகள் முடிவடைந்துள்ள நிலையில் அதிகாரிகள் இங்கிருந்து சென்றுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. (21-101)

# பௌத்த மேலாதிக்க சிந்தனையின் அடிப்படையே இடைக்கால அறிக்கை

## கிளிநொச்சி மக்கள் கருத்து

கிளிநொச்சி, ஒக்.20
சிங்கள பௌத்த மேலாதிக்க சிந்தனையின் அடிப்படையிலேயே இலங்கையின் புதிய அரசியலமைப்பு இடைக்கால அறிக்கை உருவாக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சியில் மக்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் அரசியலமைப்புச் சபையின் புதிய அரசியலமைப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பான மக்கள் கருத்தறியும் கலந்துரையாடல் அண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தலைமையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் நடைபெற்றது. இதன்போதே அவர்கள் இவ்வாறு கருத்துரைத்தனர்.

மேலும் தெரிவித்த அவர்கள், மாகாணங்களுக்குரிய அதிகாரங்கள் வழ்ங்கப்பட்டுள்ளதாக ஓரிடத்தில் காட்டி இன்னொரு இடத்தில் அந்த அதிகாரங்கள் அனைத்தையும் கொழும்பு அரசின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பதற்கான ஏற்பாடுகளே அதில் கூறப்பட்டுள்ளன. இது மாகாணங்களுக்கான சுயாட்சி அல்ல. இலங்கையில் இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் போன்ற மதங்களைப் பின்பற்றும் மக்கள் வாழ்கின்ற போதிலும் சிங்கள இனத்தவர்கள் பின்பற்றும் பௌத்த மதத்திற்கே முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. மற்றும் இந்த அறிக்கையில் பயன்படுத்தப்பட்டுள்ள 'ஏக்கிய இராஜ்ஜிய' என்னும் பதம் சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

அந்த அறிக்கையில் சில இடங்களில் நல்ல விடயங்கள் கூறப்பட்டுள்ள போதிலும் அதனை மறுதலிப்பது போல கொழும்பு அரசின் அதிகாரங்கள் காணப்படுகின்றன. இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்கவகையில் வடகிழக்கு இணைக்கப்பட்டு தமிழர் தாயகப் பகுதிகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சுயாட்சி அடிப்படையிலான தீர்வுத் திட்டங்களை முன்வைக்கக் கூடியதாக இலங்கையின் அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்றனர். (21,426)

# நடப்பாண்டின் விவசாயத் திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஒக்.20
நடப்பாண்டில் விவசாயத் திட்டங்கள் பல நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன. விவசாய அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மாவட்டச் செயலகம் ஊடாக இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என மாவட்ட விவசாய அமைச்சின் அதிகாரி திருமதி. கைலேஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடப்பாண்டில் 40 வெங்காயக் கொட்டகைகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் கோப்பாய் , பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய நான்கு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் இருந்து பயனாளிகள் தலா 10 பேர் தெரிவு செய்யப்பட்டனர். அவர்களுக்கே இந்த 40 வெங்காயக் கொட்டகைகளும் அமைத்து வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று நடுகைச் செய்கை திட்டத்தின் கீழ் இரு மாம்பழக் கிராமங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இந்த இரு மாம்பழக் கிராமங்களும் சாவகச்சேரி மற்றும் தெல்லிப்பழைப் பிரதேசங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. அத்தோடு மர நடுகைத் திட்டத்தின் கீழ் 6 ஆயிரம் செவ்விளநீர் தென்னம்பிள்ளைகள் இலவசமாக விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவை விரைவில் வழங்கப்படும். அதேபோன்று 8 ஆயிரம் முருங்கை மரக்கன்றுகள், மாதுளை உள்ளிட்ட பயன்தரு மரங்களும் விநியோகிக்கப்படவுள்ளன. காரைநகர், வேலணைப் பிரதேசங்களில் கத்தாளைச் செய்கை ஊக்குவிக்கப்படவுள்ளது. ஏனெனில் தற்போது கத்தாளைச் செய்கை ஓர் இலாபகரமான விவசாயமாகக் காணப்படுகின்றதோடு ஏற்றுமதி செய்யும் வாய்ப்பும் உள்ளது என்றார். (21-101)

# சந்தை வாய்ப்புத் தொடர்பில் நேரில் சென்று ஆராயப்படுகின்றன

யாழ்ப்பாணம். ஒக்.20
வடக்கு மாகாண விவசாயிகளின் சந்தை வாய்ப்புத் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும், இது தொடர்பான ஆய்வுகள் தற்போது இடம்பெறுகின்றன என மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.

> “ வடக்கு மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாயிகளின் பிரச்சினை தொடர்பில் நேரில் சென்று கலந்துரையாடி வருகின்றோம்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் விவசாயிகளின் பிரச்சினை தொடர்பில் நேரில் சென்று கலந்துரையாடி வருகின்றோம். இதுவரை யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கலந்துரையாடல்களை நிறைவு செய்துள்ளோம். அவர்களின் பிரச்சினைகள் தொடர்பில் நாம் கேட்டறிந்தோம். அவற்றில் விவசாயிகளின் பிரச்சினைகளில் முதன்மையானவை சந்தை வாய்ப்பு இல்லாமை, மற்றும் ஏற்றுமதி தொடர்பான பிரச்சினைகளாகும். வெளி மாவட்டங்களிலும், வெளிநாடுகளிலும் இருந்து மரக்கறி வகைகள் இறக்குமதி செய்யப்படுவதாலும், சில மரக்கறி வகைகள் ஒரே நேரத்தில் அறுவடை செய்யப்படுவதாலும் ,உள்ளூர் விவ்சாயிகள் தமது பொருள்களைச் சந்தைப் படுத்த முடியாமல் உள்ளது. அவ்வாறு உள்ளூர் சந்தைகளில் சந்தைப்படுத்தினாலும், அதற்குரிய விலை கிடைப்பதில்லை. இதனால் உற்பத்திச் செலவை விடக் குறைந்தளவு விலைக்கே விற்பனை செய்யும் நிலை ஏற்படுகின்றது.

ஆகவே இதற்கான தீர்வினைப் பெற்றுத் தரும்படி விவசாயிகள் கோரியிருந்தனர். சந்தைகள் உள்ளூராட்சி சபைகளின் கீழ் வருவதால், அதற்கான அதிகாரிகளுடன் அமைச்சு கலந்துரையாடி உள்ளூர்ச் சந்தைகளை ஒழுங்கு படுத்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அத்துடன் ஏற்றுமதி தொடர்பான விடயங்களில் தனியார் நிறுவனங்கள் அதிகமாகச் செயற்படுகின்றன.

ஆகவே உள்ளூர் விவசாயிகளின் உற்பத்திகளை எவ்வாறு ஏற்றுமதி செய்ய முடியும் என்பது தொடர்பாகவும் ஆராயவுள்ளோம் என்றார். (21-ரி)

# பொலிஸ் அலுவலரின் மனைவியை கொல்ல முயன்றதாகக் குற்றச்சாட்டு

## மாமியும் மச்சாளும் விசாரணைக்குள்

தென்மராட்சி ஒக்.20
கழுத்து இறுகிய நிலையில் பெண் ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் சேர்க்கப்பட்டார். கிளிநொச்சிப் பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றுபவருடைய மனைவியே இவ்வாறு மருத்துமனையில் சேர்க்கப்பட்டார். தனது மாமி, மச்சாள் இருவரும் சேர்ந்து தன்னைக் கொல்ல முயற்சித்தனர் என அவர் மருத்துவமனையில் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

கிளிநொச்சியைச் சேர்ந்த நபர் ஒருவர் மட்டக்களப்புப் பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றியபோது அங்குள்ள பெண் ஒருவரைக் காதலித்துத் திருமணம் புரிந்தார். பொலிஸ் உத்தியோகத்தருடைய பெற்றோர் எதிர்ப்புத் தெரிவித்த போதும் திருமணம் நடைபெற்றது. இவர்களுக்குப் பெண் குழந்தை பிறந்தது. வடக்குக்கு மாற்றம் பெற்றதால் அவர் குடும்பத்துடன் கிளிநொச்சிக்கு வந்தார்.

தனது தாயின் வீட்டில் மனைவி பிள்ளையை விட்டு விட்டே அவர் பணிக்குச் செல்வது வழமை. இந்த நிலையில் உத்தியோகத்தரின் தாயார் அந்தப் பெண்ணைத் தினமும் சீதனம் கேட்டு நச்சரித்தார் என்று அந்தப் பெண் முறையிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை பகல் பெண்ணுடன் கதைத்துக்கொண்டிருந்த மாமியார் தனது மகனுக்குச் சீதனத்துடன் வேறொரு திருமணம் செய்து அந்தத் சீதனப் பணத்தை வைத்து தனது மகளுக்குத் திருமணம் செய்யவுள்ளோம் எனக் கூறினாராம். பின்னர் தனது மகளுடன் சேர்ந்து கையில் வைத்திருந்த துப்பட்டாவினால் கழுத்தை நெரித்துக் கொலை செய்ய முயற்சித்தார் என்று பாதிக்கப்பட்ட பெண் தனது முறைப்பாட்டில் கூறியுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களிடம் இருந்து தப்பித்த பெண் அவரச பொலிஸ் இலக்கமான 119க்கு அழைப்பை ஏற்படுத்தித் தகவலைத் தெரியப்படுத்தினார். அங்கு சென்ற பொலிஸார் பெண்ணைக் காப்பாற்றி சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தனர்.

பெண்ணின் மாமியையும் மச்சாளையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரித்தனர். (21-9)

## தென்பகுதி வானில்

# திடீரெனத் தோன்றிய ஒளிப்பிளம்பு மக்களை அச்சப்படுத்திய பெரும் சத்தம்

கொழும்பு, ஒக். 20
தென்பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு கேட்ட பெரிய வெடிப்புச் சத்தம் மற்றும் திடீரெனத் தோன்றிய ஒளிப் பிளம்பால் மக்கள் மத்தியில் பதற்ற மான நிலை காணப்பட்டது.

இரவு 8.45 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் பெரும் இரைச்சல் மற்றும் வெடிப்புச் சத்தம் கேட்டதுடன், வானத் தில் ஒளிப்பிளம்பும் அவதானிக்கப்பட் டது. மாத்தறை, அக்குரஸ்ஸ, தெனி யாய பகுதி மக்கள் இந்தச் சத்தத்தைக் கேட்டுள்ளனர். மேல் மாகாணத்தில் கரையோரத்தில் வசிக்கும் மக்களில் சிலர், வானத்தில் இருந்து ஒளிப் பிளம்பு தோன்றியதையும் கண்டுள் ளனர்.

தென்மாகாணத்தின் பல பகுதிகளி லும்வசிக்கும்மக்கள். வித்தியாசமான ஒளிப்பிளம்பு மற்றும் ஒலியைக் கேட் டதாக முறையிட்டிருப்பதாக இடர் முகாமைத்துவ நிலைய பேச்சாளர் அத்துல கொடிப்பிலி தெரிவித்தார்.

மாத்தறை, காலிப் பகுதிகளில் கடலை அண்டிய பகுதிகளில் உள்ள மக்கள் சிறிய நில அதிர்வு போன்ற சத்தத்தை யும் உணர்ந்துள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பெரும் இரைச்சலுடன் வெடிப்புச் சத் தம், வானில் காணப்பட்ட ஒளிப்பிளம் பால் தென்மா காண மக்கள் பதற்றமாகக் காணப்பட்டனர்.



இந்தச் சம்பவம் நிகழ்ந்த போது, தென்பகுதி வானில் எந்த வானூர்திகளும் பயணம் செய்ய வில்லை என்று வானூர்திப் போக்குவரத்து அதிகார சபையினர் உறுதிப்படுத்தி யுள்ளனர்.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட கொழும்பு பல்கலைக்கழக பௌதிக விஞ்ஞான பீடத்தின் பேராசிரியர் சந் தன ஜெயரத்ன, 'விண்கல் ஒன்றி னால் ஏற்பட்ட வெடிப்புச் சத்தமாக அது இருக்கக் கூடும். இதுபோன்ற வெடிப்புகள், 'நெருப்புப்பந்து வெடிப்பு' என்று அழைக்கப்படுகிறது. விண்கல் பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழைந்ததும் ஏற்படுகிறது.

இந்த விண்கல் 50 சென்ரி மீற்றர் அளவுடையதாக இருக்கலாம். ஒவ் வொரு விண்கல்லும், பூமியின் வளி மண்டலத்துக்குள் செக்கனுக்கு 65 கிலோ மீற்றர் வேகத்தில் பிரவேசிக் கும். அதிக வேகத்தால் வளிமண்ட லத்துக்குள் நுழைந்ததும், வெப்பத்தி னால் வெடித்துச் சிதறும். அதனால் தான் வெடிச்சத்தம் எழுகிறது.

வெவ்வேறு நிற ஒளியுடன், விண்கல் நுழைந்ததை மக்கள் பார்த்துள்ள னர். பெரும்பாலானவர்கள் பச்சை நிறத்திலும், மஞ்சள் நிறத்திலும் கண் டுள்ளனர். இந்த வெடிப்புச் சேதங் களை ஏற்படுத்தக் கூடும். அதிர்ஷ்ட வசமாக, சிறிய துண்டுகளாக உடைந் துள்ளது. விண்கல்லின் பாகங்களை மக்கள் தொடக் கூடாது. அதில் கதிரி யக்க தாக்கங்கள் இருக்கக் கூடும். அதனால் மனித உடலுக்கு பாதிப்பு ஏற்படும். இனந்தெரியாத பக்ரீரியாக் கள் அதில் இருக்கும், என்றும் அவர் எச்சரித்துள்ளார். (5)

## மன்னாரில் சிறைச்சாலை: அமைச்சரவை அனுமதி

மன்னாரில் சிறைக்கூடம் அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் மன் னாரில் சிறைக்கூடம் அமைப் பதற்கான பத்திரத்தை அமைச்சர் சுவாமிநாதன் சமர்ப்பித்திருந் தார்.

வவுனியா சிறைச்சாலையில் இருந்து 85 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மன்னார் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படும் சந்தேகநபர்கள். தற்காலிகமாக, சுங்கத் திணைக் கள அறை ஒன்றிலேயே தற் போது தடுத்து வைக்கப்படுகின்ற னர். அதில் போதிய வசதிகள் கிடையாது.

இதனைக் கருத்திற்கொண்டு, உப்புக்குளம் தெற்கு கிராம அதி காரி பிரிவில், புதிய சிறைக்கூடம் அமைக்கத்திட்டமிடப்பட்டுள்ளது. மன்னார் நீதிமன்ற வளாகத் துக்கு அண்மையாக இந்தச் சிறைக்கூடம் அமைக்கப்படவுள் ளது. (5)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

15.10.2017
ஞாயிற்றுக்கிழமை
யாழ்.இந்துவில் நடைபெற்ற
தமிழ்த்தின கலை, கலாசார
விழாவில்
கல்வி இராஜாங்க அமைச்சர்
உயர்திரு வி.எஸ்.
இராதா கிருஷ்ணன்
அவர்களிடம் இலக்கிய விருது
பெற்ற " கோப்பாய் சிவம்"
அவர்களைப் பாராட்டி வாழ்த்தி
மகிழ்கிறோம்.



நீர்வேலி அந்தணர்கள் சார்பில்
சிவஸ்ரீ இ.சுவாமிநாதக்குருக்கள்,
கந்தசுவாமி கோயில், நீர்வேலி.

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**திருநாவுக்கரசு சிவசண்முகநாதன்**
அவர்கள் 19.10.2017 வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் யாழ்.மாவட்ட சமாதான நீதிவா-னாக சத்தியப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். இவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கணிதமாணி பட்டத்தையும் கல்வியியலின் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பட்டத்தையும் பெற்றவர். இவர் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் 30 வருடகாலமாக ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவர் சுழிபுரம் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணப் பிரதேசங்களில் பல சமூக சேவைகளில் ஈடுபட்டு வருகின்றார். அவரின் சேவை மேலும் மக்களுக்குக் கிடைக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள்.
"மலரகம்", சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.

## சாட்சிக்கு அச்சுறுத்தல்: விசாரணை ஆரம்பம்

கொழும்பு, ஒக். 20
முன்னாள் அமைச்சர் ஒருவருக்கு நெருக்கமான நபரால் முறிகள் விநியோகம் தொடர்பில் அரச தலைவர் ஆணைக் குழு முன்னிலையில் சாட்சியமளித்த பெண்ணுக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட சம்பவம் குறித்து குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணை களை ஆரம்பித்துள்ளது.

முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பில் விசா ரணை செய்யும் அரச தலைவர் ஆணைக்குழு வில் சாட்சியமளித்த பெண் சாட்சியாளருக்கு முன்னாள் அமைச்சருடன் நெருங்கிய தொடர் புள்ள ஒருவர் கொலை மிரட்டல் விடுத்தமை ஆணைக்குழு முன்னிலையில் தெரியவந்தது. சட்ட மா அதிபர் திணைக்களம் கடந்த 17ஆம் திகதி இந்த விடயத்தை ஆணைக்குழுவில் அறி வித்தது.

இதனையடுத்து, அரச தலைவர் ஆணைக்குழு விசார ணைகளை ஆரம்பிக்குமாறு உத்தரவிட்டிருந்தது. குற்றப் புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை தொடங் கியுள்ளது. (5)

**தேவை**
கனரக வாகன சாரதி
தேவை.
தொடர்புகளுக்கு :- 077 101 1111

**விற்பனைக்கு**
Restaurant பொருள்கள்
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :- 077 101 1111

### அரசமைப்புத் தொடர்பில்

# சட்டத்தரணிகள் சங்க நிலைப்பாடு திங்களன்று தெரியவரும்

கொழும்பு, ஒக். 20
புதிய அரசமைப்பு முன்மொழிவு சம்பந்த மாக சட்டத்தரணிகளின் கருத்துக்களை பெறுவதற்காக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் சிறப்புப் பொதுக் கூட்டம் எதிர் வரும் திங்கட்கிழமை இடம்பெற உள்ளது.

சிறப்புப் பொதுக் குழுக் கூட்டம் குறித்து அனைத்து உறுப்பினர்களுக்கும் அறிவிக் கப்பட்டிருப்பதாக அந்தச் சங்கத்தின் தலை வர் அரச தலைவர் சட்டத்தரணி யூ.ஆர்.டி சில்வா கூறினார்.

புதிய அரசமைப்பு முன்மொழிவின் வரைவு மும்மொழிகளிலும் இலங்கை சட்டத்தரணி கள் சங்கத்துக்குக் கிடைத்திருப்பதாகவும், அதன் உள்ளடக்கங்கள் சம்பந்தமாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிலைப்பாடு அந்தப் பொதுக் குழுக் கூட்டத் தின் பின்னர் அறிவிக்கப்படும் என்று சட்டத் தரணி யூ. ஆர். டி சில்வா கூறினார். (5)

MAJESTIC
CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




மஜெஸ்டிக் ப்ளாட்டினம் | சில்வர் | ப்ரொன்ஸ் 3D
10.30 / 1.30 / 4.30 / 7.30
வெள்ளி/சனி 10.00 PM
விசாரணை 021- 2227712
Find us on facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

MEMORY MAP
මතකයට ඔබක් | நினைவலைகள்

இரக்கம், பொறுமை ஆகியவை மானிடத்தின் பிரிக்கமுடியா பண்புகள். இவற்றின் மூலம் ஒரு வன்முறையற்ற சமூகத்தைக் கட்டியெழுப்போவோம்

நினைவலைகள் : வெள்ளி @ 6.00pm - 6.30pm @ Channel Eye (Nethra )- 20th October 2017 and SLBC Tamil National Service (101.1 / 101.3FM) on Friday @ 7.30pm - 8.00pm on 20th October 2017

திறப்பு விழா அழைப்பு

Prop. Mrs.N.Baama

SindeRla
Beauty Fashion

என்னும் அழுக்கலை நிலையம்
இன்று (20.10.2017) வெள்ளிக்கிழமை
மு.ப. 10.00 மணிமுதல் 10.15 மணிவரை
உள்ள சுபவேளையில்
இல.1018, கே.கே.எஸ் வீதி,
அரசடிச் சந்தி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரியில் மங்கலகரமாக
திறந்து வைக்கப்படுகின்றது.

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்
திரு.திருமதி கண்ணன் பாமா
0777742628 / 021 222 9126

# தென்கொரியாவுடன் நெருக்கமாகும் தொடர்புகள்

கொழும்பு, ஒக். 20

வடகொரியாவுக்கு எதிராகத் தடைகளைவிதித்துள்ள இலங்கைஅரசு, தென்கொரியாவுடனான உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளும் முயற்சியில் இறங்கியுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அடுத்த மாதம் தென்கொரியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார். இதன்போது அந்த நாட்டுடனான உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளது. இதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

ஐ.நா. சபையினதும், உலக நாடுகளினதும் கடும் எச்சரிக்கையையும் மீறி வடகொரியா அணுவாயுதப் பரிசோதனை நடத்தி வருவதால் அந்த நாட்டுக்கு எதிராக உலக நாடுகள் தடைவிதித்துள்ளன. இலங்கையும் அந்தப் பட்டியலில் இணைந்துள்ளது.

தென்கொரியாவுடனான உறவுகளை நெருக்கமாக்கிக் கொள்வதற்கு இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. (5)

# தொடருந்துகளுடன் தம்படம் பத்து மாதங்களில் 24பேர் சாவு!

கொழும்பு, ஒக். 20



தொடருந்து மற்றும் தொடருந்துப் பாதைகளில் அலைபேசிகளைப் பயன்படுத்தி தம்படம் (செல்பி) எடுக்க முற்பட்ட 24பேர் சாவடைந்துள்ளனர். இந்த ஆண்டின் முதல் பத்து மாதங்களிலேயே இந்தச் சாவுகள் பதிவாகியுள்ளதாக வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபையின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டு நடந்த தொடருந்து விபத்துக்கள் தொடர்பாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடருந்துக் கடவைகளில் 84 விபத்துக்கள் நடந்துள்ளன. வாகனங்கள் தொடருந்துக் கடவைகளில் மோதிய சம்பவங்களால் 506 தொடருந்துக் கடவைகள் சேதமடைந்துள்ளன.

பயணிகள் தொடருந்திலிருந்து விழுந்தமை தொடர்பான 76 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

தொடருந்துப் பாதைகள் மற்றும் தொடருந்துப் பாதையை கடந்து சென்ற போது 436 பேர் விபத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த விபத்துக்களில் 256 பேர் காயமடைந்துள்ளதுடன் 180 பேர் உயிரிழந்துள்ளனர். (5)

# நான்கு உதிரிக்கட்சிகள் பசிலுடன் இணைந்தன!

கொழும்பு, ஒக். 20

சிறிலங்கா பொதுஜன முன்னணியுடன் மேலும் 4 கட்சிகள் இணைந்துள்ளன.

முன்னாள் பிரதி அமைச்சரான கருணா என்று அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் தலைமையின் கீழ் இயங்கும் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியும் இதில் அடங்கும்.


மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் தலைவர் சோமவன்ச அமரசிங்கவின் மக்கள் தொழிலாளர் கட்சி, சிறிலங்கா முற்போக்கு முன்னணி மற்றும் சிறிலங்கா லிபரல்க் கட்சி ஆகிய கட்சித் தலைவர்கள், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவைச் சந்தித்து, பொதுஜன முன்னணியில் இணைந்து செயற்பட விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் கொழும்பு நெலும் மாவத்தையில் அமைந்துள்ள சிறிலங்கா பொதுஜன முன்னணியின் அலுவலகத்தில் பசில் ராஜபக்சவைச் சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, மலையகத் தேசிய முன்னணி எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் சிறிலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்து போட்டியிட விரும்பம் தெரிவித்திருந்தது. கடந்த அரச தலைவர் மற்றும் பொதுத் தேர்தலில் மலையகத் தேசிய முன்னணி தற்போதைய அரசின் வெற்றிக்காக உழைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (5)

## மரண அறிவித்தல்கள்

### வீரசிங்கம் மகாலிங்கம்



வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட வீரசிங்கம் மகாலிங்கம் 18.10.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம் - அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராசமணி, பாலசிங்கம், தனபாலசிங்கம், அகிலகலாதேவி, மலைமகாதேவி மற்றும் செல்லத்துரை, துரைரட்ணம், அனந்தினி தேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுவன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வைரவர் கோயிலடி,**
**கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

**077 353 7126**

### கந்தர் தங்கராஜா



யாழ்.கோவிலாக்கண்டியை பிறப்பிடமாகவும், நல்லூர் கன்னாதிட்டியை வசிப்பிடமாகவும், மலேசியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தர் தங்கராஜா 18.10.2017 புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்க ளான கந்தர் - வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு புதல்வனும், இந்திராணியின் பாசமிகு கணவரும், லக்சனா, சுலக்சனா, ருசாந்தினி, சத்தியஜித் ஆகியோரின் அன்புத் தந்தையும், பாலசங்கர், சஞ்சீவன், வீரகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், புருஷோத்தமன், துவாரகன், கஜவர்த்தனன், சாந்தசொரூபினி, இனியவர்சன், இசாலிதா ஆகியோரின் அன்புப் பேரனும், நாகம்மா, தம்பிராசா, பொன்னம்மா, பொன்மணி, சந்திரன், வேதராணி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 22.10.2017 ஞாயிற்றுக்கிழமை மலேசியாவில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பாடசாலை வீதி,**
**நாவற்குழி, கைதடி.**

**தகவல் :**
**க.சந்திரன் (சகோதரன்)**

கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்
வெளிப்படுத்தல் 14 13

பிறப்பு 10 . 01 . 1932



இறப்பு 19 . 10 . 2017

### தம்பிராசா தவமணிதேவி

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட தவமணிதேவி தம்பிராசா 19.10.2017 வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துக்குமார் தம்பிராசாவின் அன்பு மனைவியாரும், அன்ரன் (பிரான்ஸ்), குமாரி (பிரான்ஸ்), றெயிஸ்யுவராஜ், யூட்ரதன், அலெக்ஸ்மதன்ராஜ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், பெனடிக் (பிரான்ஸ்), நிலானி ஆகியோரின் அன்பு மாமியும், பிரசன்னா, அஞ்சலா, சங்கீத், சஞ்ஜய், விதுசன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைக் கூட்டம் இன்று (20.10.2017) வெள்ளிக்கிழமை காலை முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அன்னாரின் பூதவுடல் பிப்பிலி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**71, உடுவில் வீதி,**
**மானிப்பாய்.**

தகவல்:
**மதன் நிலானி**

021 225 5089

# அம்பாந்தோட்டையின் அரசியலுக்காகவே மகிந்த அணி போராட்டம் நடத்தியது

## மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 20

மத்தள வானூர்தி நிலையம் தொடர்பாக அரசு இன்னமும் எந்த முடிவையும் எடுக்கவில்லை என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். மகிந்த அணி வானூர்தி நிலையத்துக்காகப் போராட்டம் நடத்தவில்லை. அம்பாந்தோட்டையின் அரசியலுக்காகவே நடத்தப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மத்தள வானூர்தி நிலையத்தில் தனியார் முதலீடுகள் தேவை என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது. கடுமையான இழப்புகளின் மத்தியிலேயே இந்த வானூர்தி நிலையம் இயங்கிக் கொண்டிருக்கிறது. இழப்புகளை ஈடுசெய்யவும், பணியாளர்களுக்கு ஊதியம் கொடுக்கவும், அதனை முழுமையாக இயக்குவதற்கும் தனியார் முதலீடுகள் தேவை.

எனினும் வானூர்தி நிலையம் தொடர்பாக இன்னமும் இறுதியான எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

இது மகிந்த அணிக்கு நன்றாகவே தெரியும். இருந்தாலும், அவர்கள் அண்மையில் இந்திய நிறுவனத்துக்கு வானூர்தி நிலையத்தை விற்கப் போவதாகக் கூறி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை அம்பாந்தோட்டையில் நடத்தினார்கள்.

அவர்களின் போராட்டம் வானூர்தி நிலையத்துக்காக அல்ல. அது அம்பாந்தோட்டையின் அரசியலுக்காக நடத்தப்பட்டது, என்றும் தெரிவித்துள்ளார். (5)

# கொலை முயற்சி வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 20

மாலைதீவின் முன்னாள் அரச தலைவர் கொலைமுயற்சி தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கைக் கொழும்பு பிரதான நீதிவான் மன்றம் நவம்பர் 24ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

கொலைமுயற்சியுடன் இலங்கையர்கள் இருவர் தொடர்புபட்டுள்ளமை தொடர்பில் அந்த நாட்டு அரசால் விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க நீதி அமைச்சால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

கொழும்பு பிரதான நீதிவான் லால் ரணசிங்க பண்டார முன்னிலையில் வழக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, வழக்குடன் தொடர்புடையவர் என்று பெயர் குறிப்பிடப்பட்டுள்ள நபர் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்று அவரின் சட்டத்தரணியால் மன்றுக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்தே நவம்பர் 24ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மாலைதீவின் முன்னாள் அரச தலைவர் 2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் மாலைதீவில் வைத்து படுகொலை செய்யத் திட்டமிடப்பட்டமை தொடர்பில் அந்த நாட்டின் உப அரச தலைவர் அஹமட் அதீப் கைது செய்யப்பட்டிருந்தார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்தே இதனுடன் இலங்கையர்கள் இருவர் தொடர்புபட்டுள்ளனர் என்றும், இது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்குமாறும் மாலைதீவு அரசு விடுத்த கோரிக்கைக்கமையவே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (5)

## மரண அறிவித்தல்

### மனுவேற்பிள்ளை கிறிஸ்ரியோசப்

Old Boy: J/St.Hentri College, J/Victoriya College University of Jaffna Faculty of Management (1989 Batch) Community Development Officer - (CDO)
(Former - Mullaitivu) Mn/Nanaddan, Chilawathurai ACLG Officer - Mannar



**பிறப்பு 17.05.1963** **இறப்பு 18.10.2017**

யாழ்ப்பாணம், சில்லாலையைப் பிறப்பிடமாகவும், வவுனியா, உக்கிளாங்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மனுவேற்பிள்ளை கிறிஸ்ரி யோசப் 18.10.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு .திருமதி மனுவேற்பிள்ளை - சலோமைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகனும், திரு.திருமதி நாகராசா - தவமணி ஆகியோரின் அன்பு மருமகனும், ஜெய ரஞ்சினியின் (ஆசிரியை - வ/கல்லாறு சிறி சித்தி விநாயகர் வித்தியாலயம், வ/கங்கங்குளம் சிறி சுப்பிரமணியம் வித்தியாலயம், முன்னாள் ஆசிரியை பூவரசங்குளம் மகா வித்தியாலயம்) அன்புக் கணவரும், நிரோசா (மாணவி - மகாவலி தேசிய கல்வியல் கல்லூரி), கிருசாந், அனுசாந் (மாணவர் - வ/விபுலானந்தக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மலர் - பொஸ்கோ (கனடா), அன்ரன் ஜோசப் (பிரான்ஸ்), காலஞ்சென்ற இந்திரா, யோகராணி - தேவதாஸ், ஜஸ்ரின் ஜோசப் (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ராகினி (இளைப்பாறிய விடுதித் தாதி - யாழ்ப்பாணம்), மோகனேஸ்வரன் (ஓய்வுநிலை உத்தியோகத்தர் - யாழ்.பல்கலைக்கழக நூலகம்), விமலநாதன் (ஜேர்மனி), கோமதி (ஜேர்மனி), பிறேமினி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்க ஆராதனைக்கு 22.10.2017 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வேப்பங்குளம் புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நெளுக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**137/3, கனறா கொன்வன்ற் லேன்,**
**உக்கிளாங்குளம், வவுனியா.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**024 492 0378, 077 482 4603**

## மணமகள் தேவை

1992. 8இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு மணமகள் தேவை. 3 மாதங்களில் U.K செல்ல உள்ளார்.

**076 671 0542**

## வீடு வளவு விற்பனைக்கு

பலாலி வீதியில், கோண்டாவிலில் 5 பரப்பில் வீடு வளவு விற்பனைக்குண்டு.

**075 639 7886**

## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் - நயினாதீவு

**முற்றுப்பெறாத இரு வீடுகளைப் பூர்த்தி செய்தல், மாட்டுத் தொழுவம் அமைத்தல், நீர்த்தாங்கி கட்டுதல் போன்ற வேலைகளுக்கான**

**<u>கூலிக்குரிய கேள்வி கோரல்</u>**

மேற்படி வேலைகளுக்காக இத்தால் கூலிக்குரிய கேள்வி கோரப்படுகின்றது.

- கேள்வி கோரலுக்கான படிவங்களை கோயில் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
- பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்களை கோயில் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்வி கோரல் பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது **"செயலாளர், ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு"** எனும் முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- தபால் மூலம் அனுப்பும் போது தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் " கேள்வி கோரல் " எனக் குறிப்பிட்டு 05.11.2017 திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்க கூடியதாக அனுப்பி வைக்க வேண்டும்.
- கேள்விப்பத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முடிவுக்காலம் - 05.11.2017 பி.ப.5.00 மணி ஆகும்.

**அன்னையின் பணியில்**
**நா.கோபாலகிருஷ்ணன்**
**செயலாளர்,**
**அறங்காவலர் சபை**
**ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு.**

## யாழ் நகரில் இயங்கும் முன்னணி

# Food City ஆன அன்னை நாகா பூட் சிற்றி



**அசத்தலான பண்டிகைக்கால விசேட சலுகைகள்**

**17.10.2017 தொடக்கம் 23.10.2017 வரை**

**ரூ.5000/= இற்கும் மேல் கொள்வனவு செய்யும் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்படும்.**



**அன்னை நாகா பூட் சிற்றி**

**175, K.K.S.Road. Jaffna.**
**021 739 0192,**
**021 739 0194**

**341, Pointpedro Road, Nallur.**
**021 221 7515**

## The Thinnai

Rest Relax Reunite
An All-Suite Boutique Hotel

**அண்மையில் ஆரம்பிக்கப்பட்ட எமது துலா உணவுச்சாலையில் பல்வேறு தரமான சுவை நிறைந்த சிற்றுண்டி மற்றும் தின்பண்ட வகைகளை குறைந்த விலையில் த திண்ணை ஹோட்டலில் பெற்றுக்கொள்ள முடியும்.**

**Bread Selection -**
பாண் வகைகள்

| | |
|---|---|
| Rye Bread (300 gram) | - LKR 195 |
| Rossana Bread (300 gram) | - LKR 240 |
| Corn Pepp Bread (275 gram) | - LKR 264 |
| Multigrain Bread (275 gram) | - LKR 180 |
| Garlic French Bread (300 gram) | - LKR 135 |
| Sesame French Bread (300 gram) | - LKR 135 |
| Plain Bread | - LKR 150 |
| Brown Bread | - LKR 175 |

**Short Eats (Non-vegetarian)**
சிற்றுண்டி வகைகள் (அசைவம்)

| | |
|---|---|
| Chicken Puff | - LKR 80 |
| Chicken Hot Dog | - LKR 150 |
| Chicken Roll | - LKR 75 |
| Mutton Puff | - LKR 125 |
| Fish Roll | - LKR 75 |
| Fish Patty | - LKR 60 |
| Egg Roll | - LKR 75 |

**Cake by Kilo –** கேக் வகைகள் (கிலோ படி)

| | |
|---|---|
| Black Forest Cake | - LKR 2,500 |
| Opera Cake | - LKR 2,750 |
| Red Velvet Cake | - LKR 3,500 |
| Chocolate Cake (Normal) | - LKR 1,250 |
| Chocolate Cake (with Chocolate Mousse) | - LKR 3,000 |
| Coffee Cake | - LKR 1,500 |
| Caramel Cake | - LKR 1,500 |
| Fruit Cake | - LKR 1,250 |
| Eggless Fruit Cake | - LKR 1,400 |
| Ribbon Cake | - LKR 1,400 |
| Chocolate Swiss Roll | - LKR 1,500 |
| Butter Cake | - LKR 1,250 |
| Banana Cake | - LKR 1,000 |

*மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலைகள் ஒரு கிலோவிற்கானவை

**Sweets by Slice –**
இனிப்புப் பண்டங்கள் (ஒரு துண்டு)

| | |
|---|---|
| Opera Cake | - LKR 140 |
| Chocolate Fudge | - LKR 140 |
| Fruit Cake | - LKR 100 |
| Butter Cake | - LKR 100 |
| Brownie | - LKR 150 |
| Danish | - LKR 75 |
| Caramel Éclair | - LKR 100 |
| Chocolate Éclair | - LKR 100 |

**Baked Fresh Muffins**

| | |
|---|---|
| Almond Muffin | - LKR 100 |
| Banana Muffin | - LKR 100 |
| Chocolate Muffin | - LKR 100 |
| Plain Muffin | - LKR 100 |

**Dessert by Cup**

| | |
|---|---|
| Cream Caramel | - LKR 150 |
| Watalappam | - LKR 150 |
| Chocolate Mousse | - LKR 200 |

**Ice Cream Selection**

வழமையான **Chocolate** மற்றும் **Vanilla** சுவைகளுடன் புதிய பனம் பழ மற்றும் நெல்லிச் சுவைகளிலும் கிடைக்கிறது.

| | |
|---|---|
| Cone (Small) | - LKR 60 |
| Cone (Large) | - LKR 80 |

**Short Eats (Vegetarian) –**
சிற்றுண்டி வகைகள் (சைவம்)

| | |
|---|---|
| Vegetable Puff | - LKR 75 |
| Vegetable Patty | - LKR 60 |
| Vegetable Roll | - LKR 60 |
| Vegetable Roti | - LKR 60 |

**திறந்திருக்கும் நேரம் - காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை**




**உங்கள் வீட்டு நிகழ்வுகளுக்குத் தேவையான சிற்றுண்டி மற்றும் தின்பண்ட வகைகளையும் மதிய உணவுப் பொதிகளையும் முன்பதிவு செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.**

"Kiddies pool available at the Solai Veedhi on Saturdays, Sundays, Poya days and public holidays from 10.00 am to 4.00 pm for customers who visits the Thulaa café". You could also "Come with your loved ones and enjoy the great atmosphere at The Thinnai".

86, Palaly Road, Thirunelveli, Jaffna, Sri Lanka
T+ 94 21 20 30 400 | E info@thethinnai.com | W www.thethinnai.com

# நாமல் கூறிய கடிதம் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும்



கொழும்பு, ஒக். 20
நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தொடர்பில் நான் வெளியிட்டதாகக் கூறப்படும் கடிதம் பற்றிய உண்மைத் தன்மையை வெளிப்படுத்தவேண்டிய பொறுப்பு சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு உள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச்செயலர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
மகிந்த அணியால் அம்பாந்தோட்டையில் கடந்த வாரம் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்களுக்குப் பிணை கொடுக்க வேண்டாம் என்று அமைச்சர் மகிந்த அமரவீர நீதிமன்றத்துக்கு கடிதமொன்றை அனுப்பியிருந்ததாக நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும குற்றம் சுமத்தியிருந்தார்.
இந்தக் குற்றச்சாட்டு பதிலளிக்கையிலேயே, மகிந்த அமரவீர மேற்கண்டவாறு கூறியுள்ளார். இந்தக் கடிதம் தொடர்பில் உண்மை கண்டறியப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். (5)

# இன்று நள்ளிரவிலிருந்து தொடருந்துகள் ஓடாது

கொழும்பு, ஒக். 20
தொடருந்துச் சாரதிகள், தொடருந்து நிலைய அதிபர்கள் மற்றும் தொடருந்து கட்டுப்பாட்டாளர்கள் இன்று நள்ளிரவு தொடக்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக, தொடருந்துப் பொறியியலாளர் சங்கத்தின் செயலர் இந்திக தொடங்கொட தெரிவித்தார்.
கடந்த செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி தலைமை அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சில் இணங்கிய படி 300 ரூபா சம்பளக் கொடுப்பனவு இந்த மாதச் சம்பளத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை என்பதால் ஏகமனதாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
இந்த மாதச் சம்பளம் இருந்ததை விடக் குறைவடைந்துள்ளதாகவும், தலைமை அமைச்சரின் உத்தரவு நிறைவேற்றாத காரணத்தாலும் இந்த வேலை நிறுத்தத்தை முன்னெடுக்கத் தீர்மானித்ததாக அவர் மேலும் கூறினார். (5)

# 6 லட்சம் தேங்காய்கள் பதுக்கல்

கொழும்பு, ஒக். 20
மொத்த விற்பனையாளர்கள் சிலர் சுமார் 6 லட்சம் தேங்காய்களைப் பதுக்கி வைத்துள்ளமை தெரியவந்துள்ளதாகத் தென்னை அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் கபில யகன்தாவல குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
அவ்வாறான வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. அரசின் கையிருப்பிலுள்ள தேங்காய்களை 60 ரூபாய் என்ற கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்வதற்கு கடந்த சில வாரங்களுக்கு முன் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.
இதனையடுத்து தேங்காய் மொத்த விற்பனையாளர்கள் சிலர் தேங்காய்களைப் பதுக்கியுள்ளனர் - என்றார். (5)

# இலங்கையுடனான பேச்சில் காஷ்மீர் விவகாரமும் எதிரொலிப்பு

கொழும்பு, ஒக். 20
பாகிஸ்தான், இலங்கைக்கு இடையிலான அயலுறவுத் துறைச் செயலர்கள் மட்டத்திலான ஐந்தாவது சுற்று அரசியல் கலந்துரையாடல்களின் போது, காஷ்மீர் விவகாரம் தொடர்பாகவும் பேசப்பட்டுள்ளது.
இலங்கைக் குழுவுக்கு அயலுறவுத்துறைச் செயலர் பிரசாத் காரியவசமும், பாகிஸ்தான் குழுவுக்கு அந்த நாட்டின்அயலுறவுத்துறைச் செயலர் தஹ்மினா ஜன்ஜுனாவும் தலைமை தாங்கினர்.
இந்தப் பேச்சுத் தொடர்பில் பாகிஸ்தான் தூதரகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.
அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
முக்கியத்துவம் வாய்ந்த எல்லாத் துறைகளிலும், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்திக் கொள்ள இணக்கம் காணப்பட்டுள்ளது.
வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, கல்வி, விஞ்ஞானம் தொழில்நுட்பம், கலாசாரம், சுற்றுலா, குடிவரவு விவகாரங்கள் உள்ளிட்ட விடயங்களில் ஒத்துழைப்புத் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.
இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உடன்பாடுகள், புரிந்துணர்வு உடன்பாடுகளை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்க, கூட்டுப் பணிக் குழுக்களை உருவாக்கவும் இருதரப்பும் இணங்கியுள்ளன. சுதந்திர வர்த்தக உடன்பாட்டை விரிவுபடுத்திக் கொள்வதற்கும் இருநாடுகளும் இணங்கியுள்ளன.
இந்திய ஆக்கிரமிப்பில் உள்ள ஜம்மு காஷ்மீரில், அப்பாவி காஷ்மீர் மக்களுக்கு எதிராக, இந்திய ஆக்கிரமிப்புப் படைகள், மோசமான மனித உரிமை மீறல்களை மேற்கொண்டு வருவதாக, பாகிஸ்தான் அயலுறவுத்துறைச் செயலர் இந்தக் கலந்துரையாடலின் போது சுட்டிக்காட்டியிருந்தார்.
இந்தக் கொடுமைகளை நிறுத்துமாறும், ஐ.நா. பாதுகாப்புச் சபை தீர்மானங்களுக்கு அமைய, ஜம்மு காஷ்மீர் பிரச்சினைக்கு விரைவாகத் தீர்வு காணப்படவேண்டும் என்றும் இந்தியாவுக்குப் பன்னாட்டுச் சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அவர் இதன்போது வலியுறுத்தியுள்ளார்.
இலங்கை பாகிஸ்தான் இடையிலான அடுத்த அரசியல் கலந்துரையாடலை 2018ஆம் ஆண்டு ஒக்ரோபரில் இஸ்லாமாபாத் நகரில் நடத்தவும் இணக்கம் காணப்பட்டுள்ளது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)

## நள்ளிரவு முதல் அரிசி விலை குறைப்பு

லங்கா சதொச விற்பனை நிலையங்களில் விற்கப்படும் சம்பா அரிசியின் விலை இன்று (நேற்று) நள்ளிரவு முதல் குறைக்கப்படும் என்று சதொச நிறுவனத்தின் தலைவர் பேராசிரியர் டி.எம்.கே.பி. தென்னகோன் தெரிவித்தார்.
தற்போது 84 ரூபாவுக்கு விற்கப்படும் சம்பா அரிசி நள்ளிரவு முதல் 80 ரூபாவுக்கு விற்கப்படும். வெள்ளை அரிசி கிலோ 65 ரூபாவுக்கும், நாட்டு அரிசி கிலோ 73 ரூபாவுக்கும், உடைந்த அரிசி கிலோ 60 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படவுள்ளன. (5)

# 50 வீதத்துக்கும் மேற்பட்ட பெண்கள் வன்முறைக்குள்

கொழும்பு, ஒக். 20
இலங்கையிலுள்ள பெண்களில் பாதிக்கும் மேற்பட்டோர் ஏதாவது ஒருவகையான வன்முறையை அனுபவித்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
இந்தப் பிரச்சினை குறித்த பகிரங்க பொதுக் கலந்துரையாடலில் நடத்தப்படாமை பெரிய குறைபாடாக உள்ளது. இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் டுங் லாசே மார்கியு தெரிவித்துள்ளார்.
பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான பன்னாட்டுத் தினத்தைக் குறிக்கும் நோக்குடன் ஐரோப்பிய ஒன்றியத் தூதுக் குழுவால் காணொலி தயாரிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடக சந்திப்பு கொழும்பில் நடைபெற்றது.
இந்தச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்தாவது:
பாடசாலைகளில் சிறுவர்களுக்கு நன்கு கற்பித்தல் மற்றும் தகவலறிவித்தலிலிருந்து பெண்கள் மற்றும் சிறுமியருக்கு எதிரான வன்முறையைத் தடுத்தல் ஆரம்பமாகின்றது.
பெண்களின் உரிமைகளுக்கான தூதுவர்களாகுவதற்கு குமார் சங்கார மற்றும் மகேல ஜெயவர்தன ஆகியோர் இணக்கம் தெரிவித்தபோது நாம் மகிழ்வுற்றோம். ஆழமாக வேரூன்றியுள்ள பிரச்சினைகள் பற்றிய அத்தகைய முன்மாதிரிகளிடமிருந்து இலங்கை ஆண்கள் செவிமடுக்கவேண்டியது மிகவும் முக்கியமாகும் - என்றார். (5)

அந்தியேட்டி வீட்டுகிருத்திய அழைப்பு



கடந்த 20.09.2017 புதன்கிழமை
சிவபதம் அடைந்த
அமரர்
ஆனந்தராசா
நாகம்மா
தோற்றம்
10.07.1946
மறைவு
20.09.2017

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (20.10.2017) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நாகநாதன் வீதி,
கொடிகாமம்.
குடும்பத்தினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்



தோற்றம்
30 . 12 . 1927
மறைவு
20 . 09 . 2017

அமரர் பொன்னம்மா கார்த்திகேசர்

அன்பினை எமக்கூட்டி அரவணைத்து வழிகாட்டி
பார் போற்றும் மக்களாய் பாரினில் நாம் வாழ
பாதை காட்டிய அம்மாவே! எம் தெய்வமே!
அகலாது உங்கள் நினைவுகள் எம் உயிர் உள்ளவரை
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரது வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (20.10.2017) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் இந் நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்வதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

நீர்வேலி வீதி,
கைதடி வடக்கு, கைதடி.
குடும்பத்தினர்.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



ஞானம் லியோன்

கடந்த 20.09.2017 இறைபதம் அடைந்த எம் குடும்பத் தலைவர் ஞானம் லியோன் அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரடியாக வந்து ஆறுதல் அளித்த அருட்-தந்தையர் அருட்சகோதரிகளுக்கும் அயலவர், உற்றார், நண்பர்கள், உறவினர்களுக்கும் மற்றும் தொலைபேசி, தந்தி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் தந்த உள்நாட்டு, வெளிநாட்டவர்களுக்கும், அவர் நோய்வாய்ப்பட்டதிலிருந்து பல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் மலர் வளையம், மலர்மாலை அணிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டவர்களுக்கும், பசி, தாகம் தீர்த்ததோடு ஆன்ம ரீதியாகவும் ஆறுதல் கொடுத்தவர்களுக்கும் நவாலி புனிதபேதுரு பாவிலு ஆலய பங்குத் தந்தையுடன் அனைத்து பங்கு சபை உறுப்பினர்களுக்கும் பங்கு மக்களுக்கும் மரண ஊர்வலத்தல் கலந்து கொண்டவர்களுக்கும், மட்டுவில் புனித லூர்த்து அன்னை ஆலய பங்குத் தந்தைக்கும் பங்கு மக்களுக்கும், அனைத்து சபை உறுப்பினர்களுக்கும், மற்றும் இரங்கல் உரையாற்றி கிராமசேவகர், அதிபர்,ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் எமது இதயத்தின் ஆழத்தில் இருந்து நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அத்துடன் இன்று (20.10.2017) வெள்ளிக்கிழமை நவாலியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிரசாத் வீதி,
நவாலி கிழக்கு, மானிப்பாய்.
குடும்பத்தினர்.
077 405 5674

# அமைதியைக் குழப்பும் வகையில் துறவிகள் செயற்படுவது தகாது

## கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் நடராசா தெரிவிப்பு

திருகோணமலை, ஒக்.20
புத்தரின் போதனைகளான சாந்தி, சமாதானம், அகிம்சை போன்ற நற்போதனைகளைப் போதிக்கின்ற பௌத்த மத உயர் பீடத்திலுள்ள சில துறவிகளின் அண்மைய செயற்பாடுகள் நாட்டின் அமைதியைக் குழப்பும் வகையிலுள்ளன. அவ்வாறான செயற்பாடுகள் வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் மார்க்கண்டு நடராசா.
அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

> மதம் கூறும் தத்துவங்களைப் படித்து மக்களுக்கு நற்போதனைகள் செய்வதை விடுத்து அரசியல் தலைவர்களின் செயற்பாட்டில் தலையீடு செய்து அமைதியைக் குழப்பும் செயற்பாடுகளை எந்த வகையிலும் ஏற்க முடியாது.

அதில் உள்ளதாவது:
அரசு கடந்தகாலப் பிரச்சினைகளை அரசமைப்பு மாற்றம் ஊடாகத் தீர்க்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. இந்த நல்ல சூழலைக் குழப்பும் வகையில் பௌத்த துறவிகள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். இது முழு இலங்கையையும் குழப்பத்தில் ஆழ்த்தும் செயற்பாடாக அமைகின்றது.
மதம் கூறும் தத்துவங்களைப் படித்து மக்களுக்கு நற்போதனைகள் செய்வதை விடுத்து அரசியல் தலைவர்களின் செயற்பாட்டில் தலையீடு செய்து அமைதியைக் குழப்பும் செயற்பாடுகளை எந்த வகையிலும் ஏற்க முடியாது. இவ்வாறான தான்தோன்றித் தனமான செயற்பாடுகளால் இலங்கையில் மீண்டும் பிரச்சினைகள் ஏற்படும் நிலைமை ஏற்படும்.
பிரச்சினைகளைத் தீ மூட்டி எரியவிடும் செயற்பாட்டை முன்னெடுத்தனர் என்ற அவப்பெயரை இந்தத் துறவிகள் பெற்றுக்கொள்ள நேரிடும். இவ்வாறான செயற்பாட்டை விடுத்து அவர்கள் மக்கள் சிந்திக்கும் நற்போதனைகளை வழங்க வேண்டும் - என்றார். (ற-46)

## அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்துக்கு பொறுப்பதிகாரி நியமனம்

அச்சுவேலி,ஒக்.20
அச்சுவேலிப் பொலிஸ் நிலையத்துக்குப் புதிய பொறுப்பதிகாரியாக ஆர். எம்.பி.ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது கடமைகளை நேற்றுப் பொறுப்பேற்றார்.
'கடந்த 8 மாதங்களாகத் தற்காலிகப் பொறுப்பதிகாரியாகப் பொலிஸ் பரிசோதகர் திவுல்வெள கடமையாற்றியிருந்தார். தற்போது நிரந்தர பொறுப்பதிகாரியாக ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.
சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்கப் பொதுமக்கள் பொலிஸாருக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் எனக் கடமையேற்ற பின் ரத்நாயக்கா தெரிவித்தார்:
அவர் தெரிவித்ததாவது:
ஒரு பொலிஸ் நிலையத்தில் ஆயிரம் பொலிஸார் கடமையாற்றினாலும் பொதுமக்களின் ஒத்துழைப்பு இன்றி நாம் கடமையைச் சரிவரச் செய்யமுடியாது. பொதுமக்களின் பங்களிப்பே பொலிஸாரின் கடமைக்குப் பக்கபலமானது - என்றார்.
கடந்த மூன்று வருடமாக குளியாப்பிட்டிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக இவர் கடமையாற்றியிருந்தார். (ற-ரி4)



## சவுக்கடி இரட்டைக் கொலை தடயங்கள் நேற்று மீட்பு

### சந்தேக நபர்களும் கைது

மட்டக்களப்பு,ஒக்.20
மட்டக்களப்பு, சவுக்கடியில் இடம்பெற்ற இரட்டைப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. கொலை செய்யப்பட்ட வீட்டில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் உள்ள காட்டுப்பகுதியில் மோப்ப நாயின் உதவியுடன் உடைந்த கோடரி ஒன்றும் நேற்று பொலிஸாரால் மீட்கப்பட்டது.
மட்டக்களப்பு மாவட்ட குற்றவியல் பொலிஸ் பொறுப்பதிகாரி கே.ரவிச்சந்திரன் தலைமையிலான பொலிஸ் குழுக்கள், மோப்ப நாய்களுடன் விசாரணைகளை மேற்கொண்டனர். இதன்போது தடயங்கள் மீட்கப்பட்டன.
சவுக்கடி முருகன் கோயில் வீதியைச் சேர்ந்த மதுவந்தி பீதாம்பரம் (வயது -26) மற்றும் அவரது மகனான பீதாம்பரம் மதுஷன் (வயது -11) ஆகியோர் கடந்த திங்கட்கிழமை இரவு கொடூரமான முறையில் தாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர். (ற-ரி4)

## மாடியிலிருந்து தவறி வீழ்ந்த நோயாளி உயிரிழப்பு

கேகாலை,ஒக்.20
கேகாலை வரக்காபொல பகுதி தள மருத்துவமனையில் ஐந்தாவது மாடியிலிருந்து கீழே வீழ்ந்து நோயாளி ஒருவர் உயிரிழந்தார்.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றது. அதே பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
அவர் நேற்றுமுன்தினம் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு வந்திருந்த நிலையில், தங்கியிருந்து சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு மருத்துவர்கள் கூறியதைத் தொடர்ந்து மருத்துவமனையில் தங்கியிருந்தார்.
நேற்று அதிகாலையில் ஐந்தாவது மாடியிலிருந்து வீழ்ந்து படுகாயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் எனக் கூறப்படுகிறது.
இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி2)

## நீதி நிலை நாட்டப்படுவதில் நாட்டில் பெரும் பாரபட்சம்

### கூறுகிறார் ஞானசாரதேரர்



கண்டி,ஒக்.20
நாட்டில் அனைவருக்கும் நீதி சமமாக நிலை நாட்டப்படுவதில் பாரபட்சம் காட்டப்படுகின்றது எனப் பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசாரதேரர் குறிப்பிட்டார். கண்டியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
பொலிஸ்மா அதிபர் சகலருக்கும் நீதி பாரபட்சம் இன்றி நிலை நாட்டப்படுகிறது என்று கூறுவது பேச்சுக்கு மட்டும் மட்டுப்பட்டுள்ளது.
வடக்கில் உள்ளவர்களுக்கு ஒரு நீதியும் தெற்கில் உள்ள பெரும்பான்மை மக்களுக்கு வேறு ஒரு நீதியும் நடைமுறை ப்படுத்தப்படுகின்றது-என்றார். (ற-ரி4)

## 2020 வரை தேர்தல் நடக்காது

### மகிந்தானந்த அளுத்கமகே ஆரூடம்

2020ஆம் ஆண்டு வரை எந்தத் தேர்தலையும் இந்த அரசு நடத்தாது. அதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
உள்ளூராட்சி மற்றும் மாநகரசபைத் தேர்தல் 2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறும் என அரசு அறிவித்துள்ளது. எனினும் இந்தத் தேர்தல் 2020ஆம் ஆண்டிலேயே நடை பெறும். அம்பகமுவ பிரதேசத்துக்குப் புதிய பிரதேச சபைகளை நிறுவவேண்டும் என மனோ கணேசன் வழக்குத்தொடர்கின்றார். அவருடைய வழக்குக்குப் பின் மற்றுமொருவர் வழக்குத் தொடர்வார். இவ்வாறு ஒருவருக்குப்பின் ஒருவராக மூன்று வழக்குகளைத் தாக்கல் செய்வதற்கு அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
இதன்மூலம் 2020 வரை தேர்தல் நடைபெறாது. எதிர்வரும் 2018ஆம் ஆண்டு ஜனவரியில் தேர்தல் நடைபெறாவிட்டால் நாம் அனைவரும் கொழும்புக்குப் படையெடுத்து வந்து, பெரிய போராட்டத்தை நடத்துவோம் - என்றார். (ற-ரி5)

## கஞ்சாவுடன் கைதானோர் மன்றில் நேற்று முன்னிலை

ஹற்றன்,ஒக்.20
கினிகத்தேனையில் கேரள கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 7 பேர் நேற்று ஹற்றன் மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
நேற்று முன்தினம் ஹற்றன் கலால் திணைக்கள அதிகாரிகளால் இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது 75 ஆயிரம் மில்லி கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
பிரதான கஞ்சா வழங்குநர் ஒருவர் உட்பட விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டவர்களே கைது செய்யப்பட்டனர் என்றும் அவர்கள் கினிகத்தேனை, பொல்பிட்டிய மற்றும் ரஞ்சுர பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி5)

## பாடசாலைக்குள் நுழைந்தவரால் குழப்பம்

வவுனியா,ஒக்.20
இன்று அரசதலைவர் வரவுள்ள வவுனியா சைவப்பிரகாசா பாடசாலைக்குள் திடீரென நுழைந்த மனநலம் குன்றிய ஒருவரால் குழப்ப நிலை ஏற்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
நேற்றுக் காலை 9 மணியளவில் வவுனியா நகர்ப்பகுதிகளில் உலாவரும் மனநலம் குன்றிய ஒருவர் திடீரென பாடசாலைக்குள் நுழைந்துள்ளார்.
இதையடுத்து அந்தப் பகுதியில் பாதுகாப்புக் கடமையிலிருந்த பொலிஸார் அவரைக் கைது செய்தனர். கைது செய்த மனநலம் குன்றியவரைப் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.
அரச தலைவர் வருகையால் வவுனியாவின் பல இடங்களிலும் பாதுகாப்பு நடவடிக்கைகள்தீவிரப்படுத்தப்பட்டன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

## வெற்றி கண்டுள்ளது டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

### மட்டு மாநகரசபை ஆணையாளர் தெரிவிப்பு

மட்டக்களப்பு ,ஒக்.20
மட்டக்களப்பு மாநகர சபைப் பிரிவுக்குள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை வெற்றி கண்டுள்ளது என்று மாநகர சபை ஆணையாளர் தெரிவித்தார்.
டெங்கு ஒழிப்பு, திண்மக் கழிவு முகாமைத்துவம் மற்றும் நகர தூய்மையாக்கல் குறித்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
கடந்த வருடமும் இந்த வருடத்தின் ஆரம்பத்திலும் மட்டக்களப்பில் இருந்து வந்த டெங்கு அச்சுறுத்தல் சுகாதாரத் திணைக்களம் மற்றும் மாநகர சபை ஆகியவற்றின் கூட்டிணைந்த முயற்சியோடும் பொதுமக்களின் ஒத்துழைப்போடும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.
தெருக்களிலும் வேறு பல இடங்களிலும் மக்கள் கழிவுகளைக் கொட்டுவதைக் கட்டாயம் தவிர்க்கவேண்டும்.
மட்டக்களப்புப் பிரதான பேருந்து நிலையம் முதல் மட்டக்களப்பு போதனாமருத்துவமனை வரையுள்ள நகரின் முக்கிய தெருவான கோவிந்தன் வீதி முழு வதும் காலை வேளையில் குப்பைத் தொட்டியாக காட்சியளிக்கும் நிலை காணப்படுகின்றது.
இது நகரை அசுத்துமாக்குவதுடன் டெங்கு நுளம்புகள் பெருகுவதற்கு ஏற்றதாகவும் அமைந்துவிடும்.
இந்த விடயத்தில் நாளாந்தம் மட்டக்களப்பு நகரக் குடியிருப்பாளர்களும், நாளாந்தம் அலுவல்களுக்காக நகருக்கு வரும் பொதுமக்களும் அக்கறை எடுக்க வேண்டும் -என்றார். (ற-ரி5)



# வெள்ளை மாளிகையில் தீபாவளிக் கொண்டாட்டம்

வொஷிங்டன், ஒக். 20

அமெரிக்க அதிபரின் உத்தியோக பூர்வ இல்லமான வெள்ளை மாளிகையில் தீபாவளிக் கொண்டாட்டங்கள் நடைபெற்றுள்ளன. அது தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.

இந்துக்களின் பாரம்பரிய பண்டிகையான தீபாவளி உலகெங்கும் பரவலாகக் கொண்டாடப்படுகிறது. இந்துக்கள் செறிந்து வாழும் அமெரிக்காவில் தீபாவளிக் கொண்டாட்டங்கள் நடத்தப்பட வேண்டும் என்று தெரிவித்து அதற்குரிய நடைமுறைகளை ஆரம்பித்து வைத்தார் முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ். அவரைத் தொடர்ந்து ஒபாமாவும் தீபாவளிக் கொண்டாட்டங்களை தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வந்தார். இந்த நிலையில் தற்போதைய அதிபர் ட்ரம்பும் தீபத் திருளான நேற்றுமுன்தினம் பெரும் எடுப்பில் திருநாளைக் கொண்டாடியுள்ளார்.

இந்த நிகழ்வில் ட்ரம்பின் மகள் இவன்கா, ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் நிக்கி ஹாலே உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

'கலை, அறிவியல், மருத்துவம், கல்வி ஆகிய துறைகளில் உங்களது அர்ப்பணிப்பு அபாரமானது. அமெரிக்க இராணுவத்தில் இணைந்து தாய்மண்ணை பாதுகாக்கும் கடமையில் வீரத்துடன் ஈடுபட்டிருக்கும் இந்திய அமெரிக்கர்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறேன். அமைதி மற்றும் வலிமையுடன் புதிய ஆண்டை வரவேற்கும் இந்த தீபாவளித் திருநாளை உலகம் முழுவதும் சுமார் 100 கோடி இந்துக்கள் கொண்டாடி மகிழ்கின்றனர். அமெரிக்காவில் 20 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொண்டாடுகின்றனர். மக்களின் வீடான இந்த வெள்ளை மாளிகையில் இன்று இந்த நன்நாளை நாம் பெருமையுடன் கொண்டாடுகிறோம். தீபங்களின் விழாவான இந்த தீபாவளியை நானும் இணைந்து கொண்டாடுவதில் பெருமிதம் கொள்கிறேன்.

இதன்மூலம் இங்குள்ள இந்திய அமெரிக்கர்களும், இந்து மதத்தைச் சேர்ந்த அமெரிக்கர்களும், எமது உயர்வான அமெரிக்க குடும்பத்தின் மகிழ்ச்சிக்குரிய, மதிப்பிற்குரிய, நம்பிக்கைக்குரிய அங்கத்தினர்கள் என்பதை நாம் மீண்டும் உறுதிப்படுத்துகிறோம்" என்று ட்ரம்ப் தெரிவித்தார். (ம)

## கிஞ்சார் நகரத்தை மீட்டெடுத்தது ஈராக்

பக்தாத், ஒக். 20

ஈராக் நாட்டில் குர்திஸ்தான் பகுதியில் ஆதிக்கம் செலுத்திவந்த குர்திஷ் ஆயுதக் குழுவுக்கு பெரும் பின்னடைவு கொடுக்கப்பட்டுள்ளது என்று ஈராக் இராணுவம் அறிவித்திருந்த நிலையில் குறித்த பகுதியில் உள்ள கிஞ்சார் நகரம் அரச தரப்பால் மீட்கப்பட்டுள்ளது என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது.

ஈராக் நாட்டில் குர்திஸ்தான் பகுதியில் குர்திஷ் ஆயுதக் குழு ஆதிக்கம் செலுத்தி வந்தது. இந்தக் பகுதியைத் தனிநாடாக அறிவிக்க வேண்டும் என்று குர்திஷ் குழு ஆயுதக் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தது.

இந்த நிலையில் அமெரிக்க இராணுவத்தின் உதவியுடன் குர்திஷ் ஆயுதக் குழுவை விரட்டியடித்துவிட்டு அந்தப் பகுதியில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட கடந்த சில வாரங்களுக்கு முன்னர் களமிறங்கியது ஈராக். கிர்குக் நகரம் கைப்பற்றப்பட்டது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், கிஞ்சார் நகரமும் தற்போது மீட்கப்பட்டுள்ளது என்று ஈராக் அரசு அறிவித்துள்ளது.

கிஞ்சார் நகரில் மிகப்பெரும் எண்ணெய் வயல்கள் உள்ளன. இந்தப் பகுதியில் இருந்து நாளொன்றுக்கு 6 லட்சத்து 50 ஆயிரம் பீப்பாய் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்த அளவுக்கதிகமான வருமானமே குர்திஷ்தான் அமைப்புக்கு மிகப் பெரும் பொருளாதார பலத்தை ஏற்படுத்திக் கொடுத்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



## ஐ.எஸ்ஸிடமிருந்து மீட்கப்பட்டது மாராவி

மணிலா, ஒக். 20

பிலிப்பைன்ஸின் மாராவித் தீவு ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளின் பிடிக்குள் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் விழுந்தது. தீவை மீட்பதற்கான போரை பிலிப்பைன்ஸ் அரசு கடும் முனைப்பில் மேற்கொண்டு வருகின்ற போதிலும் நகர் இன்னும் மீட்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸின் மாராவித் தீவு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடிக்குள் சென்றது. மாராவித் தீவில் வசித்துவந்த பாதிரியார்கள், கிறிஸ்தவ மக்கள் பலரையும் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பிணையக் கைதிகளாக பிடித்து வைத்திருந்தது. நகரை மீட்கும் போர் தொடர்ந்து வந்தது. எனினும் மாராவியை முழுமையாகக் கைப்பற்றிவிட முடியவில்லை.

இந்த நிலையில் இந்த மாதத்துக்குள் போர் நிறைவு பெறும் என்று பிலிப்பைன் ஸின் ஊடகங்கள் கணித்திருந்த நிலையில் நகரம் மீட்கப்பட்டது என்று பிலிப்பைன்ஸ் அதிபர் டுடேர்தே நேற்றுமுன்தினம் அறிவித்தார். (ம)



மியன்மார் அரசின் இனச் சுத்திகரிப்பில் இருந்து தப்பித்து பல்லாயிரக்கணக்கான ரொஹிங்ய இஸ்லாமியர்கள் பங்களாதேஷ் நோக்கிப் படையெடுத்துச் செல்கின்றனர். அவ்வாறு சென்றுள்ள ரொஹிங்ய இஸ்லாமியர்களின் எண்ணிக்கை சுமார் 6 லட்சத்தை எட்டவுள்ளது என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. (ம)

## சின்சோ அபேக்கு அதிகளவு வாய்ப்பு

டோக்கியோ, ஒக். 20

ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபே, தொடர்ந்தும் தலைமை அமைச்சராகத் தெரிவு செய்யப்பட அதிகளவான வாய்ப்புக்கள் உள்ளன என்று பன்னாட்டு ஊடகங்களின் கருத்துக் கணிப்புக்கள் குறிப்பிடுகின்றன.

ஜப்பான் தலைமை அமைச்சர் சின்சோ அபேயின் பதவிக்காலம் இன்னும் ஒரு வருடத்தில் முடிவுக்கு வரவுள்ளது.

ஆனால் ஒரு வருடத்துக்கு முன்னதாகவே அதாவது கடந்த மாதமே நாடாளுமன்றத்தைக் கலைத்து உத்தரவிட்டார் அபே.

வடகொரியாவுக்கு எதிரான நகர்வுகளைப் பொறுத்தமட்டில் அபேக்கு பெரும் ஆதரவு உள்ளது. இதனால் தனக்கு ஆதரவு உள்ளபோதே தேர்தலை நடத்தி ஆட்சியைத் தக்க வைப்பதே அபேயின் திட்டம்.

கிட்டத்தட்ட இந்தத் திட்டம் வெற்றியளிக்கும் நிலையிலேயே உள்ளது என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

மொத்தம் 465 உறுப்பினர்கள் கொண்ட நாடாளுமன்றக் கீழவையில் ஷின்சோ அபேயின் கட்சிக்கு 281 முதல் 303 ஆசனங்கள் வரை கிடைக்க வாய்ப்பு உள்ளது என்று பன்னாட்டு ஊடகங்களின் கருத்துக் கணிப்புக்கள் குறிப்பிடுகின்றன. (ம)



## சோமாலியத் தாக்குதலில் சாவு எண்ணிக்கை 300

மொகடிஷு, ஒக். 20

சோமாலியத் தலைநகர் மொகடிஷுவில் உள்ள விடுதியொன்றைக் குறிவைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடத்தப்பட்ட இரட்டைக்குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 300ஆக உயர்ந்தது.

சோமாலியா நாட்டின் பல பகுதிகளில் அல் கொய்தா ஆதரவு பெற்ற ஆயுதக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன. தம்மால் இயற்றப்பட்ட இஸ்லாமிய சட்டத்துக்கு உட்பட்ட ஆட்சியை நாடெங்கிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று தெரிவித்து அவை அரசுக்கு எதிராக போரிட்டு வருகின்றன.

பிரபலமான சுபாரி விடுதியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் சம்பவ இடத்தில் 85 பேர் உயிரிழந்தனர் என்று முதல் கட்டமாகத் தெரிவிக்கப்பட்டது. நேற்றுமுன்தினம் வெளியான மூன்றாம் கட்டத் தகவலின்படி சாவு எண்ணிக்கை 276ஆக உயர்ந்தது. நேற்று வெளியான நான்காம் கட்டத் தகவல் உயிரிழப்பு 300ஆக உயர்ந்தது என்று குறிப்பிடுகிறது.



இந்தத் தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. எனினும் அல் சபாப் என்ற ஆயுதக்குழு நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. (ம)


விசேட விலைக்கழிவு
யாழ் நகரில் நவீன
Digital 3D Wall & Floor Tiles
மற்றும்
குளியலறை சாதனங்களுடன்
HOUSE OF CERAMIC
பிரமிக்கவைக்கும் பிரம்மாண்ட காட்சியறையில்
வாடிக்கையாளர்களின் தேவைக்கேற்ற தெரிவுகள்
3D Digital Tiles
LANKATILES
Tiles விசேட விலைக்கழிவில்
115, Stanley Road, Jaffna.
Tel: 021 221 9599
NO 581, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 9599


விசேட
விலைக்கழிவு
லங்கா ரைல்ஸ் மற்றும்
இறக்குமதி செய்யப்பட்ட
முதல் தர 2'x 2' அளவிலான
ரைல்ஸ் வகைகளுக்கு...
NHT
LANKATILES
நிலப்பதிப்பு, சுவர்ப்பதிப்பு ரைல்களின்
ஏக விநியோகஸ்தர்கள்
தரமான Commode வகைகள்,
குளியலறை சாதனங்களையும்
விசேட விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.
நாராயணா கட்டடப் பொருட்கள் வர்த்தகர்
92C, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 5390, 021 567 5390

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



# சவாலைக் கடக்குமா அரசு?

புதிய அரசமைப்பு முயற்சிகளை மகாநாயக்க பீடங்கள் எதிர்த்துள்ளன. இலங்கை பன்மைத்துவச் சமூகமாக, எதிர்காலத்தை நோக்கிய முற்போக்குச் சமூகமாக மாறுவதை தமது பௌத்த மேலாதிக்கவாதத்துக்காக ஒருபோதும் ஏற்கப்போவதில்லை என்பதை இந்த எதிர்ப்பின் மூலமாக பௌத்த பீடங்கள் தெளிவுபடுத்திவிட்டன.

புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கையில் நாட்டின் தன்மை குறித்துப் பெரிதான மாற்றம் எதுவும் நிகழ்த்தப்பட்டிருக்கவில்லை. 30 வருடகால உள்நாட்டுப் போரின் பின்னர், பெரும் இழப்புக்கள் துயரங்களின் பின்னர், அதன் படிப்பினைகளில் இருந்து கற்றுக்கொண்டு எதிர்கால உலகை நோக்கித் தயாரிக்கப்பட்ட ஒரு முற்போக்கு வரைபாக அது இருக்கவில்லை. முடிந்த வகையில் எல்லாம் பௌத்த சிங்கள மேலாதிக்கவாதத்தைத் திருப்திப்படுத்தும் விதத்திலான அணுகுமுறை இடைக்கால அறிக்கை முழுவதும் தெறித்திருந்தது. அந்தத் திருப்திப்படுத்தல்கள், நெகிழ்வுபடுத்தல்கள், தடவல்கள், கொஞ்சல்கள், கெஞ்சல்கள் என்பவற்றுக்கு மத்தியில் தமிழர்களுக்கும் அதிகாரங்களைப் பகிர்வதற்கான முயற்சியை நாசூக்காகச் செய்ய முடியுமா என்றுதான் இடைக்கால அறிக்கை முயன்றது.

ஆனால், அந்த முயற்சியேகூடத் தேவையில்லை என்று அடியோடு நிராகரித்துவிட்டன பௌத்த பீடங்கள். அதுமட்டுமல்ல, அரசமைப்பில் திருத்தங்களைச் செய்வதுகூடத் தேவையற்றது, இருப்பதே போதும் என்று அவர்கள் ஆணித்தரமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதாவது, தமிழர்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்துகொள்ளத் தேவையில்லை, அவர்கள் இப்போது இருப்பதைப் போன்றே இலங்கையின் இரண்டாம் மூன்றாம் தரக் குடிமக்களாக விரும்பினால் வாழ்ந்துவிட்டுப் போகட்டும் என்பதை மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார்கள்.

30 வருடகாலமாக ஓர் உள்நாட்டுப் போரால் நாடு சிதைந்தபோதும், தலதா மாளிகையிலே குண்டு வெடித்தபோதும் மகாநாயக்கர்களிடமும் பௌத்த பீடங்களிடமும் சிறு சஞ்சலம்கூட ஏற்படவில்லை என்பதுதான் அவர்கள் அறிக்கையின் ஊடாக வெளிப்படும் உண்மை. தமிழர்கள் கொல்லப்படுவது, இரண்டாம்தரக் குடிமக்களாக நடத்தப்படுவது, மனிதாபிமானத்தை நாடு இழந்துகொண்டிருப்பது எதுவும் அவர்களுக்குப் பெரிதல்ல. பௌத்தத்தையும் அதை வழிமொழிந்து வாழவைக்கும் சிங்களத்தையும் பாதுகாப்பது மட்டுமே அவர்களின் நோக்கம்.

இலங்கையின் வரலாறு முழுவதும் பிக்குகள் இதைத்தான் செய்தார்கள். அவர்களின் அணுகுமுறையில் கடந்த 1000 வருடங்களில் கிஞ்சித்து மாற்றமும் ஏற்படவில்லை என்பதை அவர்கள் தெளிவுபடுத்திவிட்டார்கள்.

பாமரச் சிங்கள மக்களும் கிராமப்புறங்களில் படித்திருக்கக்கூடிய சிங்கள மக்களும்கூட மகாநாயகர்களை மீறி நடக்கும் சக்தியற்றவர்கள். பிக்குகள் எதிர்க்கிறார்களே, அதனால் அதில் ஏதோ சங்கதி இருக்கும் என்று விக்கி நிற்கப்போகும் அந்த மக்களை உசுப்பேற்றி இனம், வீரம், சிங்கங்களின் வாரிசுகள் என்று முழக்கமிட்டு இனவாதத்துக்கூடாக வாக்கு வேட்டையாடக் காத்திருக்கும் மகிந்த ராஜபக்ச வேறு இருக்கும்போது, புதிய அரசமைப்பைக் கொண்டு வருவதற்கான சரியான சவாலை இப்போதுதான் அரசு எதிர்கொள்கிறது.

பௌத்த பீடங்களை மீறி மக்களைக் கவர்ந்திழுத்து தனது புதிய அரசமைப்பை நிறைவேற்றும் வல்லமையை இந்த அரசு கடந்த மூன்றாண்டுகளில் ஒருபோதும் வெளிக்காட்டியதில்லை. பௌத்த பீடங்களின் நாடியைத் தடவி, அவர்களைச் சமாளித்துக் காரியங்களைச் சாதிக்கத்தான் அவர்கள் முயன்றார்கள். அவர்களின் அத்தகைய முயற்சிகளை மாகாநாயக்க பீடங்கள் நிராகரித்துவிட்ட நிலையில், அரசின் முயற்சியில் துணிந்து பங்கேற்பதற்கு அரசில் உள்ள அரைவாசிப் பேரே இனிப் பின்னடித்துவிடுவார்கள் என்பதை எதிர்பார்க்கலாம்.

இந்த நிலையைக் கடப்பதற்கு அரசிடமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமும் ஏதாவது வழிமுறைகள் இருக்கின்றன போல் தெரியவில்லை. மலையைத் தலையால் தள்ளி நகர்த்த முயலும் சமானியனின் முயற்சியாகத்தான் இந்த இரு தரப்பினரதும் முயற்சிகளும் இப்போது தோன்றுகின்றன. இதனை அவர்கள் எப்படிக் கையாளப்போகிறார்கள் என்பதில்தான் இலங்கையின் அடுத்த 50 ஆண்டுகால எதிர்காலம் தங்கியுள்ளது. பின்வாங்குவார்களா? முன்னேறுவார்களா? ஒன்று மட்டும் நிச்சயம். விடுதலைப் புலிகளின் தேசியத் தலைவர் வே. பிரபாகரன், எப்போதுமே சொல்வது ''சிங்களவர்கள் தாமாக ஒருபோதும் தமிழர்களுக்குத் தீர்வைத் தரமாட்டார்கள்'' என்பதுதான். அதன் அடிப்படையில்தான் அவர் கடைசி வரையில் ஆயுதங்களையும் போரையும் நம்பினார். இந்த நிமிடம் வரைக்கும் அவரது நம்பிக்கை உயிர்ப்போடு வாழ்கின்றது.

கட்டுரை

# அர்ப்பணிப்பு உணர்வுடன் மேற்கொள்ளும் பணிகள் சமூக மேம்பாட்டுக்கு வழி வகுக்கும்

அன்ரனிபீற்றர்

ஒன்றுபட்டகூட்டிணைவே ஒருசமூகமுன்னேற்றத்துக்கான குறிகாட்டியாகும். கல்வியாக இருந்தாலும் சரி, அரசியல், பொருளாதாரம், போராட்டம்விடுதலை, வெற்றி என்பவற்றுக்கும்கூட கூட்டிணைவுமுக்கியமானதாகும். இதனை உலக நாடுகளின் செயற்பாடுகள் எடுத்துக்காட்டி நிற்கின்றன. வளம் பொருந்திய நாடுகளும், வல்லரசு நாடுகளும் உற்பத்திநிறைவுகண்ட நாடுகளாகும். அரசு முன்னெடுக்கும் திட்டங்கள் மக்கள் மயப்படுத்தப்படுகின்றன. மக்களின் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் அல்லது அவர்களின் உற்பத்திப் பொருள்களுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அரசுக்கும் மக்களுக்கும் இடையே இருக்கின்ற கூட்டிணைவு. விருப்புடனும் அர்ப்பணிப்புடனும் முன்னெடுக்கும் செயற்பாடுகள், நிறைவான பொருளாதார விளைவை ஏற்படுத்துகின்றன.

எமது சமூகத்தை எடுத்துக் கொண்டால், பொருளாதார வளங்கள் சரியான முறையில் இனங்காணப்படாமையால், தனியானவர்கள் தமக்குத் தெரிந்த அல்லது தம்மால் முடிந்த சுய தொழில்களை முன்னெடுக்கும்போது அவற்றை ஆள்பவர்கள் கண்டுகொள்ளாத நிலைகளோ, அவற்றுக்கான ஊக்குவிப்புக்களோ, முடிவுப் பொருள்களுக்கான முழுமையான சந்தை வாய்ப்போ காணப்படாமை கவலைக்குரியது. இதனால் தமது சுய தேவையையும், பொருள்வளத்தையும், மேம்படுத்திக்கொள்ள எடுக்கும் முயற்சிகளால் அவர்களும் ஏனைய நுகர்பவர்களும் பயன் பெறுகிறார்கள். இந்தத் தொழில்கள் மீதான அரச ஊக்குவிப்பு என்ற வகையில் மூலப் பொருள்களைப் பெற்றுக்கொடுத்தல், உள்ளூர் வெளியூர் சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பவற்றால் ஒன்றுபட்ட கூட்டிணைவு என்பது தானாகவே உருவாக வாய்ப்புகள் ஏற்படும். இவற்றுக்கான சரியான் வளங்களை இனங்கண்டு முறையான திட்டங்களை ஏற்படுத்தி, ஊக்கமும் ஆக்கமும் அளிக்கப்படுகின்ற போது, சந்தை வாய்ப்புக்கள் இன்னும் பலரை உள் வாங்கி, தன்னிறைவுடன் மட்டுமல்லாது, வர்த்தக நோக்கிலான தொழிற்றுறையை முன்னெடுக்க மக்கள் ஊக்கப்படுத்தப்படுவார்கள்.

### அடிப்படை மட்டங்களில் அபிவிருத்திக்கான முயற்சிகள்

சமூகப் பொறுப்பை ஏற்படுத்துவதற்கு சிறு தொழில்கள், வீட்டுத் தோட்டம் அமைத்தல் என்பவை குடும்ப மட்டங்களில் கிராமங்களில் ஊக்குவிக்கப்படும்போது, அவற்றின் வர்த்தக ரீதியான பெறுமானங்களும் உணர்ந்துகொள்ளப்படும். அத்துடன் இன்று பாவனையிலுள்ள கிருமிநாசிகளின் தாக்கத்தினின்றும் ஆரோக்கியமாக வாழ முடியும். நுகர்ச்சிப் பொருள் களாகப் பெற்றுக் கொள்ள வேண்டிய பொருள்களை நாமே ஆக்கிக்கொள்ளவும், உற்பத்தி செய்து கொள்ளவும், அவற்றுக்கிருக்கும் சந்தை வாய்ப்பை பெருமளவில் அத் தொழில்களில் முன்னெடுக்க வேண்டும் என்ற ஆர்வம் ஏற்படுத்தப்படுவதும், குடும்பங்களில் - விளையாட்டு விளையாட்டாகச் செய்து பழகும் இச் செயற்பாடுகளே, எம்முடன் கூட வரக்கூடியவை. இத்தகைய கைத்தொழில் முயற்சிகளை கல்வி கற்றவர்கள், அரச உத்தியோகத்தர்கள் தான் மேற்கொள்ள வேண்டும் என்ற ஒரு மாயை பலரைப் பின்வாங்கச் செய்கின்றன. வெளிநாடுகள் இவற்றுக்கு விதிவிலக்கானவை. அங்குநாட்டின்பொருளாதார் அபிவிருத்தி என்ற அடிப்படை நோக்கோடு இவை மக்களிடம் கொண்டு செல்லப்பட்டுமுன்னெடுக்கப்படுகின்றன.

### சுய முயற்சியால் பின்னடைவினின்றும் மீண்டெழுந்த நாடுகள்

நாமெல்லாம் நாடென்ற அங்கீகாரத்தைப்பெற்று, இன்னும் முன்னேற்றம் காணாமல் இருக்கின்றோம். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளும் இரண்டு உலகப் போராக்கலால் அழிக்கப்பட்டு இன்று தொழில்நுட்ப முன்னேற்றங்களால் வளம் பெற்றுள்ள ஜப்பான் போன்ற நாடுகளும்பொருளாதார வளம் பெற்றநாடுகளாக இருக்கின்றன. அந்தநாடுகளின் தலைவர்களினதும் பொதுமக்களினதும் நாட்டுப் பற்றும், முன்னணி நாடுகளாகத் திகழ வேண்டும் என்ற தாகமும், ஒற்றுமையுடனும் அர்ப்பணிப்புடனும் நாட்டுக்கு ஆற்றும் பணிகள் என்ற அசைக்க முடியாத நம்பிக்கையுமே அதற்கு மூல காரணம், அரசு மக்களை மதித்து, அவர் களுக்கு ஆற்றிவரும் அரச சேவையும், அந்த நாட்டு மக்களிடம்தன்னம்பிக்கையுடனான நாட்டுப் பற்றாகத் திகழ்கின்றது என்பது குறிப்பிடத் தக்கது.

எது எப்படியாயினும், எமது நாட்டில் வாழும் இரு மொழிகளைப் பேசுகின்ற இனங்களிடையேயும், கடந்த காலங்களில் ஒருவரை ஒருவர் நம்பாத, நம்பி ஏமாந்த, ஏமாற்றப்பட்ட கசப்பான உணர்வுகள் இன்னும் மறக்கப்பட முடியாமல், தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இந்த நிலையில், எம்மை அவர்கள் கண்டு கொள்ளாத நிலையும், எமது தேவைகளை நாமே பார்க்க வேண்டிய நிலையிலுமே இன்னமும் தமிழர்களாகிய நாம் இருக்கின்ற சூழ்நிலையினால், அபிவிருத்தியென்ற ஆளுகை, எம்மத்தியில் நலிவு கண்ட நிலையிலுள்ளது. கடந்தகாலங்கள் கசப்பானவைகளாக இருந்திடினும் நிகழ்காலத்தின் நிழல்களும், நிதானிக்க முடியாதவைகளாகவே முடிந்து விடும் என்ற வாய்ப்பாடும் மக்களிடம் இருக்கவே செய்கின்றன.

### வளங்கள் இனம் காணப்படாமை

எமக்குள்ள வளங்களை மட்டுமே வைத்துக்கொண்டு, உச்சப்பயன்பாட்டை அடையக் கூடிய திட்டங்களை வகுக்கத் தக்க தலைமைகள் எம்மத்தியில் இன்று காணப்படவில்லை. எமது மக்கள் பாலைவனத்திலும் பயிர்செய்யக் கூடிய வலிமை பெற்றவர்கள். தடைகள் எதுவந்தாலும் எதிர்நீச்சல்போடும்ஆற்றல்கொண்டவர்கள், கல்வியிலும் கரை கண்டவர்கள்.

பொருண்மிய மேம்பாட்டை எப்படி அடைவது என்ற, எதிர்கால, நிகழ்கால எதிர்வுகூறல்களைத்திட்டடங்களாகவகுத்துச் செயல்படும் ஆற்றல், ஒருநாட்டு மக்களை வழிப்படுத்தும் தலைமைகளாலே ஏனைய நாடுகளில் முன்வைக்கப்படுகின்றன. எமது நாட்டிலோ, எமது சமூகத்திலோ தன்னிறைவுப் பொருளாதாரக் கொள்கைகள் தோற்றுப்போயே உள்ளன.

இருக்கும் பணிகளையும் ஏற்றுக்கொண்ட பணிகளையும் கூட, கடமை, உணர்வுடன் அல்லாமல், கடமைக்காகவே செய்து முடிக்கின்றமையால், வளர்ச்சி என்பதை அல்லது மேம்பாடு என்பதை எதிர்பார்க்க முடியாது. பொழுது புலர்ந்து மீண்டும் இரவாகி விடிவது போலவே, எமது இனத்தின் வாழ்க்கை வட்டம் தொடர்கின்றது.

எனவே குடும்ப, கிராம உறவுகள் மூலமாக, மீண்டும் நாம் கட்டி எழுப்பப்பட்டு, சமூக விருத்தியை, மேம்பாட்டை அடையக் கூடிய வழிவகைகளை, நாமாகவே முன்னெடுக்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் முழு விருப்புடனும் அர்ப்பணிப்பு உணர்வுடன் எமது நாளாந்த கடமைகளை முன்னெடுப்போம். ஒன்றுபட்டு கூட்டுணர்வுடன் செயற்பட்டு வாழ்வில் வெற்றி காண்போம்.

# அரசமைப்பின் மூலம் நியமிக்கப்பட்ட சுயாதீன அதிகாரிகள் தரப்புக்களும் ஆணைக்குழுக்களும் சனநாயக ரீதியில் செயற்படுகின்றனவா?

சட்டத்தரணி
கனக நமநாதன்

சனநாயகத்தின் ஒரு அங்கமாக சுயாதீன அதிகாரிகள் நியமனமும், சுயாதீன ஆணைக்குழுக்கள் நியமனமும், செயற்பாடுடையதாக விளங்குகின்றன. அரசமைப்பில் சில முக்கிய அதிகாரிகளை அரச தலைவர் நியமிப்பது தொடர்பாகவும், சம்பளம் மற்றும் குறித்த பதவிகளுக்குத்தேவையான அடிப்படை அம்சங்கள் குறித்தும் உறுப்புரையில் காணலாம். குறிப்பாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம், கணக்காய்வாளர் தலைமையதிபதி, சட்டமா அதிபர், தேர்தல் ஆணையாளர், தலைமை நீதிபதி போன்ற சுயாதீனமாக இயங்கும் உயர் அதிகாரிகளின் நியமனங்கள் அரசமைப்பில் விதைந்துரைக்கப்பட்டவாறு அரச தலைவரால் மேற்கொள்ளப்படுகின்றன.

**அரசமைப்புக்கான 19ஆவது திருத்தத்தின் படியான அதிகாரக் கட்டுப்பாடு**

ஆனால் அண்மையில் நிறைவேற்றப்பட்ட அரசமைப்புக்கான 19ஆவது திருத்தத்தின்படி ஏற்கனவே உருவாக் கப்பட்ட அரசமைப்புச் சபையின் பரிந்துரையைப் பெற்றே அரச தலைவர் குறித்த நியமனங்களை மேற்கொள்ள வேண்டுமென திருத்தப்பட்டுள்ளது. சில அதிகாரிகளின் நியமனங்கள் தவிர, ஏனையவை சில அதிகாரிகளின் தலைமையில் ஒரு குழுவும், அந்த குழு உறுப்பினர்களைச் சபாநாயகர், தலைமை அமைச்சர், எதிர்க்கட்சி தலைவர், சிறுபான்மை அரசியல் கட்சிகளின் பிரதிநிதியொருவர் எனச் சேர்ந்து சுயாதீன ஆணைக்குழுவாக நியமிப்பார்கள்.


சட்டமா அதிபராக அந்தத் திணைக்களத்தின் மூத்த சட்டவாதியாக உள்ளவரையே அரச தலைவர் நியமிப்பது வழக்கமானதொன்று. சட்டமா அதிபரின் தொழிற்பாடு அரச தலைவருக்கும் தலைமை அமைச்சருக்கும் சட்ட ஆலோசனை வழங்குவதாகும். அத்தோடு குற்றவியல் வழக்குகளை மேல் நீதிமன்றில் தொடுப்பதற்குத் தேவையான குற்றப்பத்திரிகை வழக்குப் பிராது ஆகியவற்றை தயாரித்தலும் மேல் நீதிமன்றில் வழக்குகளை நடத்துவதுமாகும்.

**சுயாதீன ஆணைக்குழுக்கள் அரசியல் தலையீடுகளின்றி செயற்பட வாய்ப்பு**

சுயாதீன ஆணைக்குழுக்களை அமைப்பதும், அவை அரசியல் தலையீடுகளின்றி சுயாதீனமாக செயற்பட்டு வருகின்றமையும் ஒரு சிறந்த சனநாயகத்தை செயலுருவாக்கும் விடயமாகும். தேர்தல் ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, மனித உரிமை ஆணைக்குழு, பல்கலைக்கழக வழங்கல் ஆணைக்குழு, கணக்காய்வாளர் சேவை ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, பகிரங்க சேவை ஆணைக்குழு, நீதிச் சேவை ஆணைக்குழு, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு போன்ற ஆணைக்குழுக்கள் சனநாயக அடிப்படையில் எவரது தலையீடுகளுமின்றிச் சுயாதீனமாக இயங்கும் நோக்கம் கொண்டவை.

இவ்வாறு சுயாதீனமாகச் செயற்படுவதற்கான அதிகாரத்தைவழங்கியும்வேறுதரப்புகளதுதலையிடாத் தன்மை உறுதிப்படுத்திய போதிலும், அரசமைப்புக்கு அமைய அதிகாரிகள் அல்லது ஆணைக்குழுக்கள் நாட்டின்பிரசைகளின்தேவைகளை அல்லது பிரச்சினைகளை ஊன்றி அலசி ஆராய்ந்து முடிவு எடுக்காது. நேர்மையற்ற, சனநாயக ரீதியற்ற விதத்தில் தீர்மானங்கள் மேற்கொள்ளும்போது அவற்றை எவ்வாறு நேர் சீர் செய்வது என்பதில் தெளிவற்ற தன்மையே காணப்படுகின்றது.

வேலியே பயிரை மேய்வதற்கொப்ப, சனநாயகத்தைக் கட்டிக் காக்க வேண்டிய ஒருவர், சனநாயகத்துக்கு முரண்பட்ட வகையில் செயற்பட்டால் எவ்வாறு நாடு முன்னேறும் என விசனம் தெரிவிக்கப்படுகின்றது. அரச தலைவர் கூடத் தலையிட முடியாதபோது அரசமைப்பினால் நியமிக்கப்பட்ட அந்த அதிகாரியின் குறித்த முடிவை மாற்ற வைப்பதற்கு என்ன வழி என்பதில் சட்டம் மௌனிக்கின்றது.



**வழக்கின் சாட்சிகள் நீதிமன்றில் முன்னிலையாவது குறித்து விதண்டாவாதக் கருத்து**


தமிழ்பேசும் எதிரிகளுக்கு எதிரான வழக்கு, தமிழ்ச் சட்டத்தரணிகள் வாதாடும் வழக்கு, தமிழில் விசாரிக்கப்படக்கூடிய சூழ்நிலையில், சாட்சிகள் வவுனியா நீதிமன்றில் முன்னிலையாவதற்கு அச்சப்படுகின்றனர் என்ற ஒரு விதண்டாவாதக் கருத்தை மட்டும் கூறி நீதிமன்ற விசாரணையை சிங்களப் பகுதி நீதிமன்றுக்கு மாற்றுவது நீதிக்குப் புறம்பான செயல் என்பது வெளிப்படை.

எதிரிகளின் சட்டத்தரணிகள் சிங்கள மொழியில் பரிச்சயமற்றவர்களாக இருப்பதினால் சிங்கள மொழி சட்டத்தரணிக்களை நாடி அவர்களை முன்னிலையாக வைப்பதற்கும். அவர்களுக்கு வழக்குக் குறித்த தெளிவைப் பெற்றுக்கொள்ள வைக்கவும் காலம் எடுக்கும் என்பதையும் தாண்டி அனுராதபுரத்தில் எதிரிகளின் குடும்பத்தினர் மற்றும் தமிழ் பேசும் சட்டத்தரணிகள் தங்கியிருந்து வழக்கை நடத்துவது பெரும் பிரச்சினையானதொன்று.

அதை விட அரசு சாட்சிகளுக்குத் தேவையானபாதுகாப்பைவழங்கி வவுனியா நீதிமன்றில் வழக்கை விசாரிக்க வைப்பதில் என்ன தடைகள் இருக்கின்றன என்பதில் விளக்கமில்லை. இவற்றில் எதை சனநாயக செயற்பாடாகக் கொள்வது?

இத்தனை வருடங்களாக, குறித்த வழக்கு வவுனியா நீதிமன்றில் விசாரிக்கப்பட்டபோது நீதிமன்றில் முன்னிலையாகியிருந்த சாட்சிகளுக்கு, குறித்த வழக்கை மூன்று நாள்களுக்கு தொடர்ச்சியாக விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ள இந்தத் தருணத்தில், இவ்வாறாக விசாரணைக்காக நீதிமன்றத்தை மாற்றுவதன் மூலம் இலங்கையில் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் உருவாவதை விரும்பாத சில சக்திகள் செயற்படுகின்றன என்ற உண்மை புலனாகிறது.

உள்நாட்டு சிங்கள நீதிபதிகளின் விசாரணையில்தமிழ்மக்களுக்கு நம்பிக்கையற்ற நிலைமை வலுப் பெறுகின்றது.



## ஆசிரியருக்கான கடிதம்

### நம்பிக் கெட்டவர்கள் எம்மவர்கள்

"குட்டக் குட்டக் குனிபவனும் மடையன், குனியக் குனியக் குட்டுபவனும் மடையன்", என்றொரு முதுமொழி தமிழில் வழக்கில் உள்ளது.

சிங்கள அரசியல்தலைவர்களது வாக்குறுதிகளை நம்பி, அவர்கள் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவார்கள் என எதிர்பார்த்து ஏமாந்து போன வரலாறுகள் தமிழர்களது வரலாற்றில் நிறையவே உள்ளன.

'சூடுபட்ட பூனை அடுப்பங்கரை நாடாது' என்ப தற்கொப்ப சிங்கள மேலாதிக்கவாத அரசியல் தலைவர்கள் மீதான நம்பிக்கையீனத்தால் தமிழ்த்தரப்பினர்கள் பின்வந்த காலகட்டங்களில் எச்சரிக்கையாகவே தமது அரசியல் செயற்பாடுகளையும், நகர்வுகளையும் முன்னெடுத்து வந்தனர்.

இருப்பினும், எப்போதுமே எதிர்ப்பு அரசியல் செய்வதால் பயனேதும் ஈட்டப்படப்போவதில்லை என்ற விமர்சனங்கள் எம்மவர் மத்தியிலிருந்து எழுந்ததால், சரி, இணக்க அரசியல் போக்கில் செயற்பட்டுத்தான் பார்ப்போமே என்ற முடிவுக்கமைந்த செயற்பாட்டால் கூட மீண்டும் மீண்டும் ஏமாற்றப்படும், ஏய்க்காட்டப்படும் நிலையே தொடர்கிறது.

தமிழ்த்தரப்பினர் இனிமேல்தாம் விட்டுக்கொடுத்து, இணங்கி செயற்படும் போக்கில் இறுக்கத்தைக் கைக்கொள்ளக்கூடுமென்ற எதிர்பார்ப்பில் தற்போது சிங்கள ஆட்சித்தரப்பினர்கள் 'ஐஸ்'வைக்கும் போக்கில் இறங்கியுள்ளனரோ என்று சந்தேகிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

அண்மையில் வெளியான பத்திரிகைச் செய்திகள் இதனை நிரூபிப்பது போன்று அமைவதாகக் கருத முடிகிறது.

தமிழும், சிங்களமும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய மொழிகள், இரண்டுமே இந்தியாவிலிருந்து இங்கு வந்தவையே என்கிறார் அரச தலைவர்.


வடக்கிலும், கிழக்கிலும் வேறுபட்ட தனியான இராச்சியங்கள் இருந்தன. இந்த வரலாறு இன்று கூறப்படுவதில்லை என்று கவலைப்படுகிறார் நிதி இராஜங்க அமைச்சர் எரான் விக்ரமரத்ன.

சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லீம்கள் எல்லோருமே இந்தியாவில் இருந்து வந்தவர்கள். கௌதம புத்தரும் இந்தியாவில் இருந்துதான் வந்தார். இலங்கையின் இறுதி அரசன் கூடத் தமிழ் மகன் என்பது தான் வரலாறு என்கிறார் உயர்கல்வி, நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல.

இப்படித் தமிழர்களது தலையில் 'ஐஸ்' வைக்க முனையும் இன்றைய ஆட்சித்தரப்பினரும், ஆட்சித் தலைவர்களும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் எத்தனையோ பிரச்சினைகளில் சிலவற்றுக்குத்தானும் தீர்வுகண்டதுண்டா? இந்த அரசுபதவியேற்று இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் கழிந்துவிட்ட இன்றைய நிலையில், சவால்களுக்கு முகம் கொடுக்கவேண்டி ஏற்படாத, பாரதூரமான பாதிப்பு எதுவுமற்ற தமிழ் மக்களது வாழ்வியல் பிரச்சினை களில் சிலவற்றுக்குத்தானும் இன்றைய அரசு உரிய தீர்வை வழங்கியிருந்தால், இன்றைய கூட்டரசின் மீது தமிழ் மக்கள் ஓரளவுக்கேனும் நம்பிக்கை வைக்க இயலும். ஆனால் அத்தகைய நிலையெதனையும் இன்று வரை காணமுடியவில்லையே! எங்கும், எதிலும், தமிழ் மக்களை ஏமாற்றும் போக்கையே அவதானிக்க முடிகிறது. இந்த நிலையில் தமிழ் மக்கள் இன்றைய அரசுக்கு எந்த வகையில் ஆதரவளிக்க முடியுமென்ற கேள்வி உயர்ந்து எழுந்து நிற்கிறது.

ப.பிரதீபன், கைதடி

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வி
**ஜெயன் அனுசியா**
**156 புள்ளிகள்**

எமது பாடசாலையில் இம்முறை **2017 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிக்குமேல் பெற்று சித்தியடைந்ததோடு பாடசாலைச் சமூகத்திற்கும் பெருமை தேடித்தந்த** செல்வி **ஜெயன் அனுசியா** அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**மற்றும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற பின்வரும் மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.**

| | | |
|---|---|---|
| செல்வி நந்தகுமார் ரதுர்திகா | - | 154 புள்ளிகள் |
| செல்வி சாந்தன் சரணியா | - | 147 புள்ளிகள் |
| செல்வி தியாகேசன் பூரணி | - | 140 புள்ளிகள் |
| செல்வன் கோகிலரூபன் விதுர்ஷனன் | - | 134 புள்ளிகள் |
| செல்வி குகனேஸ்வரன் அபிரா | - | 131 புள்ளிகள் |
| செல்வி நாகேஸ்வரன் அனுசியா | - | 117 புள்ளிகள் |
| செல்வி கோவிந்தராசா கலையரசி | - | 106 புள்ளிகள் |

அத்துடன் இம் மாணவர்களுக்கு கற்பித்த **அதிபர், ஆசிரியர்கள் மற்றும் ஊக்கமளித்த பெற்றோர்கள், நலன்விரும்பிகளுக்கும்** எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

கல்வியில் மேன் மேலும் சிறக்க செம்மணத்தம்புலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் அருள்பாலிக்க வேண்டுகின்றொம்.

**அதிபர், ஆசிரியர்கள் மற்றும்**
**பாடசாலைச் சமூகம்,**
**யா/நயினாதீவு ஸ்ரீ கணேச கனிஷ்ட மகா வித்தியாலயம்**

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



**யா/ சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஊடாகத் தோற்றி ஐந்தாம் தரம் புலமைப் பரிசில் பரீட்சையில் பாடசாலை மட்டத்தில் அதி கூடிய புள்ளியான 170 புள்ளிகளைப் பெற்ற சூரியகுமார் நந்தாயினி** தம்பதிகளின் செல்வப் புதல்வி



**சூ.சஹானா**

அவர்கள் இப்பரீட்சையில் சித்தியெய்தியமையிட்டு பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் கல்வியில் சிறந்து விளங்கி பட்டங்கள் பல பெறவேண்டும் என ஆஞ்சநேயர் துணை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**அன்புடன் வாழ்த்துவோர்:-**

**ஆறுமுகம் (அப்பப்பா) - அம்மம்மா (மல்லாவி),**
**சித்தப்பா (குகதாசன் - மாணவ ஆசிரியர், வவுனியா தேசியகல்வியற் கல்லூரி)**

உ
சிவமயம்







# இணுவில் கந்தசுவாமி கோயில்

## சத்துரு சங்ஹார திரிசதி ஹோமமும்

# கந்தசஷ்டி பெருந்திருவிழாவும்

முருகன் அடியார்களே!

நிகழும் ஏவிளம்பி வருஷம் ஐப்பசி மாதம் 3 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (20.10.2017) தொடக்கம் (25.10.2017) புதன்கிழமை வரை அதிகாலை 4.00 மணிதொடக்கம் காலை 7.15 மணிவரையும் பிற்பகல் 2.00 மணிதொடக்கம் 4.15 மணிவரையும் சண்முகார்ச்சனையும் தொடர்ந்து சத்துரு சங்ஹார திரிசதி ஹோமமும் நடைபெற இணுவை சண்முகப் பெருமான் திருவருள் கைகூடியுள்ளது. கந்த சஷ்டி பெருந்திருவிழாவிலும் பங்குகொண்டு எம்பெருமானுடைய திருவருளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

**தினமும்**

**அதிகாலை** : 4.00 மணி திருப்பள்ளிப் பூசையைத் தொடர்ந்து பிரகார பூசை
4.45 மணி வசந்தமண்டபப் பூசை
5.00 மணி சண்முகார்ச்சனையைத் தொடர்ந்து ஹோமம். பூர்ணாகுதி

**காலை** : 7.30 மணி பூசை
8.30 மணி சண்முகார்ச்சனை
9.30 மணி தினமும் 108 வலம்புரி சங்காபிஷேகம்
11.00 மணி பூசை
11.30 மணி வசந்தமண்டபப் பூசை தொடர்ந்து சண்மகார்ச்சனை

**பிற்பகல்** : 2.00 மணி சாயரட்டை பூசை
: 2.30 மணி வசந்தமண்டபப் பூசை தொடர்ந்து சண்முகார்ச்சனை ஹோமம். பூர்ணாகுதி
: 4.30 மணி கந்தபுராண படிப்பு
: 5.00 மணி இசை ஆராதனை
: 6.00 மணி 2 ஆம் காலப் பூசை
: 6.30 மணி வசந்த மண்டபப்பூசை
தொடர்ந்து சண்முக அர்ச்சனை அதனைத் தொடர்ந்து சுவாமி வீதியுலா

**22.10.2017 ஞாயிற்றுக்கிழமை**
- மாலை 3.00 மணி தண்டாயுதபாணி விசேட அபிஷேகம்

**25.10.2017 புதன்கிழமை**
- மாலை 4.00 மணி சூர சங்ஹாரம்
- இரவு பிராயச்சித்த அபிஷேகம் அதனைத் தொடர்ந்து சண்முகார்ச்சனை

**26.10.2017 வியாழக்கிழமை**
- காலை : 4. 00 மணி அபிஷேகம் பூசை
- காலை: 5. 00 மணி வசந்த மண்டபப் பூசை
- காலை : 6.00 மணி ஸ்கந்தபுட்கரணி தீர்த்தம்
- முற்பகல் : 10.00 மணி அபிஷேகம். பூசை தொடர்ந்து சண்முகார்ச்சனை
- மாலை : 6.00 மணி திருக்கல்யாணம்

**27.10.2017 வெள்ளிக்கிழமை**

**ஆறுபடை மூர்த்திகள் அலங்கார பவனி**
- காலை : 8. 00 மணி விஷேட அபிஷேகம்
- மாலை 6.30 மணி வசந்த மண்டப பூசை நடைபெற்று ஆறுபடை மூர்த்திகளின் வீதி தரிசனம்

**கந்தசஷ்டி நாள்களில் ஆறுகாலப் பூசையின் போது சண்முகார்ச்சனை நடைபெறும்.**

குறிப்பு : ஹோமத்தில் பூர்ணாகுதி செய்ய விரும்பும் அடியார்கள் அலுவலகத்தில் முன்கூட்டியே பதிவு செய்யுமாறு வேண்டுகின்றோம்.

**தர்ம கர்த்தா சபை - இணுவில் கந்தசுவாமி கோயில்.**

# கந்தன் கருணை

சிவஸ்ரீ பூரண தியாகராஜக் குருக்கள்

எங்கும் நிறைந்த பரம்பொருள், ஒளி உருவமாக உலகினை உய்விக்க ஆறு தீப் பொறிகளாய் உருவெடுத்தார்.தேவர்களை அசுரர்களிடம் இருந்து காத்தருள நற்கருணை புரிந்தார்.அந்தவகையிலே மனிதர்கள் இறையன்பில் திழைத்து தங்களிடத்தில் ஆட்சி பெற்றுள்ள ஆணவம்,கன்மம்,மாயை என்ற மூன்று தீவினைகளையும் அகற்றிட சித்தம் கொள்கின்றனர்.அவன் பாதம் பணிந்து அருள்வரங்களையும் சுபீட்சமான வாழ்வில் அமைதியையும் வேண்டிக்கொள்கின்றனர்.இறை திருநாமங்களும் உருவமாயும் அருவுருவமாயும் எழுந்தருளல் கொண்டு மனிதனை காத்து இரட்சிக்கின்றன.

'இறை' என்கின்ற அருளின் திருச்சொரூப பிடிமானமுடைய விம்பங்கள் தமது நிலையிலிருந்து நழுவி உலகினை உய்விக்கத் தலைப்படுகின்றன.அவ்விதமே சிவப் பரம்பொருளின் நெற்றிக் கண்களில் இருந்து ஒளிப்பிளம்பு கீழ் நோக்கிப் பாய்ந்து வந்து உலகோடு உலகாய் நிலைத்து மாந்தருக்குள் ஆர்வமுடன் ஒன்றுகூடி உள்ளன்புடன் தேடினால் கிடைக்கும் பொருளாய் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. "ஸ்கந்தன்" என்னும் திவ்ய காருண்யம் உடைய மூர்த்திகரம் பொருந்திய அழகின் சுடராய் குமரன் என்னும் நாமம் கொண்டு விளங்குகிறது.குன்றாத அறிவுக் கனலாய் எங்கும் திகழ்கிறது.

**சிவ புத்திரன் தோற்றம்**

சிவ மகிமையின் பிரதி உபகாரமாய் ஆறு திவ்ய சக்தி கொண்டு தோற்றம் கண்ட ஒளிப் பிழம்பை வாயு தேவனும்,அக்கினி தேவனும் தாங்கிச் சென்றனர்.கங்கையில் சேர்ப்பித்தனர்.இறை அருளின் கரிசனையாலும் திருவிளை யாடல் கைங்கரியத்தாலும் ஆறு தீப் பிழம்புகள் கங்கையின் வழி சரவணப் பொய்கையை வந்தடைந்தன.இருளில் ஒளி தோன்றியது. உலகினை உய்விக்க உத்தமன் முருகன் தாமரை மலர் மீதாய் மழலை உருவம் கொண்டு தோன்றினான். கார்த்திகைப் பெண்களின் தாய்மை அன்போடு அறுவரும் அரவணைப்பையும்,ஞான கடாட்சங்களையும்,போர் வித்தை களையும் கற்றுத் தேர்ந்தனர்.ஆறுமுகக் கடவுளாய் எழுந்தருளல் கொண்டனர்.அசுரர்களை அடக்க எல்லாம் வல்ல சிவனால் முடியாதா..? அப்பேரொளியே இவ்விருளைப் போக்க முடியாதா...? அசுரர்களை அழிக்க இவ்வளவு பிரயாசை தேவையில்லையே என்று எண்ணத் தோன்றும்.





ஆனாலும் உலகில் ஆட்சி புரியும் அசுரத் தன்மையை மாற்றி அதில் தெய்வத் தன்மையை நிலைநாட்ட வேண்டுமானால்,இந்தச் சடப்பொருளை சைதன்யமாக்க வேண்டுமானால் அனைத்துக்கும் மேலே பரமாகாசத்தில் சுயம் பிரகாசமாக விளங்கும் அகண்ட சோதியிலிருந்து ஓர் ஒளி பிறந்து இம்மா நிலத்தை படிப்படியாக ஊடுருவுவது அவசியம். அவ்வொளி தான் 'ஸ்கந்தன்'. சிவனாரின் ஐந்து முகமும் அதோ முகமும் சேர்ந்து ஆறுமுகமான பொருளாயிற்று.

> “
> வாழ்வில் அஞ்சி அலையுங்கால் ஆறுதல் தர ஆறுமுகம் தோன்றும். கொடிய போர் தோன்றும் வேளை துணையாக வேல் தோன்றும். மனதில் உள்ளன்புடன் ஒருதரம் நினைத்தாலே அவருடைய இருகாலும் தோன்றும். மனப்பூர்வமாய் அவன் பாதம் பணிந்திட வாழ்வில் நலம் பல கைகூடும்.

இவ்வாறு தோன்றிய ஒளி மாநிலத்தில் நிலைபெறுவதற்காக ஊடுருவி பூமியில் உள்ளிருக்கும் நெருப்பிலும் பின் சிறிது மேல் மட்டத்துக்கு வந்து நீரிலும் உருவெடுத்து பின் மண்ணிலிருந்து முளைக்கும் நாணல் புல்லிலும் தோன்றிப் பூமியில் நிலைபெற்றது. பௌதீகத் தத்துவத்திலும் நிலைபெற வேண்டி கார்த்திகைப் பெண்களும் அவனது தோன்றலில் பங்குகொண்டனர் என்பது வரலாறு.

**சிவ ஒளியின் மகிமை**

தெய்வத்துக்கு எதிரான சக்திகளை அடக்கி அவைகளையும் தெய்வப் பங்கில் திருப்புவதே இவ்வொளியின் சிறப்பான கருமம். சூரனைச் சங்கரித்து மயிலாக மாற்றித் தன் வாகனமாக்கிக் கொண்டான் முருகன். அசுரனையும் தெய்வத்தைச் சுமக்குமாறு மாற்றி விட்டான். தனக்கு எதிரானவற்றை அழிப்பதைக் காட்டிலும் அவைகளைத் தன் பாங்கில் திருப்புவது மிகக் கடினம். இந்தக் கடினமான செயலைச் செய்யவே தேவசேனைக்குத் தலைமை தாங்கினான். "தேவசேனாதிபதி" என்ற பெயரையும் முருகன் பெற்றான்.



**சிவமும் சக்தியும் தரும் உய்வு**

சிவனிலிருந்து தோன்றிய பேரொளி செயலாற்ற வேண்டுமானால் அது சக்தியுடன் கூட வேண்டும். விண்ணில் கருமமாற்றும் போது தேவசாம்ராஜ்ஜியத்தை நிலைநாட்டி தேவர்கள் சேவைக்குத் தலைமை தாங்கி நின்றான். தேவசேனையே சக்தியாகின்றது. மண்ணில் கருமமாற்றும் போது வள்ளி அவனுடைய சக்தியாகத் திகழ்கின்றாள்.

ஒருவன் ஒரு செயலை நிகழ்த்தி அதனை நிறைவாக்க மூன்று சக்திகள் முக்கியம். முதலில் இச்சை தொழிற்படவும், கிரியை முறை தவறாமல் நிகழவும், ஞானம் வெற்றி தரும். அறிவுடமையாகவும் பொதிந்து முச்சத்திகளும்

## கந்த சஷ்டி விரதகால அ(பொ)ருளுரை

இணைந்தால் தான் ஒரு செயல் பூரணத்து வமடையும். இதனை உணர்த்தியே இச்சாசக்தி, ஞானசக்தி, கிரியாசக்தி என்னும் முச்சத்தி களும் முறையே உருவமான வள்ளி, தெய்வயானை,வேல் ஆகியவற்றுடன் இணைந்த ஒளிப் பிளம்பான முருகன் உலகினை உய்விக்க வேண்டிக் காட்சி தருகின்றான்.

வாழ்வில் அஞ்சி அலையுங்கால் ஆறுதல் தர ஆறுமுகம் தோன்றும். கொடிய போர் தோன்றும் வேளை துணையாக வேல் தோன்றும். மனதில் உள்ளன்புடன் ஒருதரம் நினைத்தாலே அவருடைய இருகாலும் தோன்றும். மனப்பூர்வமாய் அவன் பாதம் பணிந்திட வாழ்வில் நலம் பல கைகூடும்.



தேவர்கள் இன்பத்தையே தவிர துன்பத்தையே அறியாதவர்கள். "செல்வம் வந்துற்ற போது தெய்வமும் சிறிது பேணார்" என்ற படி தமது இன்பக்களிப்பிலே ஈசனைக் கூட மறந்திருந்தனர். அதன் காரணம் கொண்டு அசுரரால் தண்டிக்கப்பட்டனர். அசுரர் கரிய மேனியும் கொடிய பார்வையும் கடிய சொற்களும் பெரிய உருவும் கொண்டவர்கள். அவர்களின் அக்கிரமங்கள் அதிகரித்தமையினால் தேவர்கள் அஞ்சினர். அசுரர்களுக்கு நீதியுரைத்தனர். பலாபலனாய்க் கிடைத்தது என்ன..? கொடிய தண்டனையே கிடைத்தது. எதிர்மொழி பேசாது தலை சாய்த்தவர்களுக்கு நல்வாழ்வு கிட்டியது. தேவர்கள் இழி செயல்களிலும் ஈடுபடுத்தப்பட்டனர்.

**சூர சம்ஹாரமும் அருளுரையும்**


சூரன் நூற்றெட்டு யுகம் அரசாண்டான். தேவர்களையெல்லாம் இம்சைப்படுத்தி சிறை வைத்தான். கொடுமை தாங்க இயலாத தேவர்கள் எல்லோரும் "முருகா முருகா" என்று ஓலமிட்டனர். முருகன் தேவர்களின் வேண்டுதலுக்கு இரங்கி வீரபாகு தேவரைத் தூதனுப்பினார். அசுரர்களிடத்தே சமாதானம் மொழிந்தார் . ஆனால் சூரனோ இவன் பாலகன் தானே என்று எண்ணி இகழ்ந்து பகைத்து நின்றான். எனவே முருகனே நேரிற் சென்று அசுரரைக் கதி கலங்கச் செய்து சூரனை ஆட்படுத்தினார். 'விஸ்வரூப தரிசனம்' செய்து சூரனுக்கு ஞானம் உரைத்தார்.

வேல்பட்டவுடன் சூரனுக்கு உயிர் விளக்கமுற்றதை, மெய்ஞானம் தோன்றியதையறியலாம். வேலினால் கூறுபட்டசூரன் முற்பிறப்பில் செய்த தவப்பேற்றின் பயனாய் சேவலாகவும் மயிலாகவும் தோற்றம் கொண்டான். சேவலைக் கொடியாகவும் மயிலை வாகனமாகவும் ஏற்றுக் கொண்டார். முருகன் இவ்வாறு தேவர்கள் அஞ்சிய போது ஆறுமுகனாகத் தோன்றினார். போரில் வேல் தோன்றி சூரனை அடக்கியாண்டது. இதுவரை ஆணவரூபமாக இருந்து அதிகாரம் செய்த சூரனுடைய வாயிலிருந்தே "முதல் வேண்டும்" என்ற வார்த்தை வெளிவந்ததெனில் முருகனுடைய பெருமையினை யாரால் அளவிட்டுக் கூற முடியும். எனவே நாம் அனைவரும் கந்தசஷ்டி விரதம் கடைப்பிடிக்கப்படும் இந்தப் புனித காலத்திலே முருகா என வொருதரமோதடியார் முடிமேல் இருதாழும் புனைவோனாகிய" முருகனை முக்கரணங்களாலும் முழுமனதுடன் வணங்குதல் வாழ்வின் பேறே. அவனருளால் சகல நலன்களும் பெற்றுப் பூரணமான ஆனந்தமான வாழ்வினைப் பெறலாமென்பதில் சிறிதும் ஐயமில்லை.



# தீபாவளி சிறப்பு பலன்கள் 2017

தீபாவளி என்பது எமது வாழ்வில் மிக முக்கியமான பண்டிகை. இந்தத் தீபாவளியில் அனைவரினதும் வாழ்வில் இருள் நீங்கி மகிழ்ச்சி கிடைக்க வேண்டி இறைவனைப் பிரார்த்திப்போம். தீபாவளி என்பது லக்ஷ்மிக்கு உகந்த தினமாகும். தனத்துக்கு தேவதை லக்ஷ்மி. எனவே பன்னிரு ராசிக்காரர்களுக்கும் இந்த தீபாவளி முதல் அடுத்த தீபாவளி வரை பொருளாதார நிலை எப்படி இருக்கும்?



## சிங்கம்

ஆளுமை கிரகம் என்று சொல்லக் கூடிய சூரியனை ராசிநாதனாகவும் வித்யாகாரகன் என்றழைக்கக் கூடிய புதனை தனாதிபதியாகவும் கொண்ட நீங்கள் கொஞ்சம் அவசரபுத்திகாரர். இந்தாண்டு தீபாவளி உங்கள் வாழ்வில் மறக்க இயலாத பண்டிகையாக இருக்கும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் வரிசையாக வந்த வண்ணம் இருக்கும். வாழ்க்கைத்துணையுடன் உள்ள உறவுமுறை நல்லபடியாக இருக்கும். தொழில் உத்தியோகத்தில் நல்ல பலன்களைச் சந்திக்க ஆயத்தமாக இருங்கள். மாசி மாதத்திற்குப் பிறகு இன்னும் சிறப்பாக இருக்கும்.

## கன்னி

வித்யாகாரகன் புதனை ராசிநாதனாகவும், தனகாரகன் சுக்கிரனை தனாதிபதியாகவும், சூரியனை விரையாதிபதியாகவும் கொண்ட நீங்கள் உழைப்பதற்கு முக்கியத்துவம் கொடுப்பவர். இந்தாண்டு தீபாவளி உங்களுக்கு அதிகமான செலவைத் தருவதாக இருக்கும். குடும்பத்தில் நீண்ட பிரயத்தனத்துக்குப் பிறகு சுப நிகழ்ச்சிகள் நடக்கும். வாழ்க்கைத்துணையுடன் கசப்புணர்வு ஏற்பட்டு மறையும். தொழில் உத்தியோகத்தில் உங்களுக்கான அங்கீகாரம் கடும் முயற்சிகளுக்குப் பின் கிடைக்கும்.

## துலாம்

தனகாரகன் சுக்கிரனை ராசிநாதனாகவும், தைரிய காரகன் என்று சொல்லக்கூடிய செவ்வாயை தனாதிபதியாகவும் கொண்ட நீங்கள் அனைவரையும் சமமாக பாவிக்கும் தன்மையுள்ளவர். இந்தாண்டு தீபாவளி உங்களுக்கு இக்கட்டான சூழ்நிலையில் நன்மைகளை அள்ளித் தர போகிறது. குடும்பத்தில் சந்தோஷம் நிலைத்திருக்கும். ஆனாலும் வாக்குவாதங்களும் இருக்கும். வாழ்க்கைத் துணையுடன் இருந்து வந்த மனக்கிலேசங்கள் மறையும். தொழில் உத்தியோகத்தில் எதிர்பார்த்த முன்னேற்றம் கிடைக்கும்.


## விருச்சிகம்

தைரியகாரகன் செவ்வாயை ராசிநாதனாகவும், சுபகாரகன் என்று வணங்கக்கூடிய குருவை தனாதிபதியாகவும் கொண்ட நீங்கள் எடுத்த முயற்சிகளில் பின் வாங்காதவர். இந்தாண்டு தீபாவளி உங்களுக்கு அனுபவம் தரும் பண்டிகையாக இருக்கப் போகிறது. குடும்பத்தில் மகிழ்ச்சி குடி கொண்டிருந்தாலும் அவ்வப்போது மனதிற்கு சங்கடம் அளிக்கும் சம்பவங்களும் நிகழும். வாழ்க்கைத்துணையுடன் அடிக்கடி கருத்து மோதல்கள் வரலாம், நீங்கள் விட்டுக் கொடுப்பது மட்டுமே இதற்கான மருந்து.



## தர்ம சிந்தனை

### இஸ்லாம் எனும் இனிய மார்க்கம்



'தர்மம்' என்ற சிந்தனையை ஒரு சிறு வட்டத்திற்குள் வைத்தே மனிதன் வாழ்ந்து வருகிறான். ஆனால் அதன் விசாலம் கற்பனைக்கும் எட்டாத அளவு பரவி இருப்பதை அவன் அறிந்திருக்க வாய்ப்பில்லை.

பணம் படைத்தவன், இல்லாதவனுக்கு கொடுப்பதுதான் 'தர்மம்' என்று பொதுவாகக் கருதப்படுகிறது. அறிவு படைத்தவன் பிறருக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது. வலிமை படைத்தவன் தன் உறவுகளை தீயவர்களிடம் இருந்து காப்பது. சிரமப்படு பவர்களுக்கு அவர்கள் மீட்புப் பெற உதவுவது என்று வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் பிறருக்கு உதவுவதுகூட தர்மத்தின் ஒரு அங்கம் தான்.

தர்மச்செயல் அல்லது தர்ம சிந்தனை குறித்து மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் இஸ்லாம் தனது இறைமறையில் விரிவாக விளக்கியுள்ளது. அதுபோல அண்ணல் எம் பெருமானார் (ஸல்) தர்மம் குறித்தும், தர்மச்செயல் குறித்தும் இவ்வாறு விளக்கியுள்ளார்.

"உன் சகோதரனைச் சந்திக்கும் போது வணக்கம் சொல்லிப் புன்னகைப்பது கூடத் தர்மம்தான்".

பொதுமக்கள் நடந்து செல்லும் பாதையில் கிடக்கும் முள்ளை எடுத்து பாதுகாப்பான வழியை ஏற்படுத்துவது அல்லது தடங்கலாய்க் கிடக்கும் மரங்களை, கற்களை அப்புறப்படுத்துவது. ஏன் அற்ப உயிரான சிறு எறும்பு பாதையில் ஊர்ந்து செல்லுமானால் அதற்கு வழிவிட்டு, அது தன் எல்லையை அடையும் வரை மனிதன் தன்னிடத்தில் தாமதித்து நிற்பதும் தர்மம்தான்'.

அல்லாஹ் விரும்பும் வகையில் எமது தர்மங்கள் அமைய வேண்டும் என்றால் சில வரைமுறைகளும், கட்டளைகளும் நிர்ணயம் செய்யப்படுகின்றன. ஒருவன் தர்மம் செய்கின்ற அந்தஸ்தை அடைகிறான் என்றால் அது அல்லாஹ் அவனுக்கு அளித்த பிச்சை. அதுபோன்று, தன் தேவைக்காக ஒருவன் உன்னை நாடி வருகிறான் என்றால் அவன் தாழ்ந்தவன் அல்ல. உனக்கு அல்லாஹ் அருளிய அருட்கொடைகளை கொண்டு நீ ஆற்ற வேண்டிய 'ஜகாத்' என்ற கடமையை எளிதாய் நிறைவேற்ற அவன் மூலம் உனக்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது. இந்த வாய்ப்பைத் தரும் அவனும் ஒரு வகையில் உனக்குத் தர்மம் செய்கிறான்"



# வரலாற்றில் இன்றைய தினம் 20.10.2017

1803 - அமெரிக்கா மற்றும் பிரிட்டன் இடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் மூலம் கனடா, அமெரிக்கா எல்லை வரையறை செய்யப்பட்டது.

1904 - சிலியும் பொலிவியாவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டன. இதையடுத்து இருநாடுகளின் எல்லைகளும் வரையறை செய்யப்பட்டது.

1944 - கிளீவ்லான்டில் வாயுக் கசிவினால் ஏற்பட்ட தீவிபத்தில் 130 பேர் உயிரிழந்தனர்.

1946 - ஒக்டோபர் 20ஆம் திகதி 'தேசிய மகளிர் தினம்' என்று வியட்நாம் அறிவித்தது.

1961 - ஆர்-13 ரக நீர்மூழ்கிக் கப்பலில் இருந்து சோவியத் யூனியனால் பாலஸ்டிக் ரக ஏவுகணை பரிசோதித்துப் பார்க்கப்பட்டது.

1968 - அமெரிக்காவின் முன்னாள் முதல் பெண்ணான ஜாக்குலின் கிரேக்க கப்பல் வர்த்தகர் ஒருவரை மறுமணம் செய்தார்.

1992 - முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களைக் கண்டித்து கொழும்பில் பல்கலைக் கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம்.

2004 - நீதித்துறையின் சுதந்திரத்தில் அதிக கட்டுப்பாடுகள் என்று ஓய்வுபெறும் நீதியரசர் கவலை.

2007 - தமிழர்களுக்கு சுயாட்சி அல்லது கூட்டாட்சி வழங்கி இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென பயங்கரவாதத் தடுப்பு ஜெரால்ட் சாலியன்ட் தெரிவிப்பு.

1991 - இந்தியாவின் உத்தரகாசியில் ஏற்பட்ட 6.8 ரிச்டர் அளவிலான நிலநடுக்கத்தில் சுமார் ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.



## நாளை


**21.10.2017**

சனிக்கிழமை

**ஐப்பசி 04**

திதி: துதியை பி.இ. 02.43 வரை
நட்சத்திரம்:சுவாமி மு.ப. 10.49 வரை
சுபநேரம்: 03.02–04.32 வரை
ராகுகாலம்: 09.02–10.32 வரை







சினிமா

# தமிழைக் கற்க விருப்பப்படுகிறார் ஷாலினி பாண்டே

தமிழ்த் திரையுலகுக்கு அறிமுகமாகியுள்ள நடிகையான ஷாலினி பாண்டே, "தமிழைக் கற்றுக்கொள்ள நான் மிகவும் ஆர்வமாய் உள்ளேன்" என்று தெரிவித்தார்.

'100 வீதம் காதல்' என்ற படத்தில் நடிகர் ஜி.வி. பிரகாஷுக்கு ஜோடியாக நடித்துவருகிறார் ஷாலினி. இந்தப் படம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"எனது நண்பர்கள் கொடுத்த ஆதரவால்தான் நடிக்க வந்தேன். ஆரம்பத்தில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலேயே நடித்தேன். இணையத்தளத்தில் வெளியான எனது படத்தைப் பார்த்த இயக்குனர் சந்தீப்ரெட்டி எனக்கு தெலுங்குப்பட வாய்ப்பைக் கொடுத்தார். அந்தப் படம் என்னை தமிழ்த் திரையுலகுக்கு கொண்டுவந்து நிறுத்தியுள்ளது. தமிழ் சினிமா எனக்கு புதுசு. இப்போதுதான் தமிழ் படங்களைப் பார்க்க, பாடல்களைக் கேட்கத் தொடங்கி இருக்கிறேன். தமிழ் கற்றுக்கொள்ள மிகவும் ஆர்வமாய் இருக்கிறேன்" என ஷாலினி மேலும் தெரிவித்தார்.





# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** அன்றாடப் பணிகளில் அக்கறையுடன் ஈடுபடுவீர்கள். மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். தொழில் வியாபாரம் சிறந்து விளங்கும். மகிழ்ச்சி நிலைத்திருக்கும்.

**இடபம்:** உங்களின் பேச்சை சிலர் தவறாகப் புரிந்து கொள்ளலாம். தொழில் வியாபாரத்தில் இருந்த குறுக்கீடு சரியாகும். இலாபம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** மனதில் தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். புதிய முயற்சிகள் இனிதாக நிறைவேறும். தொழில் வியாபார விஷயமாக வெளியூர் செல்ல நேரிடலாம்.

**கடகம்:** குடும்பத்தினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பு கிடைக்கும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும்.

**சிங்கம்:** சிலரது பேச்சு உங்களைச் சங்கடப்படுத்தலாம். எவருக்கும் தகுதிக்கு மீறிய வாக்குறுதி வழங்க வேண்டாம். தொழிலில் இலாபம் சுமாராக இருக்கும்.

**கன்னி:** கொடுத்த வாக்கை நிறைவேற்றுவீர்கள். தொழில் வியாபாரத்தில் குறுக்கீடு வந்து பின்னர் சரியாகும். அளவான வருமானம் கிடைக்கும்.

**துலாம்:** பொறுமையுடன் செயல்பட்டு நன்மை காண்பீர்கள். தொல்லை கொடுத்தவர் இடம் மாறிப் போவர். தொழில் வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை உண்டாகும்.

**விருச்சிகம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் தாராள பணவரவு கிடைக்கும்.

**தனுசு:** பேச்சில் நிதானம் தேவை. தொழில் வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். இலாபம் சீராக உயரும். உடல்நலனில் அக்கறை தேவை.

**மகரம்:** நண்பர்களிடம் வாக்குவாதம் செய்ய வேண்டாம். தொழில் வியாபாரத்தில் மந்தகதி நிலவும். இலாபம் சுமாராக இருக்கும். உறவினர்களின் உதவி கிடைக்கும்.

**கும்பம்:** உற்சாக மனதுடன் செயல்படுவீர்கள். நீண்டநாள் திட்டமிட்ட செயல் நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் மூலதனத்தை அதிகப்படுத்துவீர்கள்.

**மீனம்:** உங்களின் வளர்ச்சி கண்டு அனைவரும் புகழ்ந்து பேசுவர். தொழில் வியாபாரத்தில் குளறுபடி உண்டாகி மறையும். அளவான பணவரவு கிடைக்கும்.



சிந்திப்பது என்பது
விழித்திருக்கும்போது கனவு
காண்பது.

கனவு என்பது உறங்கிக்
கொண்டிருக்கும்போது
சிந்திப்பது.

இரண்டும் ஒன்றுதான்.
நீ கனவை அறிந்துகொண்டுவிட்டால்
சிந்தனையையும் அறிந்து
கொண்டவனாகிவிடுகிறாய்.

சொந்தக் காலில்
வாழ்ந்தாலும்
அடுத்தவனையும்
கொஞ்சம் மதி

ஏனென்றால்
சொந்தக் காலிலேயே
நீ சுடுகாட்டுக்கு
போக முடியாது.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 6 | | | | | 2 | |
| | 2 | | | 3 | | 6 | | |
| | 4 | 1 | | | | 3 | 8 | |
| | | 9 | 7 | | 3 | | | 2 |
| | 7 | | 1 | 2 | 8 | | | |
| 2 | | | 4 | | | 7 | | |
| | 8 | 7 | | | | 9 | 3 | |
| | | 2 | | 7 | | | | |
| | | | | | | 2 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. [உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 3 | 4 | 8 | 5 | 6 | 2 | 9 | 7 |
| 2 | 9 | 8 | 4 | 7 | 3 | 5 | 1 | 6 |
| 5 | 7 | 6 | 2 | 9 | 1 | 4 | 8 | 3 |
| 7 | 4 | 1 | 3 | 6 | 8 | 9 | 2 | 5 |
| 3 | 6 | 9 | 5 | 4 | 2 | 1 | 7 | 8 |
| 8 | 2 | 5 | 7 | 1 | 9 | 3 | 6 | 4 |
| 9 | 8 | 3 | 6 | 2 | 5 | 7 | 4 | 1 |
| 4 | 5 | 2 | 1 | 8 | 7 | 6 | 3 | 9 |
| 6 | 1 | 7 | 9 | 3 | 4 | 8 | 5 | 2 |



# கடலை வாங்குவோம்

பாட்டி ஒருத்தி வீதி ஓரம்
கடலை வறுத்து விற்கிறாள்
ஓட்டமாக வந்திடுங்கள்
ஒன்றாய்க் கடலை வாங்குவோம்

ஓட்டை வைத்து வறுத்த கடலை
உடனே எமக்குத் தருகிறாள்
சூட்டை இழக்கா சுவை மிகுந்த
கடலை வாங்கித் தின்னலாம்

மணலைப்போட்டு கச்சான் கடலை
மணக்க மணக்க வறுக்கிறாள்
சுணக்கமின்றி சோளம் போட்டு
வெடிக்க வறுத்துத் தருகிறாள்

மஞ்சள் தூளும் உப்பும் கரைத்து
கொண்டற் கடலை நனைத்தவள்
மஞ்சள் குளித்த நல்ல கடலை
பொரித்தே எமக்குத் தருகிறாள்

கோவிலுக்கு வந்திடாத
தம்பி தங்கை பாட்டிக்கு
கொண்டல் கச்சான் சோளம் யாவும்
வாங்கிக் கொண்டு செல்லுவோம்

# பட்டால்தான் புத்தி வரும்

ஒரு காட்டில் இரண்டு நரிகள் வசித்து வந்தன. ஒரு நாள் அந்தக் காட்டுக்கு அயல் கிராமத்திலிருந்து வீட்டு வளர்ப்பு நாயொன்று வந்தது. அந்த நாய் இரு நரிகளில் ஒன்றிடம் "என்னை வளர்க்கும் வீட்டு எஜமானர் எனக்கு சுவையான உணவுகளெல்லாம் தருகிறார். நீயும் என்னுடன் வா" எனக் கேட்டுக் கொண்டது. நாயின் வார்த்தைகளைக் கேட்ட நரி அதன் பின்னே செல்லத் தயாரானது. இதனைக் கண்ட மற்றைய நரி "நாயுடன் நீ செல்லாதே, அது உன்னை ஆபத்தில் மாட்டி விடும்" என்று அதற்கு அறிவுரை கூறியது. ஆனாலும் நாயின் வார்த்தைகளைக் கேட்ட நரிக்கு சுவையான உணவுகளை நினைக்க நாவில் நீர் சுரந்தது. அதனால் தனது நண்பனான நரியின் அறிவுரையையும் உதாசீனம் செய்து விட்டு நாயின் பின்னே சென்றது.



நரியைக் கூட்டிச் சென்ற நாய், நடுச் சாமத்தில் தனது எஜமானர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளையில், வீட்டுச் சமயலறைக்குள் நரியுடன் புகுந்து கொண்டது. சமயலறையிலிருந்த சுவையான உணவுகள் மற்றும் இறைச்சி வகைகள் என்பவற்றை நாயும் நரியும் பங்கு போட்டு வயிறு புடைக்கத் தின்றன.

உணவுகளைத் தின்று முடித்தவுடன் நாய் தந்திரமாக சமயலறைக்கு வெளியே தனது இருப்பிடத்துக்கு சென்று படுத்துக் கொண்டது. நரி தனது பங்கு உணவு முழுவதையும் தின்று முடித்துவிட்டு நீண்ட நாள்களுக்குப் பின்னர் சுவையான உணவு கிடைத்த மகிழ்ச்சியில் சமையல் அறைக்குள் நின்றபடியே ஊளையிட்டது. நரி ஊளையிட்ட சத்தம் கேட்டு ஆழ்ந்த உறக்கத்திலிருந்த எஜமான் விழிந்தெழுந்தார்.

எழுந்தவர் சுவரோடு சாத்தி வைக்கப்பட்டிருந்த மரக்கொட்டன் ஒன்றை எடுத்துக் கொண்டு சமையலறைக்குள் நுழைந்தார். இப்போது பலமான அடிகள் வாங்கிய நரி நொண்டி நொண்டி ஒருவாறு காட்டை அடைந்தது. நரியின் கோலம் கண்ட மற்ற நரி நடந்தவற்றை விசாரிக்க அடிவாங்கிய நரி சோகத்துடன் தன் கதை கூறி முடித்தது. நாயுடன் சென்ற நரியைப் பார்த்து

**"கூடாத கூட்டங்கள் கூடுவானேன்.
கூடினாலும்
கூடங்கள் மாடங்கள் ஏறுவானேன் –
ஏறினாலும்
நாதங்கள் கீதங்கள் பாடுவானேன்"** என இராகத்துடன் கூறியது.

கூடாத கூட்டத்தினரோடு சேர்ந்து சென்றது முதற் பிழை. எஜமானின் உணவைத் திருடித் தின்றது. அதை விட மேலான பிழை. அவ்வாறு தின்ற பின்னர் நாயைப் போல அமைதியாக வெளியேறுவதை விடுத்து சமையலறையில் ஊளையிட்டது. அவற்றை எல்லாம் விட மேலான பிழை எனத் தனது இராகப் பாட்டுக்கு விளக்கத்தையும் கூறி முடித்தது நண்பன் நரி.


அதன் அறிவுரையைக் கேட்டு அடிவாங்கிய நரி தனது தவறுகளை உணர்ந்து திருந்தியது.

**நல்ல பெரியவர்கள் கூறும் அறிவுரைகளைப் பிள்ளைகள் கேட்டு நடத்தல் வேண்டும். இல்லையேல் பட்ட பின்பே புத்தி வரும்.**

# வங்காளப் பழமொழிகள்

1. அசலை விட வட்டி ருசி.
2. அடிமை அரசனானால் இரவிலும் குடை பிடிப்பான்.
3. அதிக பக்தி திருடனுக்கு அடையாளம்
4. அதிகம் பேசுபவன் அதிகம் பொய்யும் பேசுவான்.
5. அம்மா இறந்தால் அப்பன் பங்காளி
6. அயலானுக்கு இடம் கொடுத்தால் குடும்பம் கெடும்.
7. அரச மர நிழலே நிழல், தாய்ப் பாசமே பாசம்.
8. அரசனின் குற்றத்தால் நாடு கெடும். இல்லாளின் குற்றத்தால் குடும்பம் கெடும்.
9. அரசனே கொடுமை செய்தால் அடைக்கலம் புகுவது எவரிடம்?
10. அரிசி சிந்தினால் பொறுக்கலாம்; தண்ணீர் சிந்தினால் எடுக்க முடியுமா?
11. அழகை எட்டி உதை; குணத்தைப் போற்றிப் புகழ்.
12. ஆகாயத்தில் எச்சில் உமிழ்ந்தால் அது எம் மேலேயே விழும்.
13. ஆடத் தெரியாதவனுக்கு அரங்கம் கோணல்.
14. ஆழமான நீரில் அலை எழும்பாது.
15. இஞ்சி காய்ந்தாலும் காரம் போகாது.

# புள்ளிகளை இணைத்து உருவத்தை முழுமை செய்வோம்





# சந்தன மரம் இந்தியாவின் வரம்

கோயில்களுக்கோ மங்கல விழாக்களுக்கோ சென்றால், அங்கே எம்மை முதலில் வரவேற்பது சந்தனமே. வாசலில் வரவேற்புக்காக நிற்போர் முதலில் சந்தனத்தை எமது நெற்றியில் வைத்தே எம்மை வரவேற்பர். மற்ற உபசரிப்புக்கள் எல்லாம் பின்னார் தான். சந்தன வாசனை விழாவையே களைகட்ட வைக்கும். மங்கலப் பொருள்களில் ஒன்றாகக் கருத்தப்படும் சந்தன மரம் இந்தியாவிலேயே வளர்கிறது.

தென் இந்தியாவில் மைசூர் குடகுகோயப் புத்தூர், சேலம் ஆகிய பிரதேசங்களில் மட்டுமே இது வளர்கிறது. குறிப்பிடத் தக்களவு பரிமாணம் கொண்ட சந்தன மரத்தைக் கொண்டு சிறு பெட்டிகள் கைத்தடிகள் பேனைக்கட்டைகள் போன்ற வேலைப்பாடமைந்த பல பொருள்கள் செய்யப்படுகின்றன.' இன்று அநேக மதத்தவர்களின் சமயச் சடங்குகளிலும் சந்தக் கட்டை தவறாமல் இடம்பெறுகிறது. இந்தியாவில் ஓர் ஆண்டுக்கு சராசரியாக 2ஆயிரத்து 750 தொன் சந்தன் கட்டை உற்பத்தி செய்யப்படுகிறது. சந்தக் கட்டையில் இருந்து சந்தன எண்ணெய்யும் எடுக்கப்படும். ஒரு பெரிய மண்பானையில் சந்தனக் கட்டைத் துண்டுகளைப் போட்டு அளவாக நீர் வார்த்து பானையை மூடுவர். பின்னர் பானையில் இருந்து ஒரு குழாயைப் பொருத்தி ஒரு செப்புக் கலத்துடன் அதனை இணைத்து விடுவர். பானையை சூடேற்றியதும் எண்ணெய் பிரிந்து நீராவியுடன் குழாய் மூலம் கலத்தைச் சென்றடைகிறது. இவ்வாறு பல நாள்கள் தொடர்ந்து பானையை சுடேற்றி எண்ணெய்யைப் பிரித்தெடுப்பார்கள். இந்த சந்தன எண்ணெய்கு சந்தக் கட்டையை விட மதிப்பு அதிகம். சந்தன மரம் இந்தியாவுக்குக் கிடைத்த ஒரு வரம்.



# விக்கிரக வழிபாடு

அமெரிக்க நாட்டுப் பெண்மணி ஒருத்தி விவேகானந்தரைப் பார்த்து "இறைவன் எல்லை கடந்தவர்; மனம். வாக்கு, செயல்களுக்கு அப்பாற்பட்டவர் என்கிறீர். ஆனால் அருவமாகிய பரம்பொருளுக்கு உங்கள் நாட்டில் உருவம் வைத்து வழிபடுகின்றார்களே? எதற்காக?" என்று வினவினார்.

விவேகானந்தர் அந்தப் பெண்மணியின் வீட்டிலிருந்த ஒரு படத்தைக் காட்டி இது யார்? என்று கேட்டார். "என் தந்தை யார்" என்றார் பெண்மணி.

"வெறும் சட்டமும் கண்ணாடியும் அட்டையும் ஓவியமுமாக இருக்கின்ற இது உன் தந்தையா?" என்று வினவினார் விவேகானந்தர்.

"இது என் தந்தை அல்ல. ஆனால் என் தந்தையை எனக்கு நினைவூட்டும் அடையாளம்" என்றார் பெண்மணி.

"அது போலத்தான் எங்கள் நாட்டில் உள்ள விக்கிரகங்களும் இறைவனை நினைவூட்டுகின்ற அடையாளங்களாகத் திகழ்கின்றன" என்று விளக்கம் தந்தார் விவேகானந்தர்.

# பரிணாம வளர்ச்சி

யாழிசை

உயிர் வகைகள் புதிது புதிதாகத் தோன்றுகின்றன என்கிறது பரிணாம வளர்ச்சிக் கொள்கை. ஒரு குறிப்பிட்ட உயிரினத்தின் சில தனிப்பட்டவற்றில் ஏற்படும் மாற்றங்கள் அது ஏனையவற்றை விடவும் அதிக நாள் உயிர்வாழும் சாத்தியத்தை ஏற்படுத்தினால் அந்த 'நல்ல' மாற்றங்கள் குறிப்பிட்ட உயிரினத்தில் அதிகரிக்க ஆரம்பிக்கும். அந்த 'நல்ல' குணம் கொண்டவற்றின் நபர்களின் சந்ததிகள் அதிகரிப்பதால் இது நிகழ்கிறது. இப்படியே இந்த மாற்றங்கள் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே வந்தால் இறுதியில் ஒரு புதுக் கிளை உருவாகி, நாளடைவில் முற்றிலும் புதிய உயிரினம் உருவாகிவிடுகிறது.

**உயிரின் பரிணாமம்**

இப்படித்தான் ஏதோ ஓர் உயிரினத்தில் தொடங்கி இன்று மனிதர்கள் தோன்றியுள்ளனர். மனிதர்கள் போன்ற பாலூட்டிகள் அனைத்துக்கும் ஒரு கட்டத்தில் ஒரு பொதுவான பெற்றோர் உயிரினம் இருந்துள்ளது. பாலூட்டிகளுக்கும் பறவைகளுக்கும் பொதுவான ஒரு பெற்றோர் உயிரினம் இருந்துள்ளது. இப்படியே பின்னோக்கிப் போனால் எல்லாவித உயிரினங்களுமே ஒரே ஒரு உயிரிலிருந்து கிளை கொண்டதாக இருக்க வேண்டும்.

பரிணாம வளர்ச்சிக் கொள்கையின்படி, தினம் தினம் மாற்றங்கள் நிகழ்கின்றன. சில இலட்சம் ஆண்டுகள் கழித்து முற்றிலும் புதிய, இதுவரையில் இல்லாத உயிரினங்கள் உருவாகியிருக்கும். மேலும் உயிர்கள் தோன்றிப் பல கோடி ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டன.

பரிணாம வளர்ச்சியை ஏற்காத படைப்புவாதிகள் பல கேள்விகளை முன்வைக்கின்றனர். ரிச்சர்ட் டாக்கின்ஸின் புத்தகம் இந்தக் கேள்விகளை ஒன்றன்பின் ஒன்றாக எதிர்கொள்கிறது. மிகவும் எளிய முறையில் எழுதப்பட்டுள்ள இந்தப் புத்தகம் அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆதங்கத்துடன் எழுதப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

**'டாக்கின்ஸ்' கூறும் பரிணாமத் தேர்வு**

டாக்கின்ஸ் படிப்படியாக எம்மை பரிணாம வளர்ச்சிக் கொள்கைக்குள் அழைத்துச் செல்கிறார். "பிளேடோ என்ற கிரேக்கத் தத்துவஞானியின் கருத்துகள் மேற்கத்தைய விஞ்ஞானிகளை பரிணாம வளர்ச்சிக் கொள்கை பற்றி சிந்திக்கவிடாமல் செய்துவிட்டது" என்கிறார் டாக்கின்ஸ். பிளேடோவின் அடிப்படைக் கொள்கை "எல்லா உயிரினங்களும் ஒரு சிறந்த வடிவமைப்பின் குறைபட்ட வடிவங்களே" என்பதாகும். டார்வினின் கருத்தாக்கத்தில் இப்படி 'கச்சிதமான' வடிவமைப்பு ஏதும் கிடையாது. ஆனால் மேற்கத்தைய விஞ்ஞானிகள் அனைவருமே பிளேடோவின் சிந்தனைத் தாக்கத்திலிருந்து மீளாததால் மாற்றியும், அதிலிருந்து மாறுபட்டும் யோசிக்கவில்லை. எனவேதான் டார்வினின் தரிசனம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை.

டார்வின் தன்னைச் சுற்றிலும் நடப்பதைக் கவனமாகப் பார்த்தார். மனிதன் தன் விருப்பத்துக்கு ஏற்றவாறு நாய்களையும், புறாக்களையும், குதிரைகளையும் உருவாக்குவதைக் கண்டார். மனிதன் செயற்கையாக தனக்கு விருப்பமான தன்மைகள் உடைய உயிரினங்களை உருவாக்கும்போது, இயற்கையிலேயேகூட அப்படி ஒரு நிகழ்வு ஏன் நடந்திருக்கக்கூடாது என்று யோசித்தார். அப்படி அவர் உருவாக்கிய கருத்துதான் 'இயற்கைத் தேர்வுமுறை'.

ஆனால் இந்த இயற்கைத் தேர்வு நடப்பதை மனிதக் கண்ணால் பார்ப்பது என்பது கடினம். ஏனெனில் இந்த முறையின்மூலம் மாற்றங்கள் ஏற்பட பல ஆயிரம் வருடங்களாவது தேவைப்படுகிறது. எம் வாழ்நாளோ நூறு வருடங்களுக்கும் குறைவு என்பதையும் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. ஆனால் புதைபடிவ நிரூபணங்கள் அதிகம் கிடைக்கின்றன. மண்ணுக்கு அடியில் புதைந்துள்ள பல்வேறு உயிரினங்களை எடுத்து ஆராயும்போது என்னென்ன முற்றிலும் வித்தியாசமான உயிரினங்கள் ஒரு காலத்தில் வாழ்ந்துள்ளன என்பதை எம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

**'டாக்கின்ஸ்' கூறும் வயது**

அடுத்து டாக்கின்ஸ் உயிர்களின் வயதை எதிர்கொள்கிறார். 'காபன் டேட்டிங்' என்ற முறையைப் பற்றி எளிமையாக விளக்கும் டாக்கின்ஸ் எப்படி உலகத்தின், மரங்களின், உயிர்களின் வயதைக் கணக்கிடமுடியும் என்று காண்பிக்கிறார். பின்பு அந்தக் கணக்குகளின்மூலம் இந்த உலகம் எப்படி பல கோடி ஆண்டுகள் நீண்டிருக்கிறது என்பதைத் தெளிவாக்குகிறார்.

பரிணாம வளர்ச்சி ஏற்பட பல ஆயிரம் ஆண்டுகள் ஆகும் என்று சொல்லித் தான் தப்பித்துவிடவில்லை என்றுகூறும் டாக்கின்ஸ் சில பத்து ஆண்டுகளுக்குள்ளாகவே நடக்கும், நடந்துள்ள சில பரிணாம வளர்ச்சி மாற்றங்களை உதாரணங்களாகத் தருகிறார்.

குரோவேஷியா நாட்டுக்கு அருகில் உள்ள இரண்டு தீவுகள் போட் கோபிஸ்டே, போட் மொர்காரு. போட் கோபிஸ்டாவில் வாழும் ஒரு பல்லி இனம் போட் மொர்காருவில் ஒன்றுகூடக் கிடையாது. 1971 ஆம் ஆண்டு கோபிஸ்டாவில் இருந்து இந்தப் பல்லிகள் சிலவற்றைப் பிடித்து மொர்காருவில் போட்டார்கள். மீண்டும் கடந்த 2008 ஆம் ஆண்டு மொர்காரு சென்று கடந்த 37 வருடங்களில் என்னதான் ஆகியுள்ளது என்று கண்டறிய முற்பட்டார்கள். மொர்காருவில் உள்ள பல்லிகளுக்கு கோபிஸ்டேவில் உள்ளவற்றைவிட தலை சற்றே நீளமாகவும் அகலமாகவும் ஆகியிருந்தன. கோபிஸ்டேவில் உள்ள பல்லிகள் பூச்சிகளைப் பிடித்து சாப்பிட்டுக்கொண்டிருந்தன. ஆனால் அதிக பூச்சிகள் இல்லாத மொர்காருவில் அங்கே உள்ள தாவர இலைகளைத் தின்று பழக ஆரம்பித்த இந்தப் பல்லிகள் தாவர இலைகளைக் கடித்துத் தின்ன அழுத்திக் கடிக்கவேண்டும். எனவே தலை பெரிதாக வளர்ந்தது; பற்கள் சற்றே பெரிதாக கடினமாக இருந்தன. ஆக, வெறும் 37 ஆண்டுகளிலேயே சூழ்நிலை மாற்றத்துக்குத்தக்கவாறு ஓர் உயிரினத்தின் கிளையில், கண்ணால் கண்டறியக்கூடிய மாற்றம் உருவாகத் தொடங்கிவிடுகிறது.

**நுண்ணுயிர்களின் பரிசோதனை**

இதுபோலவே நுண்ணுயிரிகளைக் கொண்டு நடந்த சோதனை முயற்சி ஒன்றையும் விளக்குகிறார் ரிச்சர்ட் டாக்கின்ஸ். கப்பி மீன்கள் கொண்டு நடந்த ஒரு சோதனையை அவர் விளக்குகிறார். இயற்கையில் பரிணாம வளர்ச்சி என்பதை சில உயிரினங்களில் காணவும் முடிகிறது. ஆனால் பொதுவாகவே எப்படி இயற்கையில் விதவிதமான உருவங்கள் உருவாகின்றன என்பது பற்றி விளக்குகிறார் டாக்கின்ஸ். ஒரு நண்டு, ஒரு வண்டு இரண்டும் எப்படி முற்றிலும் புதுமையான, வித்தியாசமான வடிவத்தைப் பெறுகின்றன..? தெளிவற்ற எழுந்தமான வரை கணித முறைப்படி இயங்கும்போது புதிது புதிதான தோற்றங்கள் உருவாகின்றன. தாள் ஒன்றில் பேனா மையைத் தெளித்து அந்தத் தாளை பலமுறை மடித்து மீண்டும் பிரித்துப் பார்க்கும்போது அந்தத் தாளில் ஒரு அழகான வடிவம் ஒன்றைக் காண்பீர்கள். அப்படிப்பட்ட வடிவங்கள்தான் இயற்கையில் உயிர்களின் உருவமாக உருவாகின்றன. அவற்றில் பல வடிவங்கள் வாழமுடியாமல் அழிந்துபோக ஒரு சில வடிவங்கள் மட்டும் கடல்வாழ், நிலவாழ் உயிரினங்களின் வடிவங்களாகத் தங்கிவிடுகின்றன என்பதை பல ஆதாரங்களுடன் எடுத்துக்காண்பிக்கிறார்.


**உயிர்களின் தெளிவு**


"உயிர்கள் மிகவும் சிக்கலான வடிவம் கொண்டவை என்பதால் அவை நிச்சயம் மிக அதிக சக்திவாய்ந்த 'கடவுள்' போன்ற ஒருவரால் மட்டுமே உருவாக்கப்பட்டிருக்கமுடியும்" என்ற வாதத்தை மிக அழகாகக் கையாளுகிறார் டாக்கின்ஸ். 'கேயாஸ் சிஸ்டம்' என்ற கருத்தாக்கத்தை முன்வைத்து எப்படி மிகவும் சிக்கலான இடங்களிலும் வரிசையும் தெளிவும் ஏற்படுகின்றன என்பதைக் காண்பித்து, உயிர்கள் ஒற்றைக் கலத்திலிருந்து பிரிந்து பிரிந்து பல கலங்களாக மாறி, கடைசியில் ஒரு மானாக, ஒரு கழுதையாக, ஒரு கனகாம்பரம் செடியாக ஆகும்போது எப்படி ஒரு கலத்துக்கு தான் பூவாகவேண்டும், தான் காதாக வேண்டும், கண்ணாக வேண்டும் என்றெல்லாம் தெரிகிறது என்றும் அதனை மிகச் சரியாக அது எப்படிச் செய்கிறது என்பதையும் மிக எளிமையான முறையில் விளக்கியுள்ளார்.

## உயிரினங்களின் படிமானமான கட்டமைவு நிலை

கண்டறியக்கூடிய மாற்றங்கள் கொண்ட பரிணாம வளர்ச்சி நடைபெறும் காலகட்டம் என்பது பல ஆயிரம் வருடங்களாவது இருக்கும்.

பொதுவாக படைப்புவாதிகள் மட்டுமல்லாது படித்தவர்களுமே கேட்கும் ஒரு கேள்வி என்பது, 'குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்றால் குரங்குகள் இன்னமும் ஏன் உள்ளன..?' என்று அமைந்துள்ளன. இது பரிணாம வளர்ச்சித் தத்துவத்தைப் புரிந்துகொள்ளாததான் வெளிப்பாடே. திடீரென ஒரு குறிப்பிட்ட நாள் அன்று, இன்று நாம் காணும் ஒரு குரங்குவகை, தன் தோலை சட்டையைக் கழற்றுவதுபோல் கழற்றி மனிதத் தோலை அணிந்துகொண்டு இரண்டு கால்களால் நடந்து மனிதனாக ஆகிவிடுவதில்லை. எந்த ஒரு தனிக் குரங்கும் மனிதனாக ஆகிவிடுவதில்லை. குரங்கி லிருந்து மனிதன் தோன்றினான் என்று சொல்வதே தவறு. குரங்கு, மனிதன் இரண்டுக்கும் பொதுவான பெற்றோர் இனம் ஒன்று இருந்தது. அந்தப் பெற்றோரிலிருந்து குரங்குக் கிளையும் மனிதக் கிளையும் பிரிந்தன. தனித்தனியாக வளர்ந்தன. இதுதான் உண்மை நிலை.



ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1408
சீட்டிழுப்பு திகதி 2017.10.19
வெற்றி இலக்கங்கள்
19 24 33 60 Z
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 10,741,276/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 50
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2017.10.19
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 64,101,265/-
வெற்றி இலக்கங்கள்
13 46 60 66 N
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 714
சீட்டிழுப்பு திகதி ▶19.10.2017 வியாழக்கிழமை
M 15 22 59 73
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 42,598,496/-
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து
1919 இற்கு அனுப்பவும்
நீல நிற டிக்கட்டுகள் 2017.10.21 ஆம் திகதி சனிக் கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

සංවර්ධන වාසනාව
Development Fortune
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▶ 084
சீட்டிழுப்பு திகதி ▶ 19.10.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
12 17 20 40
சுப்பர் இலக்கம் 06
அதிர்ஷ்ட மாதம் ஏப்பிரல்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 18, 119, 758/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4, 445, 606/=
அடுத்த ஜக்பொட் ரூ. 3, 543, 156/=
2017.10.21 ம் திகதி சனிக் கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 54647 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

# கல்சியம் சத்துமிக்க உணவை குழந்தைகளுக்குக் கொடுங்கள்

குழந்தைகளுக்குத் தாய்மார்கள் வற்புறுத்தி செய்யும் செயல்களில் ஒன்று பால் குடிக்கச் சொல்வது. காலையில் பல் தேய்த்தவுடன் மற்றும் இரவில் உறங்கச் செல்லும் முன் எல்லாத் தாய்மார்களும் குழந்தைகள் பால் குடிக்க வேண்டும் என்று விரும்புவர். ஆனால் பல குழந்தைகள் இதனைச் செய்வதே இல்லை. பால் குடித்தால் தான் பல் வெள்ளையாக இருக்கும், உயரமாக வளர முடியும், என்று பல்வேறு செய்திகளைக் கூறி அந்தப் பாலை குடிக்கச் செய்வது வழக்கம்.

அப்படி என்னதான் இருக்கிறது பாலில்? கல்சியம் அதிகம் உண்டு. இந்தச் சத்து உடலில் இல்லையென்றால் வலிமை இல்லாத எலும்புகளால் உடல் நொறுங்கி விடும். தசைகளும் நரம்புகளும் செயலற்றுப் போகும். வலுவூட்டப்பட்ட உணவுகளில் அல்லது மாத்திரைகளில் கிடைக்கும். கல்சியம் சத்தை விட இயற்கையான உணவில் கிடைக்கும் கல்சியம் சத்துத்தான் சிறந்தது.

இயற்கையான கல்சியம் சத்து அதிகமாக கிடைக்கும் உணவுப் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதனைப் பற்றித் தெரிந்து கொள்ளலாம் வாருங்கள்.

**பால்**

ஒரு சராசரிக் கோப்பை அளவு பால் குடிப்பது ஒரு நாளின் கல்சியம் தேவையில் மூன்றில் ஒரு பங்கைப் பூர்த்தி செய்கிறது. குறைந்த கொழுப்புப் பால், ஆடையுடன் கூடிய பால் என்று எந்த விதத்தில் இருந்தாலும் ஒரு கோப்பைப் பாலில் 300மில்லி கிராம் அளவு ஊட்டச்சத்துகள் உள்ளன. பாலின் தரத்தைப் பொறுத்து இந்த அளவு மாறுபடும்.

வெறும் பால் குடிப்பது கஷ்டமாக இருந்தால் பாலுடன் சாக்லேட் அல்லது பழங்கள் அல்லது ஓட்ஸ் போன்றவற்றை சேர்த்துச் சாப்பிடலாம். வெயில் காலத்தில் இந்தக் கலவையை குளிர்ச்சியூட்டி சாப்பிடலாம். பாலை மற்றொரு விதத்தில் உடலுக்குள் செலுத்தும் வழி கொழுப்பில்லாத பால் மா . இந்தப் பால்மாலின் ஒரு மேசைக் கரண்டியில் 50மில்லி கிராம் கல்சியம் உள்ளது. இனிப்புகளில், பானங்களில் மற்றும் உணவுகளில் எளிதில் கரையக் கூடியது. இதில் கலோரி மற்றும் சக்கரை இல்லாததால் நீரிழிவு நோயாளிகள் மற்றும் உடல் நிறை அதிகரிப்புப் பற்றி நினைப்பவர்கள் எளிதில் பயன்படுத்தலாம்.

**யோகட்**

நல்ல பக்ரீரியாக்களுடன் கூடிய குடலின் ஆரோக்கியம் பற்றி நாம் நிறைய பேசியிருக்கிறோம். யோகட்டில் இருக்கும் அதிக அளவிலான ப்ரோபையோடிக்குகள் குடலில் நல்ல பக்ரீரியா உற்பத்தியை அதிகரிக்கிறது. பாலின் சிறந்த ஒரு மாற்றாக யோகட் பாவிக்கப்படுகிறது. 175மில்லி லீற்றர் அளவு யோகட் 338மில்லி கிராம் அளவு கல்சியம் கொண்டது.

பழங்கள், சிறிதளவு தேன் மற்றும் யோகட் சேர்த்து உண்பது சிறந்த காலை உணவாகக் கருதப்படுகிறது. வெறும் யோகட்டை சிற்றுண்டியாக எடுத்துக் கொள்ளலாம். யோகட் மேல் சிறிதளவு நட்ஸ் தூவி உண்ணலாம்.

**போஞ்சி மற்றும் பருப்பு வகைகள்**

பால் பொருள்களை தவிர பருப்பு வகையில் கல்சியம் சத்து அதிகம் உள்ளது. ஒரு கோப்பை பச்சை பருப்பில் 273 மில்லி கிராம் அளவு கல்சியம் உள்ளது. நாம் தினசரி சமையலில் சேர்த்துக் கொள்ளும் பருப்புகளால் குறைந்தபட்சம் 30 மில்லி கிராம் அளவில் இருந்து 100 மில்லி கிராம் அளவு வரை கல்சியம் சத்துக் கிடைக்கிறது.

**கீரை**

சைவ உணவை உண்ணுகிறவர்களுக்கு கீரை ஒரு வரப்பிரசாதம். இதில் கல்சியம் சத்து மிகவும் அதிகமாக உள்ளது. ஒரு கோப்பை வேக வைத்த கீரையில் 357மில்லி கிராம் அளவு கல்சியம் சத்து உள்ளது. வேக வைத்த பரட்டை கீரையில் 94 மில்லி கிராம் அளவு கல்சியம் உள்ளது.

**மீன்**

கல்சியம் என்றதும் எமது நினைவுக்கு வருவது மீன். மென்மையான எலும்புகள் கொண்ட மீன்களை தேர்ந்தெடுப்பதன்மூலம், அந்த முள்ளையும் மென்று விழுங்கலாம் . எலும்புகளில் தான் கல்சியம் சத்து அதிகம் உள்ளது. சால்மன் மற்றும் சார்டின் வகை மீன்கள் கல்சியம் சத்தில் முதல் இடம் பிடிக்கிறது. 50 கிராம் சார்டின் உண்பதால் 340 மில்லி கிராம் அளவு கல்சியம் கிடைக்கிறது.

கல்சியம் சத்து எலும்புகளையும் பற்களையும் வலிமையாக்குவதற்கு தேவைப்படுகின்றன. தசைகள் விரியும் திறன், குருதி உறைதல், நரம்புகளுக்கு செய்திகளைக் கடத்துதல் போன்றவற்றுக்கு கல்சியம் இன்றியமையாததாகும்.

எமது உடலில் இருக்கும் நகம், முடி, சிறுநீர், மலம், வியர்வை போன்றவற்றால் தினமும் கல்சியம் சத்து வெளியேறிக் கொண்டே இருக்கிறது. ஆகவே அதிக அளவு கல்சியத்தை உட்கொள்ளும்போது தான் உடலின் இயக்கம் சீராக இருக்கும் என்பதை மனதில் நிறுத்திக் கொள்ள வேண்டும்.

வனவள உத்தியோகத்தர்
போட்டி பரீட்சை - 2017
சிறந்த வழிகாட்டி நூல் வனவளம்
ஆசிரியர் திரு .தி .தவரத்தினம்
நாடுமுழுவதும் உள்ள புத்தகசாலையில் கிடைக்கும்.
077 153 8126

## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணம் மாநகர சபை
## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதி - 2017

01. யாழ்ப்பாணம் மாநகரசபையின் உள்ளூராட்சிமன்ற பெறுகைகள் குழுத்தலைவரால் தற்போது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காகக் கோரப்படுகின்றன.
02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA), கட்டடம் மற்றும் வீதி நிர்மாணத்திற்கு கீழ்க் குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு, பொது நிதி சுற்றறிக்கை, இல. 04/2016(i) இற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக்கொள்ளப் படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காத பட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற் கொள்ளப்படும்.
04. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல – 021 2216468, 021 2222019)** என்னும் முகவரியிலிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்வதுடன் வேலை நாள்களில் காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணிவரை 20.10.2017 – 06.11.2017 வரையான காலப் பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் பூரணப்படுத்தி **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரியிலிருந்து 20.10.2017ஆம் திகதியில் இருந்து 06.11.2017 வரைகாலை 9.00 மணிக்கும் மாலை 2.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.2,000.00 மற்றும் வரியினைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து **ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம்** என்னும் முகவரிக்கு 07.11.2017ஆம் திகதி மாலை 2.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக் கூடியதாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
08. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்வி சமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து 63 (அறுபத்து மூன்று) நாள்களுக்கு (09.01.2018 வரை) செல்லுபடியாகும்.
09. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
10. கேள்வி தொடர்பானமுன் கேள்விச் சபைக்கூட்டம் பொறியியலாளர் அலுவலகம், மாநகர சபை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் 27.10.2017 அன்று காலை 10.30 மணிக்கு இடம்பெறும்.
11. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமைவானதாகும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலை விவரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் | வேண்டப் படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்புப் பிணை தொகை | செல்லு படியாகும் காலம் |
| 1 | JMC/WD/ 06/PSDG/ 2017/ 29 | 5ஆம் குறுக்கு வீதி, சப்பல் வீதி, அரசடி வீதி 5ஆம் ஒழுங்கை, மற்றும் புதிய பூங்கா வீதி திருத்தம் | 4.677 | 11/2 மாதங்கள் | C8 வீதி | 47,000.00 | 06.02.2018 |

தலைவர் /ஆணையாளர்,
உள்ளூராட்சிமன்றபெறுகைகள் குழு,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

19.10.2017

## துயர் பகிர்கின்றோம்

யாழ். பல்கலைகழக புவியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர்
கலாநிதி துஸ்யந்தி இராஜசூரியர் அவர்களின் அன்புத்தாயார்.

### திருமதி ஏஞ்சலா இராஜசூரியர்

அவர்கள் 19.10.2017 வியாழக்கிழமை இறைபதமடைந்த செய்தி கேட்டு நாம் மிகுந்த வேதனையடைகின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**புவியியற்றுறை சமூகம், புவியியற்றுறை, யாழ்.பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**

## 06ஆம் மாத நினைவில்

தோற்றம் 27.08.1955



மறைவு 27.04.2017

### அமரர் உமாதேவி இராஜேஸ்வரன்

சிறகிழந்த பறவைகளாய்,
வேரிழந்த மரங்களாய்,
உமையிழந்து தவிக்கின்றோம்
உமையிழந்த வெற்றிடத்தை
தினம் கண்ணீரால் நிரப்புகின்றோம்.

சிவகுரு வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

குடும்பத்தினர்.

## சைட்டத்தை...

கொழும்பு, ஒக். 20

மாலபே சைட்டம் மருத்துவக் கல்லூரியை நாம் மூட மாட்டோம். சைட்டம் பிரச்சினைக்கான தீர்வை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திங்கட்கிழமை அறிவிப்பார்.

இவ்வாறு சபை முதல்வரும் உயர்கல்வி அமைச்சருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்தன எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"சைட்டம் தொடர்பில் மாணவர்கள் தொடர் போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். அரசு இதற்கு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது" என்று தினேஸ் குணவர்த்தன கேள்வி முன்வைத்தார்.

"சைட்டம் மருத்துவக் கல்லூரி தொடர்பில் மாணவர்களுடன் பேச்சு நடத்தினால் அதனை மூடுமாறே கேட்கின்றனர். சைட்டம் பிரச்சினை தொடர்பாக இணக்க நிலைக்கு அரசு வந்துள்ளது. சைட்டம் கல்லுரிக்கு போதுமான தரம் இல்லை என்று கூறினர். அதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளோம். நெவில் பெர்னான்டோ வைத்தியசாலை தரமில்லை என்று கூறினர். அதனை நாம் அரசுடமையாக்கியுள்ளோம். அரசு இணக்க நிலமைக்கு வந்துள்ளது. மாணவர்களோ, வைத்தியர்களோ சைட்டம் கல்லூரியை மூடவேண்டும் என்பதிலேயே உறுதியாக உள்ளனர். இவ்வாறு செயற்பட்டு தீர்வினைக் காண முடியாது. பல்கலைக் கழக பீடாதிபதிகள் இணங்கிச் சென்றாலும் அவர்களையும் பின்னர் திசை திருப்புகின்றனர். இதற்கு முடிவுகட்டவேண்டும்" என்று பதிலளித்தார் அமைச்சர்.

மகிந்த அணியினர் கோசமிடுகின்றனர். எனினும் சைட்டம் பிரச்சினைக்கு வித்திட்டவர்கள் முன்னைய ஆட்சியாளர்களேயாவர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார். "மகிந்த ராஜபக்சவின் ஆட்சியின்போது சைட்டம் கல்லூரியை அமைக்க 600 மில்லியன் ரூபா கடன் வழங்கப்பட்டது. உயர்கல்வி அமைச்சருக்குப் பதிலாகச் சைட்டம் தொடர்பான சட்டத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்தது தினேஸ் குணவர்தனவாவார். இதற்காக அவர் மகாநாயக்க தேரர்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும். மாலபே சைட்டம் மருத்துவக் கல்லூரியை நாம் மூட மாட்டோம். சைட்டம் பிரச்சினைக்கான தீர்வை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன திங்கட்கிழமை அறிவிப்பார்" என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (உ-5,31)

## ஒளியை...

யாழ்ப்பாணம், ஒக். 20

இருள் அகன்று ஒளி பிறக்கவேண்டும். தமிழ் மக்கள் அந்த ஒளியைத் தேடுகின்றனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தேசிய தீபாவளி தின நிகழ்வு அரச தலைவர் மாளிகையில் நேற்றிரவு நடைபெற்றது. இங்கு உரையாற்றும்போதே எதிர்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தீபாவளி என்பதன் அர்த்தம், இருள் அகன்று ஒளி பிறக்க வேண்டும் என்பதாகும். தமிழ் மக்கள் இன்று அந்த ஒளியைத் தேடுகின்றனர். அடுத்த தீபாவளி அர்த்தமுடையதாக இருக்க வேண்டும்.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி இன்று நேற்று ஆரம்பிக்கப்பட்டது அல்ல. அது சந்திரிகா அம்மையாரின் காலத்தில் ஏன் அதற்கு முன்னர் இருந்தே முன்னெடுக்கப்பட்டது. தற்போது நடைபெறும் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி எந்தக் காரணத்துக்காகவும் தோற்கக் கூடாது. அது வெற்றிபெற வேண்டும். தமிழ் மக்களுக்கு அர்த்தமுள்ள தீர்வு கிடைக்க வேண்டும் - என்றார். (உ-5)

## உண்மைக்கு...

களை உபயோகிக்க வேண்டும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன கோரிக்கை விடுத்தார்.

ஊடகவியலாளர் அமரர் டி.பி.தனபாலவின் நினைவு முத்திரை வெளியிடும் நிகழ்வு கொழும்பில் நூலக ஆவணமாக்கல் சபையில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் என அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் உள்ளதாவது:

தவறு செய்யும் அரசியல்வாதிகளைச் சுயலாபத்துக்காகப் பாதுகாத்து, அவர்களுக்குத் துதிபாடுவது மிகவும் துர்ப்பாக்கியமானது. தவறிழைத்தாலும் சிலரைக் குறிப்பிடாமல் இருப்பதையும், சரியானதாக இருந்தாலும் சிலரை இலக்கு வைத்துத் தாக்குவதையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

சரியான, பெறுமதியானவற்றைச் சமூகத்துக்கு வழங்குவது அடுத்த சந்ததிக்காக ஊடகவியலாளர்கள் தமது பேனா முனையால் ஆற்ற வேண்டிய பணியாகும். டி.பி.தனபாலவின் சமூகச் செயற்பாடுகள் அதற்கு முன்மாதிரியானவை என்று அரச தலைவர் தெரிவித்தார்.

நிகழ்வின் முதன்மை உரையை களனிப் பல்கலைக்கழக முன்னாள் ஊடகத்துறைத் தலைவர் பேராசிரியர் ரோகண லக்ஸ்மன் பிரியதாச நிகழ்த்தினார்.

டி.பி.தனபாலவின் நினைவு முத்திரை அரச தலைவரால் மூத்த ஊடகவியலாளர்களுக்கும், டி.பி.தனபாலவின் பேரனான கலாநிதி தனுஸ்க மீகஹவத்தவுக்கும் வழங்கப்பட்டது.

மூத்த ஊடகவியலாளர்கள், பத்திரிகை ஆசிரியர்கள், பத்திரிகைப் பேரவைத் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற)

## கோத்தபாய....

றுத் திரும்பியபோது கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் வைத்துக் கைது செய்யப்படுவார் என்று அரச உயர்மட்டங்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியிருந்தபோதும் அப்படி எதுவும் நடைபெறவில்லை.

நேற்றுக் காலை நாடு திரும்பிய கோத்தபாய ராஜபக்ச எந்தச் சிக்கலுமின்றி கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தின் ஊடாக வெளியேறினார்.

டி.ஏ. ராஜபக்ச மன்றக் கட்டுமானத்தின்போது இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பில் கோத்தபாய கைது செய்யப்படப் போகிறார் எனப் பரவலாக அரச உயர்மட்டங்களிலிருந்து தகவல் வெளியாகியிருந்தது.

இதேவேளை, கோத்தபாயவைக் கைது செய்யும் திட்டம் எதுவும் பொலிஸாரிடம் இருக்கவில்லை என்றும், அவர் கட்டுநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் நேற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார் என்று வெளியான தகவல் தவறானது என்றும், பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். (உ-5,31)

## கணித...

னம் வழங்கவுள்ளார். இவ்வாறு நியமனம் பெற்றுக் கொள்பவர்களில் 207பேர் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழான பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். தமக்கு 400 பேர் தேவை என்று மாகாணக் கல்வி அமைச்சுக் கேட்டிருந்தது.

நியமனம் வழங்கப்பட்டவர்களில் 127 பேர் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள். 7 பேர் ஆங்கில ஆசிரியர்கள். கணிதம், விஞ்ஞானம், தமிழ்ப் பாடங்களுக்கு எந்தவொரு ஆசிரியரும் நியமிக்கப்படவில்லை.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள வலயங்களுக்கே 207 ஆசிரியர்களும் நேரடியாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் தமது வலயங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு தமக்கான பாடசாலைகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்று மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்கு 40 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். துணுக்காய், மடு, முல்லைத்தீவு, தீவகக் கல்வி வலயங்களுக்கு அதற்கு அடுத்தபடியான எண்ணிக்கையில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். வடமராட்சி கல்வி வலயத்துக்கு 6பேரும், வலிகாமம் கல்வி வலயத்துக்கு 5பேருமே நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-5,101)

## மகா...

கங்களையும் அவதானித்தேன். அவை அனைத்தும் தலைப்புச் செய்தியாக புதிய அரசமைப்போ அல்லது தற்போதுள்ள அரசமைப்பில் திருத்தங்களோ தேவையில்லை என்று அஸ்கிரிய மற்றும், மல்வத்து பீடங்கள் தீர்மானித்ததாக பீடாதிபதிகளின் படங்களையும் இணைத்துத் தலைப்புச் செய்திகளை வெளியிட்டிருந்தன.

மல்வத்து பீட மகாநாயக்கரின் படம் வெளியாகி இருந்தது. ஆனால் அவரோ நாட்டிலேயே இல்லை. நான் இன்று (நேற்று) அவருடன் அலைபேசியில் பேசினேன். அவர் வெளிநாட்டில் இருக்கிறார் பின்னர் எப்படி அவருடைய படத்தைப் பிரசுரிக்க முடியும்?

புதிய அரசமைப்புத் தேவையில்லை என்ற தலைப்புடனான செய்திகளில் மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகளின் படங்கள் வெளியான போதிலும், அந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக கூறப்படும் கூட்டத்துக்கு அவ்விரு மகாநாயக்கர்களும் சென்றிருக்கவில்லை.

உண்மையைத் திரிபுபடுத்தி உண்மைக்குப் புறம்பான செய்தியே வெளியிடப்பட்டுள்ளது. இது ஏன் என்பது தொடர்பில் பத்திரிகை ஆசிரியர்கள், ஊடக செய்தி பிரதானிகளிடம் உடனடியாக கேட்டுச் சொல்லமுடியுமா? என்று நான் உங்களிடம் (ஊடகவியலாளர்களிடம்) கேட்கின்றேன். எனது கேள்விக்குப் பதிலைப் பெற்றுத் தாருங்கள். அதனையும் இணைத்துச் செய்தியாகப் பிரசுரிக்கு முடியும்.

புதிய அரசமைப்பு இன்றும் உருவாக்கப்பட்டிருக்கவில்லை என்று அரச தலைவரும், நானும் கூறுவதை ஏற்றுக் கொள்வதாக மல்வத்து பீட மகாநாயக்கர் தமது அபிப்பிராயத்தை அண்மையில் மிகத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கின்றார். அவ்வாறான நிலையில் குறித்த கூட்டம் சம்பந்தமான செய்தியை வெளியிடுவது தொடர்பில் யாருடைய படத்தைப் பிரசுரிக்க வேண்டும் என்று சிந்தித்திருக்க வேண்டும்.

இந்தக் கூட்டத்துக்கு கண்டி தியவதன நிலமேயினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தால் மகாநாயக்கர்களின் படங்களுக்கு பதிலாக நிலமேயின் ஒளிப்படமே செய்தியில் பிரசுரிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இந்தக் கூட்டத்தை மையப்படுத்தி மக்களைத் தவறாக வழி நடத்தவேண்டாம். மகாநாயக்கர்கள் ஆதரவாகவோ அல்லது எதிராகவோ கருத்துக் கூறுவார்களாக இருந்தால் அதைச் செய்தியாக வெளியிடுங்கள். அதற்கு நாங்கள் தடைவிதிக்கப்போவதில்லை. இல்லாததொன்றைச் செய்தியாக்க வேண்டாம் என்று நான் அனைத்து ஊடகங்களையும் கேட்டுக்கொள்கின்றேன்.

அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடங்களின் மகாநாயக்கர்கள் கூட்டத்தில் பங்கேற்றிருக்காத நிலையில் அவர்களது படங்களை மையமாகக் கொண்டு தலைப்புச் செய்தியாக வெளியிட்டுள்ளீர்கள். நான் தெரிவிக்கும் பதில் கருத்துக்களுக்கும் அந்தளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டு தலைப்புச் செய்தியாக வெளியிடப்படுமா? எனது கருத்துக்களை தலைப்புச் செய்தியாக வெளியிடுவதாக உறுதிமொழியொன்று தருவீர்களா?

அரசுக்கு மக்கள் ஆணையொன்றை வழங்கியிருக்கின்றார்கள். அந்த ஆணையை நிறைவேற்ற வேண்டாம் என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (சிங்கள, ஆங்கில ஊடங்களின் பெயர்களை குறிப்பிட்டு) இந்த விளையாட்டுக்களை நடத்த வேண்டாம்.

புதிய அரசமைப்புக்கான வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை தொடர்பான நடவடிக்கைகளை எப்படி முன்னெடுத்துச் செல்வது என்பது தொடர்பில் எதிர்வரும் வாரத்தில் விவாதமொன்று நடைபெறவிருக்கின்றது. அதன்போது நாம் வெளிவந்துள்ள இடைக்கால அறிக்கை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் கருத்துக்களை பகிந்துகொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம் - என்றார். (உ-5,31)

## மாணவி...

நேற்று வழங்கி வைத்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவின் அப்போதைய பணிப்பாளராக இருந்த சுதத் நாகஹமுல்ல, விசாரணை களை நெறிப்படுத்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சர் பீ.ஏ.திசரா மற்றும் தலைமை விசாரணை அதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிசாந்த சில்வா, பொலிஸ் பரிசோதகர் இளங்கசிங்க உள்ளிட்ட 33 பொலிஸ் அதிகாரிகளுக்கு 13 லட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபா பணப் பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டது. (உ-5,31)

## தேரர்களை...

புதிய அரசமைப்புத் தேவையில்லை. இந்த முயற்சிகளை உடனடியாக நிறுத்தவும். தற்போது இருக்கின்ற அரசமைப்பிலும் திருத்தங்களும் தேவையில்லை. 1978ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட தற்போது நடைமுறையில் இருக்கின்ற அரசமைப்பே அப்படியே தொடரட்டும் என்று மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் இணைந்த காரக மகா சங்க சபா உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர். அவர்கள் தமது முடிவை நேற்று முன்தினம் கூடி ஆராய்ந்த பின்னர் வெளியிட்டிருந்தனர்.

இவ்வாறானதொரு நிலையிலேயே அரச தலைவர் மைத்திரிபால நேற்று இரவு நடைபெற்ற நிகழ்வில் மேற்கண்டவாறு கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்கில் ஒரு பகுதி மக்கள் தென்பகுதி மக்களைத் துவேசத்துடன் பார்க்கின்றனர். தெற்கில் உள்ள ஒரு பகுதி மக்களும் வடக்கு மக்களை துவேசத்துடன் பார்க்கின்றனர். இந்த முரண்பாடு களையப்படவேண்டும். இன்று (நேற்று) வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம், யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களைச் சந்தித்தேன். அவர்கள் முன்வைத்த கோரிக்கை முக்கியத்துவமானது. பேசுவதன் ஊடாகத் தீர்க்கலாம் என்று கூறினேன். தற்போது வெளிவந்துள்ள இடைக்கால அறிக்கை புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்கான ஆரம்பக்கட்ட ஆவணம். அதனைப் பிரச்சினைக்குரியதாக்குவதில் அர்த்தமில்லை. நான் வெளிநாட்டுக்குப் பணிந்து அரசமைப்பைத் தயாரிப்பதாக சிலர் குற்றம் சுமத்துகின்றனர். செல்வா - பண்டாஒப்பந்தம், செல்வா-டட்லி ஒப்பந்தங்கள் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இவை எல்லாம் வெளிநாட்டு அழுத்தத்துக்கு அடிபணிந்தா மேற்கொள்ளப்பட்டன என்பதை இங்கே கேட்க விரும்புகின்றேன் - என்றார். (உ-5)

## 2ஆவது...

மீட்கபபட்டி ருந்தார். தீபாவளித் தினமன்று முல்லைத்தீவு நகர சுற்றுலாக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் 7 இளைஞர்கள் குளிக்கச் சென்ற சமயம் இந்த அசம்பாவிதம் இடம்பெற்றது.

தகவல் அறிந்து அங்கிருந்தவர்கள் உடனடியாகத் தேடுதல் நடத்தினர். கடற்றொழிலாளர்கள் துரிதாகச் செயற்பட்டபோதும் மூழ்கிய இளைஞர்களைக் கண்டுபிடிக்கமுடியவில்லை. சம்பவம் நடந்து இரண்டரை மணித்தியாலங்களின் பின்னர் வந்த கடற்படையினரும் ஒரு படகில் தேடுதல் நடத்தினர்.

கடற்றொழிலாளர்கள் கரை வலை விரித்து இழுத்துப் பார்த்தனர். அது[illegible]வில்லை. திருக்கை வலை எனப்படும் ஆழச் செல்லும் வலையைப் பயன்படுத்தி அந்தப் பகுதியில் நான்கு படகுகளில் அவர்கள் தேடினர். அதில் அன்டனி கிளேட்டஸின் சடலம் அகப்பட்டது. மற்றையவரைத் தேடும் பணிகள் நேற்றுமுன்தினம் இரவும் தொடர்ந்தன. ஆனால் பயன் கிடைக்கவில்லை.

இன்று அதிகாலை இரண்டாவது நபரும் உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். இந்தச் சம்பவத்தால் முல்லைத்தீவு மாவட்டமே சோகமாயமாகியுள்ளது.

உயிரிழந்த நண்பர்கள் இருவரதும் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை இடம்பெற்றன. முல்லைத்தீவு புனித இராயப்பர் தேவாலயத்தில் இருவரது உடல்களும் வைக்கப்பட்டு அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. நூற்றுக்கணக்கான மக்களின் இறுதி அஞ்சலியுடன் வழிபாட்டு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. உயிரிழந்த மாணவர்கள் இருவரும் கல்வி கற்ற பாடசாலை மாணவர்களின் இசை அணிவகுப்பு முன்னே செல்ல குடும்பத்தினர், நண்பர்கள் பிரதேச மக்கள் இணைந்து மாணவர்களை வழி அனுப்பி வைத்தனர். முல்லைத்தீவு சேமக்காலையில் நல்லடக்கம் இடம்பெற்றது. (உ-ற)

## பௌத்த...

30ஆம், 31ஆம் மற்றும் முதலாம் திகதிகளில் இடைக்கால அறிக்கை தொடர்பில் நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த அரசு முடிவு செய்துள்ளது. நேற்றுக் கூடிய வழிநடத்தல் குழுவின் கூட்டம் இதனை இறுதி செய்துள்ளது.

இடைக்கால அறிக்கை செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நாடாளுமன்றில் வெளியிடப்பட்ட பின்னர், வழிநடத்தல் குழு நேற்று முதன்முறையாகக் கூடியது. வழிநடத்தல் குழுவின் உறுப்பின்ர்கள் சகலரும் பங்கேற்றனர். சுமார் அரை மணி நேரம் கலந்துரையாடியுள்ளனர். முன்னரே திட்டமிட்டவாறு இந்த மாதம் 30ஆம், 31ஆம் மற்றும் முதலாம் திகதிகளில் நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாகக் கூடி விவாதம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மூன்று நாள்களும் புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை தொடர்பில் மாத்திரம் விவாதம் நடத்தப்படவுள்ளது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் வெளியான 7 உப குழுக்களின் அறிக்கை தொடர்பில் இந்த மூன்று நாள்களிலும் விவாதம் நடத்தப்படமாட்டாது.

இடைக்கால அறிக்கை தொடர்பில் மாத்திரமே விவாதம் நடத்தவே இந்த மூன்று நாள்களும் போதுமாக இருக்கும் என்பதால், உப குழுக்களின் அறிக்கை மீது பிறிதொரு தினத்தில் விவாதம் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு தலைமை தாங்கி வழிநடத்தல் குழுவில் பங்கேற்கும் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா நேற்றைய வழிநடத்தல் குழுக் கூட்டத்தில், இடைக்கால அறிக்கை தொடர்பில் விரைவில் இணக்கப்பாட்டுக்கு வந்து, புதிய அரசமைப்பு உருவாக்கப் பணியை முன்னெடுப்போம் என்று கூறியுள்ளார்.

வழிநடத்தல் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட மகிந்த அணி உறுப்பினர்களும், புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான முயற்சிகள், விவாதத்துக்கான ஏற்பாடுகள் தொடர்பில் எந்த எதிர்ப்பையும் வெளியிட்டிருக்கவில்லை. (உ-5)

## ஐக்கிய அணி அரையிறுதியில்

யாழ்ப்பாணம், ஒக். 20
திக்கம் மத்திய சனசமூக நிலையம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரில் ஜோசப் வாஸ்நகர் ஐக்கிய அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.
திக்கம் மத்தியின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காலிறுதி ஆட்டத்தில் ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜோசப்வாஸ்நகர் ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் தலா இரண்டு கோல்களைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 4:2 என்ற கோல் கணக்கில் ஐக்கிய அணி வெற்றி பெற்றது. (ம-23)

## கலைமதி அணி இறுதியாட்டத்தில்

யாழ்ப்பாணம், ஒக். 20
மண்றகாடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதியில் வெற்றிபெற்று கலைமதி அணி இறுதிக்குத் தகுதி பெற்றது.
சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் கலைமதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 7:6 என்ற கோல் கணக்கில் கலைமதி அணி வெற்றி பெற்றது. (ம-23)




## கொக்குவில் இந்து அசத்தலான வெற்றி

யாழ்ப்பாணம், ஒக். 20
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக நடத்தும் கூடைப் பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி அபார வெற்றிபெற்றது.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மல்லாவி மத்திய கல்லூரி அணி மோதியது. இதில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 68:37 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஒக். 20
யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை அமரர் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்தமாக நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோன்ஸ் கல்லூரி அணி மோதவுள்ளது. (ம-23)

## தொடரை வென்றது பாகிஸ்தான் அணி

இலங்கைக்கு எதிரான ஒருநாள் தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது பாகிஸ்தான் அணி.
ஐந்து ஆட்டங்களைக் கொண்ட இந்தத் தொடரின் முதலிரு ஆட்டங்களையும் பாகிஸ்தான் வெற்றிபெற்றிருந்த நிலையில் மூன்றாவது ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 208 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக தரங்க 61 ஓட்டங்களையும், திசர பெரேரா 38 ஓட்டங்களையும், திரிமன்னே 28 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் ஹசன் அலி 5 இலக்குகளையும், சடப்கான் 2 இலக்குகளையும், யுனைட்கான், ஹபீஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
பதிலுக்குக் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 42.3 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி பெற்றது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் இமாம் சதம் கடந்து வெற்றிக்கு வித்திட்டார். அவரே ஆட்டநாயகனாகத் தெரிவானார்.
தொடரின் நான்காவது ஆட்டம் இன்று நடைபெறுகிறது. இன்றைய ஆட்டத்திலும், எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ள இறுதி ஆட்டத்திலும் வெற்றி பெற்றாலும் பாகிஸ்தானிடம் இருந்து இலங்கையால் கிண்ணத்தை எடுத்துவிட இயலாது. (ம)




## இளந்தளிர் அணியை வீழ்த்தியது முழங்காவில் விநாயகர் அணி




யாழ்ப்பாணம், ஒக். 20
தீபாவளியை முன்னிட்டு முழங்காவில் விநாயகர் அணிக்கும், கிளிநொச்சி இளந்தளிர் அணிக்கும் இடையில் நடந்த துடுப்பாட்டத்தில் முழங்காவில் விநாயகர் அணி வெற்றிபெற்றது.
முழங்காவில் பொது விளையாட்டு மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது.
முதலில் துடுப்பெடுத்தாடிய முழங்காவில் விநாயகர் அணி நிர்ணயிக்கப்பட்ட 15 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 148 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக தர்சன் 58 ஓட்டங்களையும், கயன் 32 ஓட்டங்களையும், லக்சன் 29 ஓட்டங்களையும் குவித்தனர்.
90 பந்துகளில் 149 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இளந்தளிர் அணி நிர்ணயிக்கப்பட்ட 15 பந்துப்பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றதை அடுத்து 58 ஓட்டங்களால் வெற்றிபெற்றது முழங்காவில் விநாயகர் அணி. (ம-ரி2)

## அளவெட்டி மத்தி வென்றது கிண்ணம்



யாழ்ப்பாணம், ஒக். 20
சங்கானை கிங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்திய துடுப்பாட்டத் தொடரில் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.
சங்கானை கிங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இந்த இறுதியாட்டம் நடைபெற்றது.
அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொட்டடி இளங்கதிர் விளையாட்டுக் கழகம் மோதியது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொட்டடி இளங்கதிர் விளையாட்டு கழகம் நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 43 ஓட்டங்களைப் பெற்றது.
பந்துவீச்சில் தயாளன், அஜித் இருவரும் தலா ஒரு இலக்கைக் கைப்பற்றினர்.
பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழக அணி 4.2 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் இலக்கை அடைந்து வெற்றிபெற்றது. அதிகபட்சமாக அஜித் 24 ஓட்டங்களைப் பெற்றார். (ம-108)



# குல்தீப். சாகல் கெட்ட கனவுகள்

## சொல்கிறார் வில்லியம்சன்

"இந்திய அணியின் சுழற்பந்து வீச்சாளர்கள் குல்தீப் யாதவ், யுஸ்வேந்திர சாகல் இருவரையும் சமாளிப்பது மிகவும் கடினமான சவாலாக இருக்கும். இவர்கள் இருவரினதும் பந்துவீச்சு கெட்ட கனவாக இருக்கும்" என்று நியூசிலாந்து அணியின் தலைவர் வில்லியம்சன் தெரிவித்தார்.

நியூசிலாந்து அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகிறது. இந்தத் தொடர் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே வில்லியம்சன் இவ்வாறு தெரிவித்தார்.


"இந்திய சுழற்பந்து வீச்சாளர்கள் குல்தீப் யாதவும், யுஸ்வேந்திர சாகலும் திறமையான வீரர்கள். ஐ.பி.எல். தொடரில் சிறப்பாகச் செயற்பட்டு அதன் மூலம் இந்திய அணிக்குள் நுழைந்துள்ளனர். இருவரும் அண்மைக்காலமாக வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகிறார்கள். அவர்களைச் சமாளிப்பது மிகவும் கடினமான சவால் என்பதை அறிவோம். ஆனால் அதற்குத் தயாராக இருக்கிறோம். இங்குள்ள சூழலுக்கும், வித்தியாசமான ஆடுகளங்களுக்கும் ஏற்ப அணுகுமுறையை மாற்றிக்கொள்வது மிகவும் முக்கியமாகும்" என வில்லியம்சன் மேலும் தெரிவித்தார். (ம)



பாடசாலைகளுக்கு இடையிலான நடப்பு வருடத் தடகளத் தொடரில் 14 வயது ஆண்கள் பிரிவு நீளம் பாய்தலில் 6.08 மீற்றர் தூரத்துக்குப் பாய்ந்து தங்கப்பதக்கத்தைச் சுவீகரித்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மாணவன் செந்தூரன் செந்தீஸ்க்கு பாடசாலைச் சமூகத்தினால் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. (ம-23)

# அன்று கபில்தேவ் இன்று பாண்டியா

## இயன் சப்பல் பெருமிதம்



"அன்று கபில்தேவ் இந்திய அணிக்கு எவ்வாறான பங்களிப்பை வழங்கினாரோ, அவ்வாறான பங்களிப்பை இன்று பாண்டியா வழங்குகிறார்" என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் இயன் சப்பல்.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. ஒருநாள் தொடரை இந்திய அணி 4:1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. ரி-20 தொடர் 1:1 என்று சமநிலையானது. இந்த நிலையில் தொடர் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே இயன் சப்பல் இவ்வாறு தெரிவித்தார்.

"கபில்தேவ் ஓய்வுபெற்றபிறகு வேகப்பந்துவீச்சு செய்யக்கூடிய சகலதுறை வீரர் இல்லாமல் இந்திய அணி ஏங்கி வந்தது. அந்த இடத்துக்கு பாண்டியா உருவாகி வருகிறார். பாண்டியா அடுத்த கபில்தேவ் ஆவதற்கு அதிகமான சாத்தியங்கள் இருக்கின்றன. ஆட்டத்தை மாற்றக் கூடிய சிறந்த சகலதுறை வீரராக அவர் இருக்கிறார். அவரது வருகையால் இந்திய டெஸ்ட் அணி வலிமையாக இருக்கிறது. எல்லா விதமான ஆடுகளங்களிலும் பாண்டியாவின் பங்களிப்பு இருக்கும். சகல விதமான ஆடுகளங்களிலும் விளையாடக்கூடியவர் என்பதால் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அவர் இந்திய அணியின் தூணாக இருப்பார்" என்று இயன்சப்பல் மேலும் தெரிவித்தார். (ம)



# றொனால்டோவால் தப்பித்தது மட்ரிட்

ஐரோப்பியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் றொனால்டோ பதிவு செய்த கோலால் தோல்வியைத் தவிர்த்தது ரியல் மட்ரிட்.

ரியல்மட்ரிட் அணியை எதிர்த்து ஹொட்ஸ்பர் அணி மோதியது. 28ஆவது நிமிடத்தில் ஹொட்ஸ்பரின் சார்பாக முதல் கோல் பதிவானது. இந்த ஆட்டத்தில் ரியல் மட்ரிட் இலகுவாக வெற்றிபெறும் என்று எதிர்பார்க்கையில் ஹொட்ஸ்பரின் சார்பாகப் பதிவான முதலாவது கோல் மட்ரிட்டிக்குப் பேரிடியை ஏற்படுத்தியது. ஆட்டத்தின் 43ஆவது நிமிடத்தில் றொனால்டோ ஒரு கோலைப் பதிவுசெய்ய முதல் பாதியின் முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்றிருந்தன. இரண்டாவது பாதியில் மாற்றங்கள் ஏற்படவில்லை. முடிவில் ஆட்டம் சமநிலையானது. (ம)

# மே.தீவுகள் சிம்பாப்வே தொடர் நாளை

மேற்கிந்தியத் தீவுகள் சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பமாகிறது. மேற்கிந்தியத் தீவுகள் அணி சிம்பாப்வேக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. முதலாவது ஆட்டம் இலங்கை நேரப்படி நாளை பிற்பகல் ஒரு மணிக்கு ஆரம்பமாகும். இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளது. (ம)



பாடசாலைகளுக்கு இடையிலான நடப்பு வருடப் பளுதூக்கல் போட்டியில் தேசியத்தில் சம்பியனான யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி வீரர்களுக்கு கல்லூரிச் சமூகத்தால் அண்மையில் சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது. (ம-23)

# ஆஷஸ் தொடர் போர் போன்றது

## வோர்ணர் தெரிவிப்பு

"இங்கிலாந்துக்கு எதிரான ஆஷஸ் தொடர் போர் போன்றது" என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் டேவிட் வோர்ணர்.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் தொடர் இன்னும் சில வாரங்களில் ஆரம்பமாகவுள்ள நிலையில், தொடர் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே வோர்ணர் இவ்வாறு தெரிவித்தார்.

"வரலாறு, பெருமை ஆகியவைதான் இந்தத் தொடரில் முக்கியம், எனவே இதனைக் காப்பாற்றக் களமிறங்கும்போது அது போர்தான். எதிரணி வீரர்களின் (இங்கிலாந்து) கண்களை கூர்ந்து நோக்கி, அவரை நான் எப்படி வெறுக்க வேண்டும், அவரை எப்படி வீழ்த்த வேண்டும் என்பதைப் பழக வேண்டும்" என வோர்ணர் மேலும் தெரிவித்தார். (ம)

# பற்றிக்ஸ் வென்றது

யாழ்ப்பாணம், ஒக். 20

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபை அமரர் பொன் விபுலானந்தன் ஞாப கார்த்தமாக நடத்தும் கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட் டமொன்றில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கூடைப்பந் தாட்டத் திடலில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதியது. 52:50 என்ற புள்ளிகளின் அடிப்படையில் யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது. (ம-23)



**வேலைவாய்ப்பு**
பாடசாலை முன்பாக புத்தகங்கள் விற்பனை செய்யக்கூடியவர் தேவை.
T.P:- 077 217 4741

**கணினி ஜாதகம் கணித்தல்**
கணினி மூலம் உங்களது வாழ்க்கைப் பயணம் கணித்து புத்தகமாகத் தரப்படும்.
076 475 9184, 021 223 2222

**K.M.M திருமணசேவை**
உள்ளூர், வெளிநாட்டு மணமக்கள் எங்களிடம் இருக்கிறது. உடனடியாக தொடர்பு கொள்ளவும்.
**முக்கிய குறிப்பு :**நேரில் வரவும்
021 223 2222/ 076 835 1932

**வீடு வாடகைக்குத் தேவை.**
3 or 4 bed rooms உடன் சகல வசதிகளுடன், கார் Park முக்கியம்.
இடம்: நல்லூர் சூழவுள்ள இடங்கள்.
தொடர்பு:
S.Sham Mob:076 8466129

Free Skill Development Center
இலவச திறன் விருத்தி மையம்
Little Aid
CHARITY NR 1129695
United Kingdom
இலவசக் கற்கை நெறிகள்
இலவச கணனி கற்கை நெறி
Diploma in Computer Application (DCP)
Diploma in Computer Hard Ware
இலவச தையற்கலை வகுப்புக்கள்
Diploma in Cutting & Sewing
இலவச கையேடுகள் மற்றும் விரிவான பாடத்திட்டம்
பயிற்சி காலம் - 3 மாதங்கள்
பிரித்தானியாவிலிருந்து சான்றிதழ்கள்
ஆரம்பம் 22.10.2017
ஞாயிறு காலை 10.30
இடம் : லிட்டில் எய்ட் இலவச திறன் விருத்தி மையம் கல்வி பண்பாட்டு அபிவிருத்தி மன்றம் கனகராசா வீதி, திருநகர், கிளிநொச்சி
மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும்
0772 999 699

*பணிநிலை வேண்டுகை*
*அலுவலக உதவியாளர் - பெண்*
கணனியில் முன் அனுபவம்
0772 999 699

**போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்**
திட்டமிடல் சேவை
திறந்த பரீட்சைக்கு
பிரதி ஞாயிறு
9.00 → 2.00
மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சைக்கு
பிரதி ஞாயிறு
9.30 → 2.30
EB Exam
வகுப்புகளும் நடைபெறுகின்றன
தொடர்புகளுக்கு
076 688 3394
D.M.I
(வெலிங்டன் சந்தி Honda காட்சியறை முன்)

**ஸ்ரீ பத்திரகாளிஅம்மன்**
ஆலயத்தின் கட்டட வளர்ச்சிக்காக நடாத்தப்பட்ட அதிர்ஷ்ட இலாபச்சீட்டின் வெற்றி முடிவுகள்.

| | இல |
|---|---|
| 01 ஆம் பரிசு | 473 |
| 02 ஆம் பரிசு | 1262 |
| 03 ஆம் பரிசு | 2774 |


ஆறுதல் பரிசு

| | |
|---|---|
| 01. 2284 | 02. 1124 |
| 03. 460 | 04. 2471 |
| 05. 189 | 06. 2298 |
| 07. 101 | 08. 2399 |
| 09. 912 | 10. 583 |

தலைவர், செயலாளர், பொருளாளர்,
ஸ்ரீபத்திரகாளிஅம்மன் ஆலயம்
ஐயனார்புரம் வன்னேரிக்குளம், கிளிநொச்சி.
T. P: 077 634 5578, 077 662 9683

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**
MA Supra பரீட்சை
Sat, Sun-8.30-1.30
ஆரம்பம்
21.10.2017 (Sat)
அதிபர் EB பரீட்சை
Sat, Sun-2.00-6.00
Note : மேற்படி இரு பரீட்சைகளுக்குரிய வகுப்புக்களும் துறைசார்ந்த விரிவுரையாளர்களினால் நடத்தப்படும்.
**நாவலர்**
கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
T.P. 077 469 6695

## மரண அறிவித்தல்



**நடராசா மனோராஜன் (ராசன்)**

பழைய வீதி கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா மனோராஜன் (18.10.2017) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் மனோன்மணி தம்பதியரின் மூத்தபுதல்வனும் காலஞ்சென்ற நடராசா மற்றும் லீலாவதி தம்பதியரின் அன்புமருமகனும் கலைமதியின் அன்புக்கணவரும் யதுசனின் பாசமிகு தந்தையும் மனோராணி, வசந்தி காலஞ்சென்ற சாந்தி மற்றும் சுமதி, ரவிச்சந்திரன், சுதன், கவிதா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கலைச்செல்வன், கலைச்செல்வி, பாஸ்கரன், சிறீதரன், பவிதரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.10.2017) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் ஏற்றுக்கொள்ளவும்.

**பழைய வீதி, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.**
**077 456 0604, 077 117 8225**
**தகவல்: குடும்பத்தினர்.**

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு
உதயன் நடத்தும்



**சிறுவர் மகிழ்களம் 2017**

காலம் : 22.10.2017 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 8.00 மணி
இடம் : சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மைதானம்

**தலைமை**
கௌரவ ஈ.சரவணபவன் (நா.உ)
(தலைவர், உதயன் குழுமம்)

**முதன்மை அதிதி**
உயர்திரு வே.சிவஞானசோதி
(செயலாளர், தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு)

**சிறப்பு அதிதிகள்**
உயர்திரு R. ரவீந்திரன்
செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு - வடக்கு மாகாணம்.
உயர்திரு நா.வேதநாயகன்
அரச அதிபர், யாழ் மாவட்டம்.
கௌரவ கே.சயந்தன்
உறுப்பினர், வடக்கு மாகாணசபை.

**கௌரவ அதிதிகள்**
உயர்திரு கு. சதாசிவமூர்த்தி
முன்னாள் உபதவிசாளர், சாவகச்சேரி நகரசபை
உயர்திரு ஸ்ரீ.விமலேஸ்வரி
ஓய்வுபெற்ற வடமாகாணப் பணிப்பாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்
உயர்திரு ந.சிவபாலன்
தலைவர், சாவகச்சேரி வர்த்தக சங்கம்
உயர்திரு நா.கந்ததாசன்
பிரதிக்கல்விப் பணிப்பாளர், கல்வி முகாமைத்துவம்.
உயர்திரு அ.சரோசாதேவி
உதவிக்கல்விப் பணிப்பாளர் - முன்பள்ளி
உயர்திரு ந.ஜெயக்குமாரன்
அதிபர் - சா/டிறிபேர்க் கல்லூரி.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
உதயன்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.10.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.